
கல்கி
KALKI 21-9-1958
30 நயா பைசா


Breeze
ப்ரீஸ்
மேனியின் அழகையும் ஆரோக்கியத்தையும் ஓங்கச்செய்யும் சாதனம்!
ஆரோக்கியத்துடன் மிளிரும் மேனியே பெண்மை யழகின் இலட்சணம். மணக்கமழும் ப்ரீஸ் சோப்பில் ஆக்டமர் அடங்கியுள்ளது; சருமக் களங்கங்களுக்குக் காரணமான கிருமிகளிடமிருந்து உங்கள் சருமத்தை விடுவிக்கும் பொருளே ஆக்டமர். மேனி யழகின் பராமரிப்பையும், புதுமலர்ச்சி யையும் விரும்புவோர் தேர்ந்தெடுக்கும் சோப் ப்ரீஸ்தான்.
ப்ரீஸ் டாய்லெட் சோப்
Breeze
சரும நலனுக்கான ஆக்டமர் கலந்துள்ள சோப்
BZ. 8-50 TM

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஆரணி ஸில்க் ஹவுஸ்



மலர் 18 | இதழ் 8

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விளம்பி௵ புரட்டாசி 5உ

புது அத்தியாயம்

பாகிஸ்தான் பிரதமரும் பாரதப் பிரதமரும் நிகழ்த்திய பேச்சுக்கள் சுமுகமான சூழ்நிலையில் நிகழ்ந்தன. இரு பிரதமர்களும் பிரத்யக்ஷ நிலைமையை உணர்ந்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் சமரச முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பாகிஸ்தான் பிரதமர் இந்த நாட்டை விட்டுப் போகும்போது மனத் திருப்தியுடன் சென்றிருக்கிறார்.

இப்படியெல்லாம் செய்திகள் படித்தபோது நாம் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

பாகிஸ்தான் ஏற்பட்ட நாளிலிருந்து, இது வரை பாரதம் என்றால் சீறி வந்தது. எந்த விஷயமாயினும் பாரதம் என்ன சொல்கிறதோ அதற்கு நேர்மாறாகத் தான், தான் பேச வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தது. அப்படிப்பட்ட பாகிஸ்தான் இப்பொழுது இவ்வளவு நேச பாவத்துடன் நடந்து கொண்டதைப் பாரத மக்கள் அனைவரும் முழுமனத்துடன் வரவேற்க வேண்டும்.

தர்ம நியாயமாக நடந்துகொண்டால் உலகில் யாரும் அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை. நியாயம் குன்றி, நேர்மை தவறி நடப்பவர்களை உலகம் கவனிக்கிறது.

இதே முறையில்தான் நல்ல காரியங்கள் நடந்து விட்டால் பத்திரிகைகள் போதிய அளவு கவனிப்பதில்லை. எதிர்பார்த்ததுதானே என்று இருந்து விடுகின்றன. ஆனால் மனக் கசப்பு விளைவிக்கும் வகையில் ஏதாகிலும் நிகழ்ச்சிகள் நடந்து விட்டால் அவை பத்திரிகைகளில் பலமாக அடிபடுகின்றன. பக்கம் பூராவும் நிரப்பும் தலைப்புக்கள் கொட்டை எழுத்தில் தரப்படுகின்றன. பத்தி பத்தியாகத் தலையங்கங்கள் எழுதப் படுகின்றன.

இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் உலகில் தப்பித் தவறி ஒரு நல்ல காரியம் நடந்திருக்கிறது. ஓயாமல் பாரதத்தைத் திட்டிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் இவ்வளவு நல்ல முறையில் நடந்துகொண்டு, நல்ல முடிவு செய்து கொண்டு போனதைப் பாரத நாட்டுப் பத்திரிகைகள் போதிய அளவு அதன் முக்கியத்தை உணரவில்லை என்றே தோன்றுகிறது.

பாகிஸ்தானிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களும் தீவிர வெறி பிடித்த மக்களும் பாரதத்துடன் எப்பொழுதும் தீவிர விரோதமே பாராட்டி வரவேண்டும் என்று விரும்புகின்றனர். பாரதத்தை ஓயாமல் திட்டுவதே பாகிஸ்தானில் அரசியல் செல்வாக்கு பெறக் குறுக்கு வழி என்ற நியதி நிலவி வருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் 'பாரத நாட்டுக்கு வந்து பாரதப் பிரதமருடன் பேச்சு வார்த்தைகள் நிகழ்த்தியதில் ஒருவித உடன்பாடும் ஏற்படவில்லை' என்று சொல்வதே அவருக்குச் செல்வாக்கு பெற மார்க்கம். நிலைமை இப்படியிருக்க, 'பாரதப் பிரதமருடன் உடன்பாடு செய்து கொண்டேன்; பாரதப் பிரதமர் அன்புடன் என்னை நடத்தினார்; பாரத மக்கள் நல்ல மரியாதை செய்தனர்' என்று உண்மையைக் கூறுவது எவ்வளவு மகத்தான தைரியம் என்பதை உணர வேண்டும்! இதற்கே நாம் பாகிஸ்தான் பிரதமர் பெரோஸ்கான் நூன் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

எல்லைப் பிரச்னை போல் இன்னும் எத்தனையோ பிரச்னைகள் நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கின்றன. அவையெல்லாம் இம்மாதிரிய சுமுகமான பேச்சு வார்த்

தைகள் மூலம் தீர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும். அதற்கு நல்ல சகுனம் மாதிரியாகவே சமீபத்தில் நடைபெற்ற நூன்-நேரு சந்திப்பு அமைந்துள்ளது.

இந்தியாவிலுமகூட, சமூகமாக நடந்ததைக் கண்டு, திருப்தியடையாமல் கோபங் கொள்ளும் தீரர்களும் சிலருண்டு. முக்கியமாக, முஸ்லிம் என்றாலே பிடிக்காத ஒரு கோஷ்டி உண்டு. இவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பொறுப்பு மனப்பான்மை கொண்ட எவரும் இந்திய பாகிஸ்தான் நட்பைத்தான் கோருவார்கள்.

இலங்கைத் தமிழர்கள்


இலங்கைப் பிரஜைகளாகிய தமிழர்கள் பெரும் கொடுமைகளுக்கு உள்ளாகி யிருக்கின்றனர். வீடு வாசல் விட்டு ஓடும் பரிதாப நிலைக்கு உள்ளாகி யிருக்கின்றனர். அவர்கள் அடைந்துள்ள உயிர் நஷ்டத்தோடு உயிரோடிருப்பவர்கள் அடைந்துள்ள பொருள் நஷ்டமும் கணக்குச் சொல்லி முடியாது. இப்படிப் பலவிதங்களில் நஷ்டப்பட்டவர்களுக்கு இலங்கை சர்க்கார் ஈடுசெய்ய வேண்டியது கடமை. இந்தியாவிலிருந்து சென்ற தமிழர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது இலங்கை சர்க்காரின் கடமையாகும். பிரஜா உரிமை கொடுக்க வில்லை என்று உயிருக்கும் சொத்துக்கும் நஷ்டம் ஏற்பட்டாலும் நம் பொறுப்பல்ல என்று இலங்கை சர்க்கார் சொல்லுவது தர்மமாவது நியாயமாவது ஆகாது.

இந்தப் பலாத்காரக் கொடுமைப் புண் ஆறுவதற்கு உரிய காலமாகவில்லை, அதற்குள் இலங்கைப் பிரஜாவுரிமை கோரிப் போட்ட இந்திய மனுக்களில் நான்கு லட்சத்துக்கு மேல் நிராகரிக்கப்பட்டு விட்டன என்று செய்தி வந்திருக்கிறது.

இவை யிரண்டும் ஒரு விஷயத்தை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

இலங்கையில் பரமபரை பரமபரையாக வாழ்ந்து வரும் தமிழர்களுக்கும், இலங்கையில் தொழில் நிமித்தமும், வியாபார நிமித்தமும் இலங்கைச் சட்டங்களுக்கு உட்பட்டுச் சென்று குடியேறி, இலங்கையைத் தாயக

நிகழ்ச்சிச் சித்திரம்



மாகக் கொள்ள விரும்புபவர்களுக்கும் இடம் தர மறுக்கிறார்கள் என்பதே இதன் உண்மை.


இலங்கையில் உள்ள இரு சமூகங்களும் ஒன்று சேர்ந்து நியாயத்துக்குப் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த இரு சமூகங்களுக்கிடையில் முன்னம் ஏதாகி லும் மனக்கசப்பு இருந்திருந்தால், அவற்றை உள்ளத்திலிருந்து அறவே அகற்றி விட்டு, தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு ஒருமனப்பட்டுப் போராட வேண்டும்.

இதை விட்டு, இலங்கையிலிருக்கப் பிரஜா வுரிமைதர மறுக்கிறார்கள்என்பதற்காகத்தாய் நாட்டுக்குத் திரும்பிவிடுவோம் என்று இலங் கையில் பெற்ற சொத்து உடைமைகளை நஷ்ட விலைக்கு விற்று விட்டு இந்தியாவுக்குத் திரும்பு வது அறிவுடைமையாகாது. இலங்கையைச் செழிப்படையச் செய்து, அதன் செல்வத்தை வளர்த்த தமிழர்களுக்கு அங்கேயே இருந்து கொண்டு பிரஜாவுரிமை அடைவதற்கு எல்லா வகையிலும் உரிமையுண்டு. பிரஜாவுரிமை மறுக்கப்பட்டாலும், விடாப்பிடியாக, அங் கேயே இருந்து சாத்துவிக முறையில்போராடி உரிமைகளைப் பெற்றேயாக வேண்டும். சாத் துவிகப் போராட்டத்தில் பொருள் நஷ்டம், உயிர் நஷ்டம் ஏற்பட்டாலும் அதற்குத் தயாராகவே இருக்க வேண்டும். உயிருக்கும் நஷ்டத்துக்கும் பயந்தவர்கள் என்றும் எந்தக் காரியத்தையும் சாதித்ததில்லை.

அடுத்தாற்போல் மொழிப் பிரச்னை. இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள மக்கள் சிங்களவர். ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியும் பெரும்பான்மையோரான சிங்கள வர் உணர்ச்சிகளை மதித்துத் தான் நடக்கும். எனினும் ஜனநாயகத்தில் சிறுபான்மையாக உள்ள மக்களின் உரிமைகளும் கவனிக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சியார் காட்டிய தீவிர உணர்ச்சியால் தமிழுக்கு ஓரளவு அந்தஸ்து அளித்து, அதை இலங்கை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். சிங்களத் துடன் தமிழுக்குச் சரிசமமான இடம் இலங்கை சர்க்கார் அளிக்கா விட்டாலும், சிங்கள வெறியர்களிடம் சிக்கிக் கொண் டுள்ள சர்க்கார் இவ்வளவாவது புதுச் சட்டம் செய்ததை வரவேற்க வேண்டியதாகும்.

ஆனால் இப்புதுச் சட்டத்தை எவ்வளவு நியாயமாக அமுல் நடத்துவார்கள் என்ற ஐயம் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படுவது இயற்கை. இது ஏதோ கண்துடைப்பு விவ காரம் என்று இலங்கைத் தமிழர்கள் நினைக்க லாம். நமது அபிப்பிராயத்தில் சிங்கள வெறியர்களுக்காகச் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கி இருந்த போதிலும் புதுச் சட்டத்தை நியாயமாகவே அமுலுக்குக்

விஜி.



கொண்டு வருவார்கள் சிங்கள சர்க்கார் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கை சர்க்கார் இன்று இருக்கும் நிலையில் ஆங்கிலத்தை அகற்றி விட்டு சிங்களத்தையோ, தமிழையோ அமுலுக்குக் கொண்டு வரும் விஷயம் சமீபத்தில் இல்லை. இதற்குப் பல காலம் பிடிக்கும். ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கும் வரையில் இலங்கைத் தமிழர்களுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை.

ஆனாலும் தமிழர்கள் சோம்பி விருந்து விடக் கூடாது. சர்க்காரை நேரிடையாகத் தாக்குவதற்குப் பதில் சர்க்கார் இப்பொழுது அளித்துள்ள சலுகையைக் கைப்பற்ற வேண்டும். நிர்வாகத்தில் தமிழுக்கு அளித்துள்ள இடத்தை ஒப்புக் கொண்டு பூரண முறையில் அமுல் நடத்தும்படி செய்ய வேண்டும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இந்தச் சட்டத்துக்கு மதிப்பளிக்கும்படி செய்ய வேண்டும். சட்டத்தைப் பூரண அமுல் நடத்தாமல் பொய்யாக்கி விட்டால் அதற்கு மேல் நடத்த வேண்டிய போரை நடத்த வேண்டும்.

* * *

தமிழ்ப் பிரதேசத்தைத் தனி மாகாணமாக்கி இலங்கை அரசியல் நிர்ணயத்தை மாற்ற வேண்டும் என்று செய்து வரும் இயக்கத்தை அமைதி முறையில் நடத்த வேண்டும். ஆயினும் வெறுப்பு வளர்க்கும் முறையில் ஓயாமல் சிங்களவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பதே இலங்கைத் தமிழர்களுடைய அன்றாடக் கடமையாகாது. ஒரு நாட்டில் இருபெரு சமூகங்கள் இடைவிடாது போராடிக் கொண்டிருப்பது, இரு சமூகங்களுக்குமே தீங்காக விளையும். இதனால் நாட்டில் தீயசக்திகள் வளர்ந்து அமைதி குலைந்து போகும். ஆகையால் எப்படியாவது இரு சமூகங்களும் ஒன்றுபட்டு, இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதே அறிவுடைமையாகும்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் கிளம்பியிருக்கும் 'நாம் தமிழர்' என்ற கூச்சல் இலங்கையில் சிறிது சலசலப்பை விளைவித்திருக்கிறது. இலங்கைத் தமிழர்களிடையே விளைவித்ததோ இல்லையோ, இலங்கை சர்க்கார் இதைப் பெரிதாக்கி இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். இலங்கை சர்க்கார் இவ் விஷயத்துக்குக் கொடுத்த விளம்பரமே, இலங்கைத் தமிழர்களைச் சற்றுச் சலசலப்படையச் செய்திருக்கிறது. ஆனால் இந்த இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஒரு சிறிதும் ஆதரவில்லை. யாரும் தமிழ்நாட்டில் இதைப் பொருட்படுத்துவதில்லை என்பதையும் உணரவேண்டும். இலங்கைத்தமிழர்களையும் இந்தியத் தமிழர்களையும் ஒன்றுசேர்த்து ஒரு சிலர் புதுக் கட்சி ஏற்படுத்திக் கொள்ளுவதற்காகத் தமிழ்நாட்டில் செய்யும் காரியங்களையோ எழுதும் எழுத்துக்களையோ கவனிக்க வேண்டியதில்லை. யாரும் பெரிதாக மதிக்க வேண்டியதில்லை. இதை இலங்கைத் தமிழர்கள் கவனித்து ஏமாறாமல் இருக்க வேண்டும்.

அருள் வாக்கு

சின்னஞ் சிறு வீடுகள் கட்டிக் கொண்டு ஆடம்பரமில்லாது வாழ வேண்டியது எவ்வளவு நல்லதோ அதே மாதிரி உணவு விஷயங்களிலும் எளிய பழக்கங்களை மேற்கொள்ளுவதுதான் சிறந்தது. அப்படித்தான் நாம் இருந்து வந்திருக்கிறோம். அரிசியையே நாம் முழுவதும் நம்பியிருக்க வேண்டியதில்லை. கேழ்வரகுக் கூழும், களியும்சத்து மிகுந்த புஷ்டியான ஆகாரங்கள். பல இடங்களில் இது இன்னமும் உபயோகத்தில் இருக்கிறது. கேரளாவில் கஞ்சி என்று ஒருவித பானம் சாப்பிடுகிறார்கள். அது அரிசி அதிகம் கிடைக்காத பிரதேசம். அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். மற்றப் பிரதேசங்களிலுள்ளவர்களை விடக் குறைந்த ஆரோக்கியம் உள்ளவர்கள் அல்ல. வைச்வதேவம் முதலிய அனுஷ்டானங்களை மேற்கொண்ட சில குடும்பங்களில் முக்கியமான ஆகுதிகளுக்கு மட்டுமே தனியாக அன்னம் சமைத்துக் கொண்டு, மற்றத் தேவைகளுக்குக் களி, கூழ் போன்ற ஆகாரங்களை வழக்கத்தில் வைத்துக் கொண்டிருந்ததும் உண்டு.

பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளத்தான் ஆகாரம். ருசிக்குத் தக்கபடி சாப்பிடுவது என்பது கூடாது. அப்படியிருந்தால் வாழ்க்கைச் செலவு உயராது. இப்போதெல்லாம் காப்பி, கோகோ முதலிய பானங்கள் சாதாரணமாக எல்லாக் குடும்பங்களிலும் வழக்கத்தில் இருக்கின்றன. இவற்றுக்காக ஆகும் செலவு மட்டுமே ஆகாரத்துக்கு ஆகும் செலவுக்குச் சமானமாக இருக்கும். இவை ஜீவனத்துக்கு அவசியமான தேவை அல்ல. இது ஒரு ஆடம்பர வஸ்துவே. இந்தப் பழக்கத்தை விட்டு விட்டால் ஆரோக்கியத்துக்கு ஹானி வந்துவிடாது. ஆனால் நெடு நாட்களாகப் பழக்கத்தில் வந்து விட்டபடியால் வாழ்க்கையில் இது ஒரு முக்கிய பொருள் போல் ஆகிவிட்டது. சுலபமாக விட முடிகிறதில்லை. இம்மாதிரி பழக்கத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதென்று சொல்லிச் சந்தோஷப்படுவதில் என்ன பயனிருக்க முடியும்?

ஆடைகள் விஷயத்திலும் எளிய பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். மானத்தைக் காத்துக் கொள்ளவும், குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் ஆடைகள் தேவை. நம் நாடு உஷ்ணப் பிரதேசம். மேல் நாடுகளில் குளிர் மிகுந்திருக்கிறது. அதற்கு உகந்த மாதிரி அவர்கள் ஆடை அணிகிறார்கள். நமக்கு அவை தேவையில்லை. சாதாரண உடை போதும். மோட்டா ரகத் துணிகள் நமக்கு நல்லது. சாதாரணமாகக் கைத்தறியில் நெய்யப்படும் துணிமணிகள் குறைந்த செலவில் நமது தேவையைப் பூர்த்தி செய்யவல்லவை. பட்டுப் புடவைகளும் உயர்ந்தரக ஜவுளி தினுசுகளும் படாடோபத்தைக் காட்டுகின்றன. பகட்டுக்காக ஏற்பட்டவை. இவ்வாறு நமது தேவையைக் குறைத்துக் கொண்டால், மெல்லிய ரகத் துணிகளையும் பட்டுகளையும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விடலாம். அதன் மூலம் வர்த்தகம் விரிவடையும். நமது வாழ்க்கைத்தரம் உயராது.

மனிதனுடைய அவசியமான தேவைகள் குறைந்த செலவில் இம்மாதிரி பூர்த்தி செய்யப்பட்டு விட்டால் மக்களைப் பார்த்து அரசாங்கத்தில்கூடச் சிக்கனம் ஏற்பட்டுவிடும். அவர்கள் கவனம்பூராவும் தேசப் பாதுகாப்பை விருத்திசெய்வதிலும் நிலம், நீர், ஆகாயம் முதலிய சம்பந்தமான போக்குவரத்து சாதனங்களை அபிவிருத்தி செய்வதிலும் செல்லும். இவை சம்பந்தமான தொழிற்சாலைகளை அமைத்து அதற்கு வேண்டிய யந்திர சாதனங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் நலனைப் பெருக்க முடியும். தொழில் வளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட தொழில்களில் பரம்பரையாக ஈடுபட்டிருந்தவர்களுக்கு அந்தந்தத் தொழிற்கூடங்களில் வேலை தரவேண்டும். அம்மாதிரி தொழிற்சாலைகளில் அவர்களுக்கு முதல் உரிமையளித்து, அவர்களுக்குப் பிறகுதான் மற்றவர்களுக்கு வேலை தரவேண்டும். வாழ்க்கைத் தரத்தை மட்டும் எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர்த்த வேண்டிய அவசியமே இல்லை. இப்படிச் செய்தால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். தேச வளம் பெருகும். தேசிய வருமானம் உயரும். சுபிக்ஷம் நிலவும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ◇ காஞ்சிகாமகோடி பீடம்

சிக்கனமும் சர்க்காரும்

பணத்துக்குத் தட்டு ஏற்படும்போது சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது சாதாரணமாகவே மக்கள் கையாளும் முறை. அரசாங்கத்துக்கும் இந்த விதி பொருந்தும். வெளிநாட்டிலிருந்து உதவி பெறுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு உள்நாட்டிலேயே நிதி திரட்டுவதும். வரி மூலமாகவும், கடன் பத்திரங்கள் மூலமாகவும் மக்கள் கொடுக்கும் பணத்தை வீணாக விரயம் செய்யாமல் அவசியமான செலவுகளுக்காகவே விநியோகம் செய்ய வேண்டும். நிர்வாகத்தில் சிக்கனம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இதன் அவசியத்தைப் பற்றி பேராசிரியர் எம். ரத்தினசுவாமி பெங்களூரில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் வலியுறுத்தினார். இது சம்பந்தமாகச் சில ரசமான உண்மைகளையும் வெளியிட்டார்.

நமது மத்திய சர்க்காரின் மொத்த வருமானம் ரூபாய் 725 கோடி. அதில் ரூபாய் 190 கோடி சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்துக்காகவும் நிர்வாகத்துக்காகவும் செலவழிகிறது. அதாவது ஏறக்குறைய நாலில் ஒரு பங்கு.

கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் அபிவிருத்தி முதலியவை முக்கியமாக ராஜ்ய அரசாங்கத்தின் நடவடிக்கைகள். தேசப்பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், அயல் வர்த்தகம் முதலிய மத்திய சர்க்காரைச் சேர்ந்த நடவடிக்கைகள். இப்படிப் பாகுபாடு இருந்தும் மத்திய சர்க்காரிலும் ஒரு கல்வி இலாகா, ஒரு சுகாதார இலாகா, ஒரு விவசாய இலாகா, உணவு இலாகா பிரத்தியேகமாக வேலை செய்துதான் வருகின்றன. அதிலும் வெறும் இணைப்பு வேலைகளோ, மேற்பார்வையிடும் வேலைகளோ அல்ல. மற்ற இலாகாக்களுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாது உயர்ந்த செலவும் செய்து கொண்டு நடைபெற்று வருகின்றன.

கல்வி இலாகா மட்டும் ரூபாய் 68·92 லக்ஷம் செலவழிக்கிறது. சுகாதார இலாகாவினால் ரூபாய் 13·54 லக்ஷம் செலவாகிறது. விவசாய இலாகா ரூபாய் 73·59 லக்ஷம் செலவு செய்கிறது. சட்ட இலாகாவுக்காக 19.39 லக்ஷம் செலவாகிறது. சமூக அபிவிருத்திக்காக ஒரு தனி இலாகா வேலை செய்கிறது. அதற்குச் செலவு ரூபாய் 21 லக்ஷம். இந்த இலாகாக்களின் வேலைகள் பெரும்பாலும் ராஜ்ய சர்க்கார்கள் அந்தஸ்தில் நடைபெறுகின்றன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த இலாகாக்களில் நடைபெறும் வேலைகளும், உயர்ந்த முறையிலோ அல்லது பொது மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையிலோ இருப்பதாகச் சொல்ல முடியாது. உணவு பற்றிய நிலைமை ஒன்றே போதும், இந்த இலாகாவின் செயல் திறமையை மதிப்பிடுவதற்கு! சுதந்திரத்துக்கு முன்பு மத்திய சர்க்கார் முழுவதிலும் எவ்வளவு ஊழியர்கள் இருந்தார்களோ அவ்வளவுபேர்கள் இந்த ஒரு இலாகாவில் மட்டும் இப்போது இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய செலவும் அதே அளவில் வளர்ந்திருக்கிறது. கல்வி இலாகாவில் சம்பளம் பெறும் ஊழியர்களுக்குப் போதிய வேலை கொடுப்பதே ஒரு பெரிய காரியமாக இருப்பதாகத் தெரிய வருகிறது. பல்வேறு கமிட்டிகளும், யாதாஸ்துகளும், அறிக்கைகளும், சுற்றறிக்கைகளும்தான் அவர்களைக் காப்பாற்றி வருவதாகச் சொல்லப்படுகிறது.

இதைத் தவிர மத்திய சர்க்காரின் உள்நாட்டு நிர்வாகம் வெளிநாட்டு உறவு முதலியவற்றில் செலவு வரம்பு கடந்து பெருகிக் கொண்டிருக்கிறது. உள்நாட்டு நிர்வாகத்துக்காக ரூபாய் 273 லக்ஷம் செலவழிக்கிறது. வெளி நாட்டு இலாகா ரூபாய் 8 கோடி செலவு செய்கிறது. நமது திட்டக் கமிஷன் ஆபீஸ் செலவு மட்டும் வருஷத்துக்கு ரூபாய் 70 லக்ஷம் செலவு செய்கிறது.

மத்திய சர்க்கார் விஷயம்தான் இம்மாதிரி என்று எண்ண வேண்டாம். நமது ராஜ்ய சர்க்கார்களும் விரலுக்கேற்ற வீக்கம் என்றபடி, அவர்களாலான வரையில் நிர்வாகச் செலவை அதிகரித்துத்தான் வருகிறார்கள். சில உதாரணங்கள் கொடுக்கலாம். நமது சென்னை ராஜ்யத்தில் மோட்டார் வரி மூலம் கிடைக்கும் 3 கோடி ரூபாயை வசூல் செய்ய ரூபாய் 76 லக்ஷம் செலவு செய்கிறது. அதாவது நாலில் ஒருபாகம். 50 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள தேசிய நல அபிவிருத்திக்காக 37 லக்ஷம் ரூபாய் நிர்வாகத்துக்கு மட்டும் செலவாகிறது. தேசிய விஸ்தரிப்பு நடவடிக்கையில் 44 லக்ஷம் செலவு செய்து 66 லக்ஷம் மதிப்பிட்ட நலனைத் தேடித் தருகிறது. இதையெல்லாம் கவனிக்குங்கால் அபிவிருத்தியும் விஸ்தரிப்பும் பொது மக்களுக்காகத்தானா, அரசாங்க நிர்வாகத்துக்கா என்று வியக்க வேண்டியிருக்கிறது.

அவ்வப்போது இந்த இலாகாக்களின் நடவடிக்கைகள் பரிசீலனைக்கு வரும்போது சிக்கனத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசத்தான் படுகிறது. குறிப்பாக, கணக்குப் பரிசீலனைக் கமிட்டியின் யாதாஸ்துகள் வெளியிடப்படும் சமயத்திலும் ''பட்ஜெட்'' விவாதங்களின் போதும் காரசாரமாக மக்களின் பிரதிநிதிகள் சீறுவார்கள். வேகமாக அபிவிருத்தியடைந்து வரும்நாட்டுப்பொருளாதாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரித்துவரும் என்பது உண்மையே ஆயினும் இதைச் சுட்டிக்காட்டி இதற்குச் சமாதானம் கூறிவிட முடியாது. அவசியமில்லாத இலாகாக்களை ஒன்றாக இணைத்தும், அவசியமில்லாத வேலைகளைக் குறைத்தும், சிக்கன முறைகளை மேற்கொள்ளுவது மத்திய சர்க்காருக்கு மாத்திரம் அல்ல ராஜ்ய சர்க்கார்களுக்கும் அவசியம். நாட்டின் தொழிலில் தலையிட்டுப் புதுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு, செலவினங்கள் அதிகரித்துப் புது வரிகளைப் போடுவதைவிட, நிர்வாகத்திலேயே சிக்கன முறையைப் புகுத்திக் கண்காணிப்புடனிருந்தால் மக்களின் வரிப் பணம் சீரான முறையில் செலவு செய்யப் படுகிறது என்கிற திருப்தி ஏற்படுவதுமன்றி வரிச் சுமையையும் ஓரளவுக்குக் குறைக்கவும் முடியும்.



48

செல்வம் இருந்தால்தான் ஒப்புரவு என்றில்லை. பணம் எடுத்துக் கொடுக்க இயலாதபோதிலும் வேறு பல வழிகளில் ஊருக்கும் சமூகத்துக்கும் சகாயம் செய்யலாம். வாழ்க்கைக் கடமைகளை உணர்ந்தவர்கள் ஒப்புரவு செய்தலை வறுமையினால் விட்டு விட மாட்டார்கள்.

எந்த நிலையிலும் ஒருவன் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. நிலைமை மாறினால் கடமைகள் மாறுமே ஒழியச் சமூகத்துக்கு ஒருவன் கட்டுப்பட்டிருக்கும் இணைப்பு அறுந்து போகாது. அந்த அந்தச் செல்வ நிலையில் எந்த எந்தக் கடமைகள் ஏற்படுகின்றனவோ அவற்றைச் செய்து கொண்டே போக வேண்டும். "என் செல்வம் மறைந்து விட்டது. இனிச் சமூகம் என்னிடம் ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை" என்று பேச இயலாது.

இடன்இல் பருவத்தும்
ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி
யவர்.

இடன்—செல்வம். ஒல்கார்—தளரமாட்டார்கள். கடன்அறி காட்சியவர்—கடமை அறிந்த அறிவை யுடையவர்கள்.

செல்வம் சுருங்கிப் போன காலத்திலும் தாம் செய்ய வேண்டியதை அறிந்த உயர் மக்கள் ஒப்புரவு செய்யத் தளரமாட்டார்கள்.

* * *

ஒப்புரவு அறிந்த மேன்மக்களுக்கு வறுமை வறுமையல்ல. ஒப்புரவு செய்வதற்குத் தகுந்த வசதி இல்லாமற் போனால் அதைத்தான் வறுமையாகப் பாவிப்பர். வறுமையில் அவர்கள் காணும் பெருந் துன்பம் பிறருக்கு உதவுவதற்கு இல்லையே என்பதே. பெருந்தகையாருக்கு வறுமை தரும் கஷ்டம் அவர்களின் ஒப்புரவுக்கு ஏற்படும் குறைவே. வறுமையினால் தமக்கு உண்டாகும் கஷ்டங்களை விட, பிறருக்கு முன்போல் உதவும் வகையில்லாமல் போயிற்றே என்கிற துன்பமே பெருந் துன்பம்.

நயன்உடையான் நல்கூர்ந்தான்
ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா
ஆறு.

நயன் உடையான்—ஒப்புரவு அறிந்த குணவான். நல்கூர்ந்தான் ஆதல்—வறுமை நிலை அடைதல். செய்யும் நீர—வழக்கப்பட்ட ஒப்புரவுக் கடமைகள். செய்யாது அமைகலா ஆறு—செய்யப்பெறாது வருந்துகின்ற நிலைமை.

* * *

சமூக சேவை செய்வதினால் நஷ்டம் அடைந்து வறுமை நிலைமை ஏற்பட்டால், அந்த நஷ்டமும் கேடும் விலை கொடுத்து வாங்கத் தகும். தன்னையே விற்றும் அந்தக் கேட்டை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்கிறார் முனிவர். சமூக சேவையை அவ்வளவு உயர்த்திச் சொல்லுகிறார்.

ஒப்புரவி னால்வரும்
கேடுஎனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது
உடைத்து.

'ஒப்புரவினால் கேடு வரும் எனின்' என்று வைத்துப் பொருள் கொள்ளவேண்டும். விற்று—தன்னை விற்று அடிமை நிலை அடைந்து. கோள் தக்கது உடைத்து—கொள்ளத்தகும்.

சமூகத்துக்கு உதவுவதற்காக எந்த கஷ்டமும் அடையலாம், என்பது பொருள்.

ஆகவே இல்லறம் நடத்துவதில் சமூக சேவை மிக முக்கியமான கடமையாகிறது. இது வள்ளுவர் உபதேசம். தனிப்பட்டு நின்று தருமம் வழுவாது குடும்பம் நடத்தினால் மட்டும் போதாது. ஊரோடு "ஒத்து" வாழ வேண்டும். "ஒத்து" என்பதற்குப் பொருள் ஒப்புரவு செய்து என்று. "அவர்கள் செய்யும் பிழைகளை நீயும் செய்து" என்பதல்ல!

தொழிலாளர்களின் வெற்றி

கொழும்பு, செப்டம்பர், 13வ

கிளாபோக்கு என்ற தேயிலைத் தோட்டத்தில் அதன் சூப்பிரண்டன்ட் நடத்தி வந்த எதேச்சாதிகாரத்தை எதிர்த்துத் தொழிலாளர் மூன்று மாத காலம் கட்டுப்பாடாக வேலை நிறுத்தம் செய்துவந்தார்கள். அவர்கள் அனைவரும் திரு தொண்டமானைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸைச் சேர்ந்தவர்கள். இந்தத் தகராறை அரசாங்கம் கைத்தொழில் கோர்ட்டின் விசாரணைக்குச் சமர்ப்பித்தபடியால் வேலைநிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டது. நீடித்த விசாரணைக்குப் பின்னர் கைத்தொழில் கோர்ட் இவ்வாரம் வெளியிட்டுள்ள தீர்ப்பில் தோட்டங்களில் சமாதானமும் அமைதியும் நிலவத் திரு தொண்டமான் காங்கிரஸ் ஆற்றி வரும் அரும்பணியை மனப்பூர்வமாகப் பாராட்டி விட்டு அங்கு நடந்த வேலைநிறுத்தத்துக்குத் தோட்ட சூப்பிரண்டன்டின் நியாயமற்ற போக்கே காரணமென்றும் அவரால் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளியையும் அவரது மனைவியையும் உடனே வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளது. இதோடு பெரும்பாலான தோட்டமுதலாளிகள் காலப்போக்கை அனுசரித்து நடப்பதில்லையென்றும், தொழிலாளரை மிரட்டி அவர்களது நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுக்கும் காலமும் தொழிலாளர் யூனியன்களை ஒப்புக் கொள்ள மறுக்கும் காலமும் மலையேறிவிட்டதென்றும் கைத்தொழில் கோர்ட் எல்லாத் தோட்டங்களுக்கும் பொதுவாகச் சில விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. இத்தீர்ப்பு திரு தொண்டமானுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். காங்கிரஸின் வருடாந்திர மகாநாடு நடைபெற இருக்கும் சமயத்தில் இந்த அதிமுக்கியமான தீர்ப்பு வெளியாகியிருப்பது தொழிலாளருக்கு விசேஷ உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது.

* * *

திரு தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வருடாந்திர மகாநாடு இம்மாதம் 27ம் தேதி நுவரெலியா என்னுமிடத்தில் நடைபெறுகிறது. பிரஜாவுரிமை மனுக்கள் விசாரித்து முடித்து விட்டதாலும் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளவர்கள் எவ்வளவு என்பது இப்பொழுது திட்டவட்டமாகத் தெரிந்து விட்டதாலும் அவர்கள் விஷயமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை யெடுப்பதென்பதையும் அரசாங்கத்திடம் எந்த அடிப்படையில் அணுகுவதென்பதையும் இவ் வருட காங்கிரஸ் மகாநாடு தீர்மானிக்க வேண்டும். ஆகவே, இதர வருடங்களைவிட இவ்வருட மகாநாடு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்குமென்று அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

ஒவ்வொரு வருடமும் இந்த மகாநாடு மூன்று தினங்களுக்கு நடப்பது வழக்கம். நாட்டில் நிலவும் அவசரகால நிலைமையை முன்னிட்டு, பகிரங்க மகாநாட்டை ஒரே தினம் மட்டும் நடத்துவதென்றும் உத்தியோக ரீதியான கமிட்டிக் கூட்டங்களை இரண்டு தினங்களுக்கு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* * *

முன்னாள் ஆளும் கட்சித் தலைவராகிய திரு டட்லி சேனநாயகா இவ்வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது, அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுத் தேர்தல் திடீரென்று நடைபெறக் கூடுமென்றும் அதற்கு இப்போதே தனது கட்சி ஆயத்தங்கள் செய்ய வேண்டுமென்றும் எச்சரித்திருக்கிறார். புதிய பட்ஜட் காரணமாக மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படப் போவதாயும் அந்த நெருக்கடியில் அரசாங்கம் வீழ்ந்துவிடுவது நிச்சயமென்றும் அவர் ஹேஷ்யம் கூறுகிறார். திடீர்த் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்பது எப்படி யிருந்தபோதிலும் பெரிய பொருளாதார நெருக்கடி நாட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற தென்பதில் அனேகமாகப் பலரும் ஒருமுகமான அபிப்பிராயம் தெரிவித்து வருகிறார்கள். துறைமுகத்தில் அடுத்தடுத்து வேலைநிறுத்தங்கள் நடப்பதும் ஏற்றுமதி இறக்குமதி அலுவல்கள் சீர்குலைந்து போயிருப்பதும் வேலையில்லாத் திண்டாட்டம் மலைபோலப் பெருகிக் கொண்டிருப்பதும் அரசாங்கத்தின் கவனம் உபயோகமற்ற மொழிப் பிரச்னை போன்ற விஷயங்களில் விரயமாகிக் கொண்டு வருவதும் கவலையைக் கொடுக்கும் அம்சங்களாயிருந்து வருகின்றன. மொழி வெறி விஷம்போல ஏறி விழியைப் பிதுங்குவது ஒருபுறமிருக்க பட்ஜட்டைச் சரிக்கட்டுவதற்கே வெளிதேசக் கடனை எதிர்பார்க்கும் அளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமை சீர்குலைந்து போயிருக்கிறது. இவ்வளவு நிலைமை ஏற்பட்டிருந்தும் அரசாங்கம் அர்த்தமற்ற சர்ச்சைகளைத் துணிச்சலுடன் நிறுத்தி மக்கள் கவனத்தை ஆக்க வேலைகளில் திருப்புவதாயில்லை.

இந்திய அரசாங்கம் ஆயுள் இன்சூரன்ஸ் தொழிலை தேசிய உடைமையாக்கியதைப் பின்பற்றி இலங்கையில் இயங்கிவந்த 16 இந்திய இன்சூரன்ஸ் கம்பெனிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்ட இந்த யூனிட்டு இந்திய இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷனின் இலங்கைக் கிளையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சுமார் இருபது வருட இன்சூரன்ஸ் தொழில் அனுபவம் உள்ள ஸ்ரீ பத்மநாப அய்யர் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இலங்கையில் நீண்டகால அனுபவம் உடையவரும் எல்லோருடனும் சுமுகமாகப் பழகும் தன்மை வாய்ந்தவருமான ஸ்ரீ பத்மநாப அய்யர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதைப் பொதுவாக எல்லோரும் வரவேற்கிறார்கள். தமிழ் தெரியாத வட இந்தியர் யாராவது நியமிக்கப்பட்டு விடுவாரோ என்று அஞ்சியவர்களுக்கு ஸ்ரீ பத்மநாப அய்யரின் நியமனம் திருப்தியை அளித்திருக்கிறது.

— ரஜனி


செப்டம்பர் 19ம் முதல்
சென்னை
பிரபாத், கெயிட்டி
ராக்ஸி, காமதேனு
மற்றும் தமிழ்நாடெங்கும்
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
பக்த ராவணா
(தமிழ்)
நடனங்கள்
கோபி கிருஷ்ணா • கமலா
ஹெலன் • E.V. சரோஜா
AVM
புரொடக்ஷன்ஸ்
G.H.RAO



காப்பி அற்புதமாக இருந்தது!

திரு வி. க. மறைவு நாளை இம்மாதம் 17ந் தேதி தமிழ்ப் பற்றும், தேச பக்தியும் கொண்டவர்கள் மிக அடக்கமாகக் கொண்டாடி வருப்பார்கள். திரு வி. க. நடத்தி வந்த ''தேச பக்தன்'' பத்திரிகையில் அவருடன் துணை ஆசிரியராக இருந்து பணியாற்றிய சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு வெ. சாமி நாத சர்மா அவர்கள் தமது நினைவுகளைக் கீழே கொடுத்திருக்கிறார். — ஆசிரியர்.

தமிழ்ப் பெரியார் திரு.வி.க.

ஆழ்ந்த அன்பு, உயர்ந்த பண்பு, பரந்த புலமை இவை மூன்றும் ஒன்றுசேர்ந்து காட்சி யளித்தன திரு வி. கலியாணசுந்தர முதலியா ரிடத்தில். உண்மையில் இவை மூன்றுமாகவே முதலியார் வாழ்ந்தார் என்று சொல்ல லாம். ஆனால் இம்மூன்றும் தம்மிடத்தில் இணைந்திருக்கின்றன என்று அவர் எப் பொழுதும் உணர்ந்ததில்லை.

அவர், கண் ஆபரேஷன் செய்து வெற்றி பெறாமல் போய் விட்டது. பார்வையை இழந்து விட்டார். அந்தச் செய்தியைக் கேட்டதும் அவரைப் பார்க்க இராயப் பேட்டைக்கு ஓடோடிச் சென்றேன். சென்று அருகில் நின்று என் வருகை தெரிகிறதா என்பதற்காக என் குரலைச் சிறிது கனைத்துக் கொண்டேன். உடனே ''சர்மாவா?'' என்று சொல்லி என் பக்கம் தம்மிரு கைகளையும் நீட்டினார். அவருடைய இந்த நிலையைக் கண்டு நான் அப்படியே கலங்கிப் போனேன். முதன்முதலாக இந்நிலையில் அவரைப் பார்த்த தினால் என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டேன்.

உடனே அவர் எப்படியோ தம்மிரு கைகளை யும் நீட்டித் துழாவிப் பார்த்து மெதுவாக என் இரு கைகளையும் பற்றி, தம் மார்புமீது வைத்துக் கொண்டார். அவருடைய நிலைமை யைப் பற்றி நான் விசாரிப்பதற்கு முந்தியே அவர் ''இராத்திரியில் வெகுநேரம் கண் விழித் துப் படிக்காதீர்கள்; எழுதாதீர்கள்; என்ன சாப்பிடுகிறீர்கள்? கீரை வகையை நிறையச் சேர்த்துக் கொள்ளுங் கள்; நெல்லிக்காயை அதிகமாக உபயோகி யுங்கள். எண்ணெய் முறை தப்பவேண்டாம். அதிகமாகப் பேசாதீர் கள்; வெகுபேர் வந்து பிரசங்கத்துக்கு உங்க ளைக் கூப்பிடலாம். அவைகளுக் கெல்லாம் போய்க் கொண்டிருக்க வேண்டாம்'' என்று இப்படி எனக்கு உப தேசம் செய்யத் தொடங்கி விட்டார். பிறர் நலத்திலே எவ் வளவு அக்கறை! அவ ருடைய உடல் நிலை யைப் பற்றி நான் கேட்டபோது, ''அது என்ன பெரிய விஷயம்? பார்வையைப் பறித் துக் கொண்டான் ஆண்டவன். ஆனால் மனத்திலே ஒரு தெளிவு உண்டாகி யிருக் கிறது'' என்றார். அப்பொழுதும் அவருக்கே சொந்தமான சிரிப்புத்தான்! இனிமையான— நிதானமான வார்த்தைகள்தான்! தமது நிலைமை இப்படியாகி விட்டதே யென்று அவர் சிறிதுகூட மனம் கலங்கவில்லை. எந்தச் சூழ்நிலையிலும் அமைதி குலையாதிருக்கும் இனிய மனம் படைத்திருந்தார் அவர். ஆழ்ந்த அன்புடையவர்கள் எப்பொழுதும் மன அமைதி குலைவதேயில்லை என்பது காலம் கடந்த உண்மையல்லவா?



தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

பணம் இல்லையேயென்று அவர் ஒரு பொழுதும் கவலைப்பட்டது கிடையாது. ஆனால் இல்லை என்ற சொல் அவர் வாயி லிருந்து வந்ததில்லை. யார் எப்பொழுது வந்து கைநீட்டினாலும், ஏதாவது கொடுத்து அனுப்புவார். அவரிடம் கைநீட்டாமல் பண உதவி பெற்றவர் எனக்குத் தெரிந்த வரை யில் சுப்பிரமணிய சிவனார் ஒருவர்தான். சிவனார் தன்மதிப்பு உணர்ச்சி மிக்கவர். அந்த உணர்ச்சிக்குப் பெருமதிப்பு கொடுத்து வந்தார் முதலியார். சிவனாரின் பக்குவ மடைந்த மனத்தை அறிந்தவர் முதலியார். அப்படியே முதலியாரின் பெரு மனத்தைக் கண்டவர் சிவனார். சிவனார் ஏகதேசமாகத் தான் முதலியாரிடம் உதவி பெற வருவார். வந்தால் 'எனக்கு இவ் வளவு பணம் தேவை' என்றுதான் சொல்லு வாரே தவிர 'இவ்வளவு பணம்தாருங்கள்' என்று கேட்கவே மாட்டார். முதலியாரும் 'அதற் கென்ன? எடுத்துக் கொள்ளுங்களேன்' என்று தான் சொல் வாரே தவிர, 'கொடுக் கிறேன்' என்று சொல்ல மாட்டார். இது சிறிய விஷயமென்று சிலர் கருதலாம். ஆனால் இது வன்றோ இருவருடைய உயர்ந்த பண்புகளும் ஒளி விடுகின்றன!

முதலியார் நாவசைத் திருக்கக்கூட வேண் டாம்; தலையசைத்திருந் தாலே போதும்; ஆயி ரக் கணக்கில் பணம் அவர் காலடியில் வந்து குவிந்திருக்கும். இத்த கைய சந்தர்ப்பங்கள்

அவருக்கு எத்தனையோ கிடைத்தன. ஆனால் அவர் இதுவிஷயத்தில் மிக உறுதியாக இருந்தார். 'அன்பினால் கொடுக்கப்படுவதைக்கூட ஏற்றுக் கொள்ள மறுக்கிறாரே' என்று சிலர் இவர் மீது அதிருப்தி கொண்டதும் உண்டு. ஆனால் அவர்களுடைய அதிருப்தி நீடித்திருக்க வில்லை. நீடித்திருக்கவும் முடியாதல்லவா? அவர்களுடைய மதிப்பிலே முதலியார் மேலும்மேலும் உயர்ந்தே வந்தார்.

முதலியாரின் பரந்த புலமைக்கு எடுத்துக் காட்டு வேண்டுமா என்ன? தமிழ்மொழி ஒன்றில்தான் அவருக்கு நல்ல புலமை இருந்ததென்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ? அப்படியில்லை; வேறு சில மொழிகளிலும் அவருக்கு நல்ல பரிசயம் இருந்தது. அந்தந்த மொழியின் மரபுகளை அவர் நன்கறிந்து, தெளிந்து வைத்திருந்தார்.

அவர் தமிழ் உரைநடைக்கு உரமிட்டவர் மட்டுமல்ல; நல்ல கவிஞருங்கூட. பழமையையும், புதுமையையும் இணைத்துக் கொடுத்த பாலமாய் அமைந்தவர் அவர். அவருடைய புலமை பேச்சளவோடும் எழுத்தளவோடும் வரம்பு கட்டிக் கொண்டு விடவில்லை. அவருடைய அன்றாட வாழ்க்கையிலும் ஊடுருவிப் பரந்திருந்தது. அவரோடு கூட இருந்து பழகியவர்களுக்குத்தான் இந்த உண்மை தெரியும்.

முதலியார் தமது குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஓரிடத்தில் "செல்வமுமின்றிச் சீர்மையுமின்றிச் சிறக்கு நன் மக்களுமின்றிப் பல்வளமின்றிப் பணித்தனை வாழ" என்று கூறுகின்றார். இதனால், அதாவது குடும்ப வாழ்க்கையில் அதிகமாக ஈடுபடாதிருந்த காரணத்தினால், அவருக்கு உலக அனுபவம் அவ்வளவாக இல்லை என்று சிலர் கருதிக் கொண்டிருக்கக்கூடும். இதற்கேற்றாற்போல் அவருடைய புறத்தோற்றம் மிக எளிமையுடையதாக இருந்தது. தவிர எல்லாம் தெரிந்து கொண்டிருப்பவர் போல் அவர் எப்பொழுதும் பேசமாட்டார். இதனால் சிலர் தங்களுடைய பேச்சுச் சாமர்த்தியத்தினால் அவரை ஏமாற்றி விடலாமென்று எண்ணி அவரிடம் வந்து ஏமாந்து போயிருக்கின்றனர்.

சோதிட சாஸ்திரத்தின் கரையைக் கண்டு விட்டதாகச் சொல்லிக் கொண்டு ஒருவர் முதலியாரிடம் வருவார். முதலியாருடைய ஜாதகத்தைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி வாங்கிப் பார்ப்பார். 'அந்தக் கிரகம் உச்சத்தில் இருக்கிறது; இந்தக் கிரகம் லாபாதிபதியாயிருக்கிறான்' என்று இப்படி என்னென்னவோ அளந்து கொட்டுவார். முதலியார் அனைத்தையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டு விட்டு நிதானமாக, சில குறுக்குக் கேள்விகள் போடுவார். வந்தவர் விழிப்பார். சோதிட சாஸ்திரத்தில் முதலியாருக்கு நல்ல பரிசயம் உண்டென்பதை அவர் பிறகு தெரிந்துகொண்டு முதலியாரிடத்திலேயே தமக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதைத் தீர்த்துக் கொண்டு செல்வார். இப்படி அநேகர் வந்து போனதை நான் பார்த்திருக்கிறேன். முதலியார் சோதிட சாஸ்திரத்தை முறையாகப் பயிலவில்லையானாலும் அதில் அனுபவஞானம் நிரம்பியவர் என்பதை மட்டும் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனமே வைத்திய சாஸ்திரத்தில் வல்ல அநேகர் முதலியாரிடம் வந்து போவதுண்டு. அவர்களும், வைத்திய சாஸ்திரத்தில் முதலியாருக்குள்ள அனுபவ ஞானத்தைக் கண்டு திகைத்துப் போவர். இன்னின்ன நோய்களுக்கு இன்னின்ன சிகிச்சை, எந்தெந்த மூலிகைகளில் என்னென்ன சத்து இருக்கின்றது என்பவைகளைப் பற்றி விளக்கமாகச் சொல்வார் முதலியார். நாடி பிடித்துப் பார்த்து அவர் வைத்தியம் செய்யவில்லையானாலும், அகமறிந்து முகம் பார்த்து அவர் சொன்ன சிகிச்சை முறைகள் அநேகருக்கு நல்ல பயனை அளித்திருக்கின்றன என்று நான் உறுதியாகக் கூற முடியும்.

குடும்பப் பிணக்கினாலும் வேறு பல தொல்லைகளினாலும் அவதிப்பட்டுப் போன அநேகர் முதலியாரிடம் வந்து பரிகாரம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். வாழ்க்கைப் பாதையில் தப்பித் தவறி வழுக்கி விழுந்து விட்ட சில சகோதரிகள் முதலியாரிடம் வந்து அறவுரை கேட்டு, சீரிய வாழ்க்கைக்குத் திரும்பிப் புனிதமடைந்திருக்கின்றனர். மனோதத்துவ சாஸ்திரத்தில் முதலியார் நல்ல பயிற்சி பெற்றிருந்தபடியால் தம்மை அணுகியவர்களுக்கு ஆறுதல் அளிப்பது அவரால் சுலபமாயிருந்தது.

இங்ஙனம் பல துறைகளிலும் அனுபவம் பெற்றிருந்த முதலியார், எத்தனையோ பேருடைய உள்ளங்களில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். வாழ்க அவர் திருநாமம்!

பெண் தெய்வங்கள்

திரு. வி. க.வுக்கு அரசியலைக் காட்டிலும் அதிக ஆர்வத்தை ஊட்டிய இரண்டு இலட்சியங்கள் இயற்கை வாழ்வும், பெண்ணின் பெருமையும். "பழந் தமிழர்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினார்கள். பெண்களைப் போற்றினார்கள். இக்காலத் தமிழர்கள் பழம் பெருமையை அடைய வேண்டுமானால் அந்த இயற்கை வாழ்வுக்குத் திரும்ப வேண்டும். பெண் குலத்தைப் போற்ற வேண்டும்' என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை. காந்தியடிகள் மீது திரு வி. க.வுக்கு உள்ள அபார பக்திக்கு முக்கிய காரணம், மகாத்மா இயற்கையோடியைந்த வாழ்வை ஆதரிப்பதேயாகும்.

"பெண் தெய்வங்கள்" என்ற சொற்றொடரை முதன் முதலில் திரு வி. க.தான் உபயோகப்படுத்தினார் என்று நினைக்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பெண்களையும் திரு'வி. க. அத்தனை தெய்வங்களாகவே கண்டார்.

—பேராசிரியர் 'கல்கி'

கீழே வெளியிட்டிருக்கும் ''தங்கப் பத்திரங்கள்'' என்னும் குறுகிய கட்டுரையில் ஒரு 'கல்கி' வாசகர் எமக்கு அனுப்பியுள்ள மற்றொரு ஆலோசனை அடங்கியிருக்கிறது: ஏற்கனவே டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் தமது கட்டுரையில் சுருக்கமாகக் கூறியுள்ள விஷயத்தை விளக்கமாகச் சொல்லியிருக்கிறது. நாட்டில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை வெளிக்கொணர்ந்தாலே நமது அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை தீரும் என்கிறார் இவ்வன்பர். ஆனால் அதை எப்படிச் செய்வது?

தங்கப் பத்திரங்கள்

அன்னியச் செலாவணி நெருக்கடி சம்பந்தமாக, பாரதத்தின் தற்போதைய நிலை என்னவென்றால் நமக்கு ஏறக்குறைய 800 கோடி ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணி தேவை. அல்லது அதற்கு ஈடான மதிப்புள்ள தங்கம் அல்லது தங்கக் கட்டிகள் தேவை. இது உலக மார்க்கெட்டில் உள்ள விலைப்படி கிடைக்க வேண்டும். அதாவது அவுன்ஸ் (அவுன்ஸ் என்பது இரண்டரை தோலா எடை) 35 அமெரிக்க டாலர் அல்லது ரூ. 165 விலையில் கிடைக்கவேண்டும். ரிஸர்வ் பாங்கியின் பொக்கிஷ அறையில் இந்த விலையில் 800 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் இருந்தால் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நமது நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடி தீரும். அதற்குப் பின் நமது நாட்டில் பொருளாதார நிலையிலேயே அபிவிருத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். புதியதாக நிர்மாணிக்கப்பட்ட உருக்குச் சாலைகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விடுமாதலால், நமது இறக்குமதியும் குறைந்து அன்னியச் செலாவணித் தேவையும் குறையும். ஏற்றுமதியும் விஸ்தரித்து அயல் செலாவணி சம்பாத்தியமும் அதிகரிக்கலாம். எனவே, நமது வருங்காலத்தில் அயல்நாட்டுக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியும் என்று நம்பலாம்.

இவ்வாறு முடங்கிக் கிடக்கும் தங்கத்தை வெளிக்கொண்டு வருவதற்கு நமது நாட்டில் என்ன வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை ஆராய்தல் நல்லது. நமது மக்களிடையே இருக்கும் தங்கம் சற்றேறக்குறைய ரூ. 3000 கோடி அளவுக்கு உள்ளது என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ரிஸர்வ் பாங்கி செய்த மதிப்பீட்டிலிருந்தும் இந்தத் தொகை சரியானதென்றே புலனாகிறது. இதில் பாதி நமது மத்தியதர வகுப்பினர்களிடமும் அதற்கும் தாழ்ந்த நிலையிலுள்ள பெண்மணிகளிடமும் நகைகளாக இருக்கின்றன எனலாம். இது அவர்களுக்கு அவசியமான பொருள்தான். எனவே இதில் எந்தப் பாகமும் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் என்று கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது.

மறுபாதி அதாவது சுமார் 1500 கோடி மதிப்புள்ள தங்கம் தங்கக் கட்டிகளாயும் 'பேட்லா' தங்கமாகவும் மேல்தர வகுப்பினர்களிடமும் பணக்காரர்களிடமும் இருக்கின்றன. இதில் பெரும்பாகம் முடக்கப்பட்டுள்ள தங்கம். அதாவது மறைமுகமாக வைக்கப்பட்டது. வருமான வரி கொடுக்காது பதுக்கி வைக்கப்பட்டது எனலாம். நம் நாட்டில் தங்கத்தின் விலை குறையாததற்குக் காரணமே இம்மாதிரி பணக்காரர்கள் வருமான வரியிலிருந்து மறைத்து வைத்த பணத்தைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுவதற்குத் தங்கக் கட்டிகள் பெருவாரியாக வாங்கப்படுவதுதான். உலக மார்க்கெட்டில் தங்கத்தின் விலை அவுன்ஸ் 35 அமெரிக்க டாலர் அல்லது 165 ரூபாயாக இருக்கும் போது இந்தியாவில் மட்டும் அதன் விலை 275 ரூபாயாக இருக்கிறது. அமெரிக்காவில் உற்பத்தியாகும் எல்லாத் தங்கத்தையும் தானே வாங்கிக் கொள்ளும் அரசாங்கம் சமீபத்தில் தங்கத்தின் விலையை அவுன்ஸ் 40 டாலருக்கு ஏன் உயர்த்தக் கூடாது என்றுகூடத் தீவிரமாக ஆலோசித்து வந்தது. ஆனால் அவ்வாறு செய்யாததற்குக் காரணம் ''இரும்புத் திரைகளுக்குப் பின்னாலுள்ள நாடுகளில் (அதாவது ஸோவியத் ருஷ்யாவிலும் ருஷ்யாவுடன் இணைந்த நாடுகளிலும்)பெருவாரியாகத் தங்கம் இருப்பதால் அமெரிக்க விலை உயர்வால் அவர்கள் மறைமுகமாக லாபமடைவார்கள் என்பதே. இவ்வாறு மற்ற நாடுகளுக்கு லாபத்தை உண்டாக்கிக் கொடுக்க அமெரிக்க அரசாங்கம் விரும்பவில்லை.

இப்படிப் பணக்காரர்களிடத்திலும் உயர்தர வகுப்பாரிடத்திலும் வட்டியில்லாமல் முடங்கிக் கிடக்கும் தங்கத்தைஎப்படி வெளிக்கொணர்வது? தேசாபிமான உணர்ச்சி இருந்தால் நாட்டின் நலனுக்காக இதைச் சுலபமாக வெளிக்குக் கொண்டு வரலாம். இதர நாடுகளில் தேசத்துக்கே நெருக்கடி என்ற நிலைமை ஏற்பட்ட போது தேசாபிமான மேலீட்டால் மக்கள் பிரமிக்கத் தக்க சேவையைச் செய்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு சம்பவம் மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

1941-ஆம் ஆண்டில் அமெரிக்கா இரண்டாவது உலக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நேச நாடுகளுக்கு உதவி அளிக்க ''குத்தகைக் கடன் மசோதா'' அமெரிக்க சட்ட சபையில் விவாதிக்கப்பட்டபோது அதை எதிர்த்த ஒரு கோஷ்டியினர் ஆங்கிலேயர்களுக்கு அமெரிக்காவிலேயே பல வர்த்தக ஸ்தாபனங்கள் இருக்கின்றனவென்றும், அவற்றை விற்றுவிட்டுப் பணத்தை எடுத்துப் போகலாம் என்றும், பொருளை வைத்துக் கொண்டு இனாமாக அமெரிக்க உதவி கோருவது நியாயமல்ல என்றும் வாதித்தனர். எதிர்ப்பின் போக்கை அறிந்த ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆங்கில அரசாங்கத்துக்கு

இதை உடனே தெரிவித்து, இதைச் சமாளிக்க ஒரு ஆலோசனையையும் கூறினார். ஆங்கிலேயரின் மனப்பான்மைக்கு அறிகுறியாக அமெரிக்காவிலுள்ள ஏதாவது ஒரு ஆங்கிலேய வர்த்தக ஸ்தாபனத்தை அமெரிக்க அரசாங்கத்துக்கு விற்றுவிடத் தயாராக இருந்தால் நல்லது என்றும், உதவி மசோதா நிறைவேறலாம் என்றும் சொன்னார். இதை உணர்ந்த ஆங்கிலேய அரசாங்கம் பிரபல 'ரேயான்' உற்பத்தி ஸ்தாபனமாகிய ''கூர்ட்டால்ட்ஸ்'' கம்பெனிக்குச் சொந்தமான அமெரிக்க விஸ்கோஸ் கம்பெனியை அமெரிக்க அரசாங்கத்துக்கு மாற்றிவிடத் தீர்மானித்தது. இதற்காக 'கூர்ட்டால்ட்ஸ்' ஸ்தாபனத்தின் சொந்தக்காரரை அணுகி நிலைமையை விளக்கி, அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரியது. வருஷத்துக்கு 7 கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டிருந்த ஒரு ஸ்தாபனத்தை ஒரு நிமிஷத்தில் விலை பேசாமல் விற்றுவிட வேண்டுமென்றால் யாருக்குத்தான் மனம் வரும்?

ஆனால் தேசத்தின் நெருக்கடியைச் சமாளிக்க டாக்டர் ஸாமுவேல் கூர்ட்டால்ட் ஒரே நாளில் தம்முடைய சகாக்களைக் கலந்து ஆலோசித்து ஆங்கிலேய அரசாங்கத்துக்கு உதவ முன்வந்தார். அமெரிக்க விஸ்கோஸ் கம்பெனி அமெரிக்க அரசாங்கத்துக்கு மாற்றப்பட்டது. ''குத்தகைக் கடன்'' நிறைவேறியது. காலப் போக்கில் அமெரிக்கப் பொது மக்களுக்கு இந்தக் கம்பெனி விற்கப்பட்டு 20 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டு இங்கிலீஷ் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் இக்கம்பெனியின் ஆஸ்திகள் மதிப்பு சுமார் 40 கோடி ரூபாய். மத்தியஸ்தம் செய்தவர் கூட அமெரிக்க விஸ்கோஸ் கம்பெனியின் மதிப்பு குறைந்தது 35 கோடி ரூபாய் இருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். ஆனால் தேசத்தை நெருக்கடியிலிருந்து காப்பாற்றியதற்கு டாக்டர் ஸாமுவேல் கூர்ட்டால்டுக்குக் கிடைத்தது என்னவோ 20 கோடி ரூபாய்தான். மிச்சம் வரவே இல்லை.

அவர் மட்டும் அந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க விஸ்கோஸ் கம்பெனியை விற்கச் சம்மதிக்காமலிருந்தால் குத்தகைக் கடன் நிறைவேறியிருக்குமோ, இராதோ, அமெரிக்க உதவியும் கிடைத்திருக்குமோ, கிடைத்திருக்காதோ, யார் சொல்ல முடியும்!

நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் இதர நாடுகளில் மக்கள் எவ்வாறு இதைச் சமாளிக்க முன்வந்தனர் என்பதைக் காட்டவே இந்த உதாரணத்தைச் சொன்னேன். நமது பாரதத்தில் 600 அல்லது 800 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் இப்போது புதைந்து தானே கிடக்கிறது. இவை வைத்திருப்பவர்கள் அவரவர்கள் வியாபாரத்துக்கு இதை உபயோகப்படுத்த முடியாது. ஏனெனில் வரி செலுத்த வேண்டி வரும். எனவே அரசாங்கம் ரிஸர்வ் பாங்கியின் மூலம் அவர்களைத் தகுந்த முறையில் அணுகி, முடியுமானால் உலக மார்க்கெட் விலைக்கு அதாவது அவுன்ஸ் 165 ரூபாய் விலைக்கு இதை வெளிக் கொணருவது அவசியம். எடுத்துக் கொண்ட தங்கத்துக்குப் பாண்டுகளாகவோ பத்திரங்களாகவோ வழங்கலாம். 25 வருஷ தவணையில் இவற்றை வழங்கலாம். குறைந்தபட்சமாக வட்டி விகிதமும் அளிக்கப்படலாம். இதன் மூலம் நமது நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தோன்றுகிறது.

சொல்லுவது போல் அவ்வளவு எளிதாக அதைச் செய்ய முடியும் என்று நான் நினைப்பதாக எண்ணலாகாது. இதிலுள்ள கஷ்டங்களை நான் முற்றிலும் உணருகிறேன். இது மக்களுக்குச் சர்க்காரிடமிருக்கும் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட விஷயம். வட்டி இல்லாமல் பெட்டியில் கிடக்கும் தங்கத்துக்குக் கொஞ்சம் வட்டியும் தருகிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. வட்டியைப் பார்த்துத் தங்கக்கட்டி வாங்குவதில்லை. தங்கத்துக்கு ஈடாக ரூபாய் மதிப்பில் பத்திரங்களோ, பாண்டுகளோ வழங்கினாலும் போதாது. பணப் பெருக்கத்தினால் விலைவாசிகள் உயர்ந்து ரூபாயின் மதிப்பு குறைந்து போகலாமல்லவா? அதற்காகத்தானே தங்கம் ஒரு பாதுகாப்பாக மக்கள் வைத்திருக்கின்றனர். இப்போதுள்ள விலைவாசிப்படி ரூபாய்க் கணக்கில் தங்கத்தை ஈடு செய்து சுமார் இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் ரூபாய் மதிப்பு குறைந்து போயிருந்தால் அதன் அளவுப்படியன்றோ பத்திரங்களையும் பாண்டுகளையும் மாற்றிக் கொள்ளவேண்டும். இம்மாதிரி ரூபாய் மதிப்பின் மாறுதல்களுக்கு ஏற்ப வகை செய்யாவிட்டால் இப்போது தங்கம் வைத்திருப்பவர்கள் நஷ்டப்பட வேண்டியிருக்குமல்லவா? அதற்கு மக்கள் சம்மதிக்க மாட்டார்கள்.

மேலும் இப்போது நாட்டிலுள்ள விலைப்படித் தங்கத்தை வெளிக் கொணர்வதே சிரமம். உலக மார்க்கெட்டில் நிலவும் விலைக்கு மக்களைத் தங்கம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் பலனளிக்காமல் போகக் கூடும். தற்போதுள்ள விலைவாசிகளாவது கொடுக்கப்பட வேண்டும். தங்கத்துக்குப் பதில் தங்கமாக எடைபோட்டு 20 அல்லது 25 ஆண்டுகளுக்குப் பின் திருப்பித்தர முடியாவிட்டாலும் இப்போதுள்ள விலைவாசிகளின் அடிப்படையில் ரூபாயின் மதிப்பை 20 அல்லது 25 வருஷங்களுக்குப் பின்னால் மதிப்பிட்டுக் கொடுக்கவும் சர்க்கார் சம்மதிக்க வேண்டியிருக்கலாம். இம்மாதிரி சிக்கல்களையெல்லாம் சர்க்கார் சமாளித்தால் முடங்கியுள்ள தங்கத்தைப் பயனுள்ளதாகச் செய்யக் கூடும். வரி கொடுக்காமல் ஏமாற்றிய பணம் என்று தெரிந்தும் அதைச் சட்ட பூர்வமாக அங்கீகரிப்பது அரசாங்கத்துக்குச் சிறிது கஷ்டந்தான். ஆனால் இதை அவர்கள் கவனிக்கக் கூடாது. வெளிக் கொணர்ந்தபின் 'செல்வ வரி'யாவது இதன் மீது கிடைக்குமல்லவா? இந்த நன்மை, இதர நன்மைகள் இவற்றை உத்தேசித்தாவது இந்த விஷயத்தில் கவனம் செலுத்துவது நல்லது. இதை அரசாங்கம் கவனிக்குமென்றே எண்ணுகிறேன். மக்களை அணுகும் முறையில்தான் வெற்றி காண வேண்டும். அதுதான் முக்கியம்.

ராஜாஜி அவர்களுடைய நல்லாசியுடன் பௌராணிகர் எழுதிவரும் 'பக்தி வயல்' கட்டுரைகளைப் பாராட்டிப் பல நேயர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். —ஆசிரியர்

பக்தி வயல்

ஸ்ரீ ராஜாஜி அவர்களின் வாழ்த்துடன் 'ஸ்ரீ பௌராணிகர்' அவர்கள் எழுதிவரும் 'பக்தி வயல்' 7—9—58 'கல்கி' இதழில் கண்டேன். சுமார் நூறுதரம் படித்துப் பரவசம் அடைந்தேன். என்னை அறியாமலே பக்தி, பொறுமை, விசுவாசம் முதலிய நல்வழியில் என் மனம் சென்று விட்டது. ''பக்தி வயல்'' என்றும் செழித்து வளரத் தமிழ்த் தாயை வேண்டுகிறேன். ''பக்தி வயல்'' எழுதிய ஆசிரியர் ஸ்ரீ ''பௌராணிகர்'' அவர்களுக்கும் இதை வெளியிட்டு வரும் ''கல்கி'' உரிமையாளர்களுக்கும் எனது மனம் குளிர்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசைபுட்-குச்சை
6—9—58
ஆசிரியர் ஆனந்தம்

★

காஞ்சி காமகோடி ஆசார்ய சுவாமிகளின் அருள்வாக்கினாலும், ராஜாஜி அவர்களின் வள்ளுவர் வாசகத்தினாலும் தலை நிமிர்ந்து நிற்கும் கல்கி, பௌராணிகரின் படைப்பான பக்திவயலினால் பீடுநடை பயில ஆரம்பித்து விட்டது கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

கும்பகோணம்
5—9—58
ஆர். ராஜகோபாலன்
டி. ஆர். கோபாலன்

★

நாஸ்திகம் தலைவிரித்துத் தாண்டவம் ஆடும் இக்காலத்தில் ஆஸ்திகம் தழைத் தோங்க வேண்டுமென்ற உட்கருத்துடன் 'கல்கி' பத்திரிகையின் மூலம் செய்து கொண்டுவரும் தொண்டுக்குத் தமிழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

இவ்வாரத்திய 'கல்கி'யில் ஸ்ரீ ராஜாஜியுடைய நல்லாசியுடன் ஸ்ரீ பௌராணிகர் அவர்களால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்ட பக்திவயல் என்று திருப்பெயர் கொண்ட ஸ்ரீமத் பாகவதஸாரம் மிகவும் போற்றத் தக்க முறையில் இருக்கிறது. ஒவ்வொரு சுலோகத்தின் உட்கருத்தும் தமிழ் வசன நடையில் உருவெடுத்துப் பிரகாசிக்கிறது.

ஸ்ரீ பௌராணிகர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இம்மாபெரும் திருப்பணி பரிபூரண வெற்றியடைந்து பக்தி வயல் பிரசுரம் லக்ஷோபலக்ஷம் பிரதிகள் அச்சிடப்பட்டு, சக்கரவர்த்தித் திருமகன் பிரசுரம் போலவும் வியாசர் விருந்து பிரசுரம் போலவும் நம் தமிழ் நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் குடும்பப் பொக்கிஷமாகப் பிரகாசிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

சேலம்ஜங்ஷன்
5—9—58
ஏ.கே. வெங்கடநாராயணன்

★

தமிழ் நாட்டு மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதற்கு ஓர் சோக்ரதராகவும், பக்தி நூல்கள் இயற்றுவதில் ஒரு வியாசராகவும் விளங்கும் நம் அருமைத் தலைவர் ராஜாஜி அவர்களின் நல்லாசியுடன் பக்தி வயல் செப்டம்பர் 7-ந் தேதி இதழில் ஜாம்ஜாமென்று ஆரம்பமாகி யிருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தை உபதேசிக்கும் திரு பௌராணிகரின் புனிதப் பணி நிறைவேற நாம் நாராயணனைப் பிரார்த்திப்போமாக.

இலங்கை
5—9—58
மா. சோமசேகரம்

★

தங்கள் 'கல்கி' இதழைத் தவறாமல் படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். இவ்வாரம் 'கல்கி'யில் ''பக்திவயல்'' என்னும் தலைப்பில் பாகவதக் கதை வெளிவந்துள்ளதைப் படித்தேன். அதற்கு ராஜாஜி முன்னுரை எழுதி யுள்ளது வரவேற்கத்தக்கது. அவ்வாறு அவர் முன்னுரை எழுதியது காய்ச்சிய பசும்பாலில் கொம்புத்தேனைப் பெய்தது போன்று உள்ளது.

கன்னூர்பாளையம்
6—9—58
பட்டிலிங்கம்

ஒரு நற்செய்தி

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் சமீப காலத்தில் அருளிச்செய்த பிரசங்கங்களைக் கலைமகள் காரியாலயத்தினர் தொகுத்து ''ஆசார்ய ஸ்வாமிகள் உபந்நியாசங்கள்'' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இதன் விலை: ரூ. 2.

இந்நூலைத் தற்காலத்துக் கல்லூரி மாணவர்களும் பள்ளிக்கூட மாணவர்களும் படித்துப் பயனடைய வேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு, இம்மாதம் விநாயக சதுர்த்தியிலிருந்து அடுத்த மாதம் வரும் சரஸ்வதி பூஜைவரை பாதி விலையில் (ஒரு ரூபாய்க்கு) விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கல்லூரித் தலைவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். மாணவர்கள், தங்கள் தலைமை ஆசிரியர்களிடம் பெற்ற அத்தாட்சியுடன் எழுதினால் இச் சலுகையைப்பெறலாம். விலாசம்: கலைமகள்காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4

செங்கோலும் ஜனநாயகமும்

• க. சந்தானம் •

௨. ஜனநாயகம்: அரசியல் கட்சிகள்

செங்கோலின் முக்கிய அம்சங்கள் முன் பாகத்தில் விளக்கப்பட்டன. இனி ஜனநாயகத்தின் கருவிகளையும், முறைகளையும் ஆராய்ந்து அவை செங்கோல் நடத்துவதற்கு எவ்விதத்தில் உதவும், எந்தச்சந்தர்ப்பங்களில் தடை செய்யும் என்பதை ஆலோசிப்போம்.

ஜனநாயகம் என்ற பதத்தைப் பலவிதங்களில் பிரயோகித்துத் தாறுமாறான வாதங்களை எழுப்புகின்றனர். ஒரு நாட்டில் எல்லா மக்களும் ஏகோபித்து விரும்பும் காரியங்களை அவ்விதமே ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளும் தலைவர் மூலம் செய்வதே உண்மையான ஜனநாயகம் என்கிறார்கள். ஆதலால் அரசியல் கட்சிகள் மூலமாகவும், போட்டியிருக்கும் தேர்தல் வாயிலாகவும் நடைபெறும் அரசாங்கம் பெரும்பாலோர் ஆட்சியாகுமே ஒழிய, சுத்த ஜனநாயகமாகாது. அந்த அரசாங்கத்தை ஆதரிக்காத சிறுபாலருக்கு அது கொடுங்கோலாக இருக்கலாம் என்றும் வாதிக்கிறார்கள். இவ்வாதத்தில் சிறிதளவு உண்மை இருக்கிறது. ஆனால் அவர்கள் கூறும் ஜனநாயகம் இவ்வுலகில் தற்போதைய சுபாவமுள்ள மனிதர்களிடம் நடைபெறக் கூடாதது என்பதை நன்குணர்ந்தால் அது போகாத ஊருக்கு வழி தேடுவதேயாகும் என்பது புலப்படும்.

கோடிக்கணக்கான மக்கள் வசிக்கும் பரந்த நாட்டில் எக்காலத்திலும் எந்த விஷயத்திலும் எல்லோரும் ஓர்வித அபிப்பிராயமுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். சமூகத்தில் மக்கள் பரஸ்பரம் நடத்து கொள்ளும் நியமங்களைப் பற்றியும், லாப நஷ்டங்களின் சம்பந்தமாகவும், தொழில், ஊதியம், சொத்து முதலிய வாழ்க்கை சாதனங்களின் மீது கட்டுப்பாடுகள் செய்வதைப் பற்றியும் கொள்கைகளை நிச்சயித்து, அவைகளுக்கேற்ற முறைகளை அனுசரிப்பது அரசியலின் முக்கிய காரியங்களாகும். அபிப்பிராய பேதங்களைப் பலாத்காரமாகத்தடுக்காத எந்த சமூகத்திலும் இவைகளைப் பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் இருப்பது சகஜம். அவை எல்லாவற்றையும் தழுவி எந்தக் காரியமும் செய்ய முடியாது. ஏகோபித்த முடிவு சாத்தியமாகும் வரையில் அரசாங்கம் காத்திருக்க வேண்டுமென்றால் சமூக வாழ்வு குலைந்து கலைந்து விடும்.

எல்லோரும் ஏற்கும் தலைவர்களையும் எளிதில் கண்டுபிடிக்க முடியாது. மகாத்மா காந்தியையே வெறுத்துச் சுட்டுக் கொன்று விட்டார்கள். வேறு எவரை அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள்?

எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளா விட்டாலும், சமூகத்தின் சுயநலமற்ற தலைவர்களைக் கொண்டு ஜனநாயகத்தை நடத்த வேண்டும் என்கிறார்கள். கூடுமானால் இதுவும் நல்ல யோசனைதான். ஆனால் எவர் பரிசுத்தர், எவர் சுயநலவாதி என்று யார் நிர்ணயிப்பது? அவரவர்களே தமக்கு அந்தப் பட்டங்களைக் கட்டிக் கொள்ளுவதா? அல்லது தேர்தல் மூலம் பொறுக்கி எடுப்பதா? தேர்தல்களில் சாமர்த்தியமுள்ள சுயநலக்காரர்கள் எளிதில் வெற்றியடையக் கூடும் என்பது நமது அனுபவ மல்லவா?

மக்கள் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அரசியல் கட்சிகள் இருக்கலாகாது. ஒவ்வோர் தொகுதியிலும் அபேட்சகர்கள் சுதந்திரமாக நின்றால் வாக்காளர்கள் அவர்களுக்குள் நல்லவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தப் பிரதிநிதிகள் சட்டசபையில் கூடிக் கட்சியின்றி நல்லவர்களை மந்திரிகளாகத் தேர்ந்தெடுத்தும், ஒவ்வோர் பிரச்னையிலும் தங்கள் சொந்த அபிப்பிராயப்படி வாக்குக் கொடுத்தும் அரசாங்கத்தை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால் பெரும்பாலோர், சிறுபாலோர் என்று சமூகம் பிளவுபடாது, பொது மக்களுடைய விருப்பம் நன்கு நிறைவேறும் என்று வாதிக்கப்படுகிறது.

முதலில் கேட்கும்பொழுது இந்த வாதம் நியாயமென்றே தோன்றும். ஆனால் நன்கு ஆலோசித்தால் இது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்று தெளிவாகும்.

ஜனநாயகத்தில் பிரதிநிதிகள் யோக்கியதை அல்லது குணத்துக்காக மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தேர்தல் சமயத்தில் சமூகத்தின் முன்னிருக்கும் முக்கியப் பிரச்னைகளை எந்தக் கொள்கைகளின்படி, எம்முறையில் தீர்க்கவேண்டும் என்பதே பிரதானமானது. அறிவிலும், குணத்திலும் சிறந்தவர் மிகவும் பிற்போக்கான அபிப்பிராயம் உள்ளவராக இருக்கலாம். அவசியமான சீர்திருத்தங்களை எதிர்க்கலாம்.

சொந்தத் தகுதியோடு, அபிப்பிராயத்திலும் வாக்காளர்களுக்குப் பிடித்திருந்த போதிலும் தனி அபேட்சகரால் வாக்காளர்களுக்கு அதிக லாபமில்லை. மற்றவர்களுடன் அவர் சேர்ந்து ஒத்துழைத்தால் மட்டுமே வாக்காளர்களுக்கு வேண்டிய திட்டத்தைச் சட்டமாக்கி அமுல்செய்வதற்கு உதவமுடியும். தனி நபர்கள் கட்சி பலமில்லாமல் தேர்தலில் போட்டியிடும்பொழுது ஜாதி, மதம், செல்வாக்கு முதலிய ஆதரவுகளைத் தேடவேண்டியிருக்கிறது. வேண்டியவர்கள் குணங்களை மிகைப்படுத்தியும், எதிரிகளை அக்கிரமமாகக் குறை கூறியும் பொது மக்கள் மனத்தைக் குழப்புவார்கள்.

தேர்தலுக்குப் பின் மந்திரி சபை அமைக்கும் பொழுதும் கட்சிக் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் ஸ்திரமான அரசாங்கம் ஏற்படாது. பதவியிலிருப்பவரை நீக்கித் தாம் மந்திரியாக வேண்டுமென்று ஓயாமல் சூழ்ச்சி நடக்கும். நல்ல கட்சிக் கட்டுப்பாடுகள் இருக்கும்பொழுதும் இதைக் காண்கிறோம். கட்சிகளே இல்லாமல் போனால் நிலைமை மிகவும் மோசமாகி, ஒரு எதேச்சாதிகாரி அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்குச் சாதகமாகும்.

கட்டுப்பாடுள்ள அரசியல் கட்சிகளின் மூலமே ஜனநாயகம் சாத்தியம் என்பதை ஒப்புக் கொள்ளும் ஒரு சாரார் புதியதோர் விதண்டாவாதத்தைக் கிளப்புகின்றனர். கட்சி அவசியமே. ஆனால் ஒரே ஒரு கட்சி தான் இருக்கவேண்டும். பல கட்சிகள் இருப்பதால் பொது மக்களின் மனத்தில் குழப்பமும், சந்தேகமும்தான் ஏற்படும். ஒவ்வோர் கட்சியும் இதர கட்சிகளின் கொள்கைகளையும், தலைவர்களையும் தூஷிப்பதே தமது முக்கிய வேலையாகக் கொள்ளும். அதனால் பாமர மக்கள் எல்லாக் கொள்கைகளும் ஏமாற்றும், அரசியல் தலைவர் அனைவரும் வேஷக்காரர்கள் என்று அராஜகவாதிகளாகி விடுவர். ஒரு சமூகத்தில் அரசியலில் அக்கறையுள்ளவர்கள் சிலரே. அவர்களை யெல்லாம் சேர்த்து ஒரு கட்டுப்பாடுள்ள கட்சியாக்கி, கட்சிக் கூட்டங்களில் பிரச்னைகளை வாதித்து முடிவுகளையே பொதுஜனங்கள் முன் பிரசாரம் செய்ய வேண்டும். கட்சியால் நியமிக்கப்பட்டவர்களே பொதுத் தேர்தலில் அபேட்சகர்களாக இருக்க வேண்டும். அரசியலில் உற்சாகமிருப்பவர்கள் அனைவரும் அக் கட்சியில்சேர்ந்திருப்பதால், வேறு கட்சிக்கு அவசியமில்லை. ஆதலால் இதர கட்சிகளைத் தடுத்து ஏக கட்சி அரசாங்கம் ஏற்படுத்துவதே சிறந்த ஜனநாயக முறை என்று கூறுகிறார்கள். இந்த வாதத்தை அடிப்படையாகக் கொண்டே சோவியத் ருஷியா, சைனா முதலிய பொது உடைமை அரசாங்கங்கள் நடைபெறுகின்றன. பொதுவுடைமைக் கொள்கைகளை ஏற்காவிட்டாலும், ஹிட்லர், முஸோலினி முதலியவர்கள் இந்த ஏக கட்சி வாதத்தை மேற்கொண்டு தம் அதிகாரத்தை நிலைநாட்டினர். தற்சமயம் போர்ச்சுகல், எகிப்து நாடுகளில் பொதுவுடைமை யில்லாத ஏக கட்சி அரசாட்சி இருந்து வருகின்றது.

இந்த வாதத்தை நன்கு பரிசீலனை செய்தால் இது ஜனநாயகத்துக்கு முற்றிலும் ஒவ்வாததென்று தெளிவாகும். முதலில் சமூகம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. அரசாளும் கட்சியில் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் என்று. சேராதவர்களுக்கு அரசியலில் எவ்வித உரிமையுமில்லை.

சேர்ந்தவர்களுக்கு அவ்வித உரிமை இருப்பதாகக் கட்சி அமைப்பில் விதிக்கப்பட்டிருந்தாலும், படிப்படியாக அவ்விதக் கட்சி ஏதேச்சாதிகாரமாகி, ஒரு தலைவனோ அல்லது சிறிய தலைமை கோஷ்டியோ சர்வாதிகாரியாகிவிடும். கட்சியின் கொள்கையையோ, முறையையோ ஒப்புக் கொள்ளாத அங்கத்தினர் பாடு திண்டாட்டம்தான். அதைத் தீவிரமாகக் கட்சிக்குள் விவாதித்தால், கட்சிக்கு விரோதி என்றும், அதற்கு எதிரான சதிக் கூட்டங்களின் ஒற்றன் என்றும் கருதப்பட்டு, கட்சியிலிருந்து விலக்கப்படுவர். உயிர் தப்பினாலே தம்பிரான் புண்ணியமாகும். ஆதலால் கட்சித் தலைவர்கள் கூறுவதை யெல்லாம் குதூகலத்தோடு ஏற்பதே வழக்கமாகி முடிவில் கடமையாகக் கூடக் கருதப்படும்.

தலைவர் கூட்டத்திலும் ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையின்றிச் சூழ்ச்சிகள் ஓயாமல் நடைபெறும். சோவியத் ருஷியாவின் சரித்திரம் இதற்குப் பயங்கரமான உதாரணமாகும். பொது உடைமைப் புரட்சியில் பங்கு எடுத்துக் கொண்ட தலைவர்களை யெல்லாம் குற்றம் சாட்டிக் கொன்றுவிட்டு ஸ்டாலின் சர்வாதிகாரியானார். உயிருடனிருக்கும் வரையில் அவரை ஒப்பற்ற ஞானி என்றும், மேதாவி என்றும் போற்றி வந்த சகாக்கள் அவர் இறந்த சில நாட்களில் ஸ்டாலினைப் போன்ற கொடிய அரக்கன் உலக சரித்திரத்தில் இல்லை என்று விளம்பரம் செய்து விட்டனர். அவருக்கு நண்பரான பெரியாவைக் கொன்றனர். பிறகு மலங்காவைச் சிறிது காலம் பதவியில் வைத்துக் கீழே தள்ளினர். அதன்பின் மொலடாவ், ஜுகாவ், புல்கானின் முதலியோர் ஒருவர்பின் ஒருவராகத் தள்ளப்பட்டு, இப்பொழுது குருஷாவ் சர்வாதிகாரியாகிவிட்டார். கீழே தள்ளப்பட்டவர்கள் உடனே கொல்லப்படாததிலிருந்து இவர் சிறிது நல்ல சர்வாதிகாரியா யிருக்கலாம் என்று நம்பலாம். ஆனால் சர்வாதிகாரத்தின் தன்மை அதற்குத் தீவிர எதிர்ப்பு ஏற்பட்ட பொழுதே தெரியும்.

ஒரு கட்சி சர்வாதிகார நாடுகளில் பொதுத் தேர்தலை ஒரு மூட வேடிக்கையாகச் செய்து விட்டனர். கட்சியிலிருந்து ஒருவரே அபேட்சகராக நிற்கலாம். ஜனநாயக நாடுகளில் இரண்டாவது அபேட்சகர் இல்லாமலிருந்தால் தேர்தல் இருக்காது. ஒரு கட்சி தேசங்களில் அப்படியல்ல. ஒரே அபேட்சகனுக்கும் எல்லா வாக்காளர்களும் வாக்குக் கொடுத்து வரவேண்டும். அவைகளை எண்ணி அவருக்கு நூற்றுக்கு நூறு கிடைத்ததென்று விளம்பரம் செய்கிறார்கள். இது குழந்தைகளைக்கூட ஏமாற்றமுடியாத விவகாரமாகும்.

ஆதலால், உண்மையான ஜனநாயகத்துக்குக் குறைந்தது இரண்டு கட்சிகளாவது அவசியம். தவிர, வேறு கட்சிகள் ஏற்படுவதற்கு எவ்வித நிபந்தனையோ, தடையோ இருக்கலாகாது. இந்த நிலைமையில், பல கட்சிகள் ஏற்படக் கூடும். எந்தக் கட்சிக்கும் பெரும்பாலோர் பலமில்லாமலிருந்தால், சிறிய கட்சிகள் கூட்டு மந்திரிசபை அமைத்து அரசு புரிய வேண்டும். அது நிலைபெற்றிருக்காது. அவ்வப்போது புதிய கூட்டுறவுகள் ஏற்பட்டு மந்திரி சபைகள் மாறிப் பொதுக் காரியங்கள் சரிவர நடைபெறமாட்டா.

ஆதலால் இரண்டு பெரிய அரசியல்கட்சிகள் இருக்கும் ஜனநாயகமே திறமையுடன் அரசு புரியும் என்பதை உலக சரித்திரம் நிரூபித்திருக்கிறது. பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா முதலிய தேசங்களில் இரண்டு கட்சிகளே வெகு காலம் மாறி மாறி அரசு புரிந்து வந்திருக்கின்றன. இதற்கு மாறாக, பிரான்சில் பல கட்சிகள் இருப்பதால் சில மாதங்களுக்கு ஒருதரம் மந்திரி சபை கவிழ்ந்து புதிய மந்திரி சபை ஏற்படுகிறது.

இரண்டு பெரிய கட்சிகள் மூலமாக ஜனநாயகம் சிறப்பாக நடைபெறுமானாலும், இரண்டே கட்சிகள் இருக்க வேண்டுமென்று சட்ட மூலமாகவோ, வேறுவழியிலோ கட்டுப்படுத்துவது ஜனநாயகத்துக்குவிரோதமாகும். 30 வருஷங்களுக்கு முன் பிரிட்டனில் கன்சர்வடிவ், லிபரல் கட்சிகளே செல்வாக்கு பெற்றிருந்தன. ஐம்பது வருஷங்களுக்கு முன் தோன்றிய தொழில் கட்சி மிகவும் பிரபா



இலங்கையில் முதன் முதலாகக் குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தின் பேரவை சென்ற செப்டம்பர் 7ம் தேதி கொழும்பு விவேகானந்த சபைக் கட்டடத்தில் அரசாங்க ஸ்வபாஷா இலாகா தமிழ்ப் பகுதி அதிகாரி நாவலியூர் திரு சோ. நடராஜா அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் திரு நடராஜா தமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்துகிறர். சென்னையில் திரு அழ. வள்ளியப்பா தலைமையில் இயங்கும் குழந்தை எழுத்தாளர் சங்கத்துடன் இந்தச் சங்கம் இணைக்கப்பட்டுள்ளது.

சைப் பட்டுப் பொது மக்களின் ஆதரவைப் பெற்று லிபரல் கட்சியின் ஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பழைய கட்சிகள் தமது பூர்வ சம்பிரதாயங்களில் சிறைப்பட்டுப்புதியபிரச்னைகளைத் தீர்க்க முடியாமல் போவது சகஜம். அப்பொழுது அவைகளை விலக்கிப் புதிய கட்சிகள் முன்வருவது அவசியமாகும். பலாத்காரமில்லாமல் மந்திரி சபைகளையும், கட்சிகளையும் மக்கள் நீக்கி, புதிய மந்திரி சபைகளையும் கட்சிகளையும் அதிகாரத்தில் வைப்பதே ஜனநாயகத்தின் சாரமும், பெருமையும். பலகட்சிகள்தோன்றி, வளர்ந்து, அதிகாரம் பெறுவதற்கு உரிமையும், வசதியும் இருப்பது ஜனநாயகத்தின் அடிப்படையான தத்துவமாயினும், அவ்வித கட்சிகளின் குறைகளையும், அவற்றின் மூலம் அரசு புரிவதன் கஷ்டங்களையும் எடுத்துரைப்போர்களின் எச்சரிக்கைகளை அலட்சியம் செய்வது தவறு.

ஒரு அரசியல் கட்சியை அமைத்துக் கட்டுப்பாட்டுடன் நிர்வகிப்பது மிகவும் சிரம சாத்தியமானது. பலர் மாறுபட்ட உத்தேசங்களுடன் கட்சியில் சேருவார்கள். செலவுகளுக்குப் பணம் வேண்டும். பலரிடமிருந்து சிறு தொகைகள் சேர்ப்பதில் அதிக தொந்தரவு. ஆதலால் பணக்காரர்களிடமிருந்து பெரிய தொகைகள் வாங்குவது சுலபமென்று எல்லாக் கட்சிகளும் இந்தக் குறுக்கு வழியை நாடுகின்றன. ஆனல் அதைப் போல் அரசியல் கட்சிகளுக்கு அபாயம் வேறொன்றுமில்லை. தாம் கொடுக்கும் பணத்துக்குப் பணக்காரர்கள் அவசியம் கைம்மாறு எதிர்பார்ப்பார்கள். அது நேரில் பணமாக இருக்காது. தனி நபருக்கு விசேஷச் சலுகைகூடத் தேட மாட்டார்கள். தங்கள் தொழில்களுக்கும், முதலாளிக் கூட்டங்களுக்கும் லாபம் கிடைக்கும் வசதிகளைத் தேடுவார்கள். அது நாட்டுக்கு நலமென்றும் வாதிப்பார்கள். நிராகரித்தால் கட்சிக்குப் பணம் கொடுப்பதை நிறுத்தி விடுவார்கள்.


அவ்வாறே ஜாதி, மதத் தலைவர்களின் ஆதரவைத் தேடுவதும் சகஜமே. பொது மேடைகளில் அவ்வித்தியாசங்களுக்கு எதிராகக் கர்ஜித்து விட்டு, உடனே தேவர், பிள்ளை என்று பேரம் செய்வதை நாம் நேரில் அனுபவித்திருக்கிறேமல்லவா?

பொதுமக்களிடம் தாம் செய்யக் கூடியதை மிகைப்படுத்தியும், அதற்காக வேண்டிய செலவுத் தொகைகளைக் குறைத்தும், கஷ்டங்களை மறைத்தும், ஏமாற்றுவது ஜனநாயகத்தில் எல்லாக் கட்சிகளும் கையாளும் தந்திரமாகும். கட்சிக்கு மெஜாரிட்டி கிடைக்காவிட்டால் அதன் திட்டங்களை அமுல் செய்வதற்கு அவகாசமிராது. பெரும்பான்மையாக இருந்து மந்திரி சபை அமைக்கவேண்டி வந்தால், எப்படியாவது சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளித்துக் கொள்ள முயற்சி செய்வார்கள். தேர்தல் காலத்தில் உறுதி கூறும் திட்டங்களில் ஒரு கணிசமான பாகத்தைப் பதவியில் நிறைவேற்றினல் திருப்தி அடையலாம்.

ஒரு கட்சியின் தலைவர்களுக்கு விசால நோக்கு இல்லாமலிருந்தால், அதில் பொது நன்மையை நாடும் சுதந்திர மனிதருக்கு இடமில்லாமல் செய்து விடுவார்கள். சுயநலவாதிகளும், குறுகிய புத்தியுள்ளவர்களும் கட்சியின் செல்வாக்கையும், அதன்மூலம் கிடைக்கும் அதிகாரத்தையும் அக்கிரமமாகப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள்.

இக்குறைகள் இருந்தபோதிலும் அரசியல் கக்ஷிகள் மூலமே ஜனநாயகம் நடைபெறுவது சாத்தியமாகும். மக்களின் அரசியல் அறிவு வளரவே, கட்சிகளின் தாரதம்மியத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு ஆற்றலுண்டாகும். அவர்களுக்குப் பிடிக்காத கட்சிகளின் பலம் குறைந்துகொண்டே வரும். தவிர, எக்கட்சியும் தான் பதவிவகிக்கும் காலத்தில் ஏதாவது பொது நன்மைக் காரியங்களைச் சாதித்தே தீரும். இல்லாவிட்டால் பொதுத் தேர்தலில் ஜனங்களை முற்றிலும் ஏமாற்ற முடியாது.

ஆதலால் அரசியல் கட்சிகளின் குறைகளை நினைத்து ஜனநாயகத்தைக் கைவிடுவது, மலத்தை வெறுத்துக் குழந்தையைக் குப்பையில் போடுவது போலாகும். ஏதேச்சாதிகாரத்துக்கு அடிமைப்பட வேண்டி வரும்.



அது உலக முழுவதிலும் விற்கப்படுகிறது!

ஆப்ரிக்கா, இந்தோனேஷியா, பர்ஷியா
ஈஜிப்டிலும் மற்றும் இங்கிலாந்து
அமெரிக்காவிலும் கூட.

உலகத்தின் இரு கோளங்களிலும் உள்ள பெரும்பாலும் எல்லை தேசங்களிலும் லோமா விற்கப்பட்டு வருகிறது. அதனுடைய தேவை இன்னும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது;

லோமா

உலகமுழுவதும்
புகழ்ப்படும் இயற்கையான
ஹேர் டார்க்னர்.

MPS-TAM.

ஸோல் ஏஜண்டுகள் :- எம். எம். கஸ்தூர்லால — ஆமதபாத்
ஏஜண்டுகள் :- வி. கரோட்டம் அண்ட் கோ. பம்பாய்-2. போன்; 30575

சென்னை ஏஜண்டுகள் : தே பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் : மிர்சுக் கதிர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

ஸர்வ-தேவ-விலாஸம்

இன்று தென்னாட்டுக்குத் தலைநகராக விளங்கும் சென்னை தற்போதிருக்கும் புது உருவைச் சென்ற முந்நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே அடைந்திருந்த போதிலும், இன்றைக்கு இந் நகருக்குள் அடங்கிய மயிலை, திருவல்லிக்கேணி, எழும்பூர், நுங்கம்பாக்கம் முதலிய இடங்களெல்லாம் மிகப் பழைமை வாய்ந்த ஊர்களாகும்; இவை தொண்டை நாட்டைச் சார்ந்தனவும், சரித்திரப் பழைமையும், பண்பாட்டுச் செழிப்பும், கலைத் தொடர்பும் கொண்டன. நாம் வசித்துவருவதும், நம் வாழ்க்கைத் துறையனைத்துக்கும் தலையூற்று விருந்துவருவதுமான இந்தச் சென்னை நகரின் பழம் வரலாற்றை யார்தான் அறியவும் ஆராயவும் விரும்ப மாட்டார்கள்?


பழம் சென்னையைப் பற்றிய வரலாறு என்றால் ஆராய்ச்சியாளர் கும்பனி காலத்திலும் ஆங்கில ஆட்சி துவங்கிய நாட்களிலும் ஆங்கில அதிகாரிகள் எழுதி வைத்துப்போன தஸ்தாவேஜுகளையும், ஹெ. டே. லவ் எழுதிய பண்டைச் சென்னைத் துணுக்குகள் **(Vestiges of old Madras)** போன்ற புத்தகங்களையுமே புரட்டுவர். இருநூறு. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சென்னையின் தோற்றம் எப்படி இருந்தது. இங்கு எவ்விதப் பெருமக்களும், குடிகளும் வாழ்ந்து வந்தனர் என்றெல்லாம் தெரிந்துகொள்வதற்கு நமக்கு ஆவல் ஏற்பட்டால், இம் மேனாட்டினர் எழுதி விட்டுப்போன நூல்களையே படிக்கவேண்டும்; அவற்றுள் சென்னை நகரம் குப்பத்திலிருந்து வளர்ந்தது போலவும், இங்கிருந்தவர் அவ்வளவு கண்யமான பண்பாடு உடையவர் அல்லர் என்பதுபோலவும் எழுதியிருக்கும்.

ஆனால் இது உண்மை அல்ல என்றும் உண்மைச் சென்னையையும், இங்கிருந்து வந்த பெரியோரின் வாழ்க்கையையும் காட்டும்படியானதும், இங்கிருந்த புலவரே எழுதி வைத்ததுமான நூல்கள் தமிழிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் உள. இவற்றில் சிலவற்றை முன்பே ஆராய்ந்து எழுதியிருக்கிறார் பேராசிரியர் **டாக்டர் வே. ராகவன்.** சில ஆண்டுகளுக்கு முன் பெரம்பூர்-அயனவரம் இவ்விடங்களைச் சேர்ந்தவரும், பின் புதுச்சேரியில் பிரெஞ்சு கவர்னர் ட்யூப்ளே என்பவருக்குத் துபாஷ் ஆகவும் இருந்த **ஆனந்தரங்க பிள்ளையின்** சரித்திரத்தைக் கூறும் சம்பூகாவியம் ஒன்றை இவர் ஆராய்ச்சியுரையுடன் வெளியிட்டார். தற்போது, அடையாறு கையெழுத்து நூல் நிலையத்தில் ஓலைச் சுவடியொன்றிலிருந்து எடுத்து, இந்த **'ஸர்வ-தேவ-விலாஸம்'** என்ற சென்னை சரித்திரக் காப்பிய நூலை, நன்கு ஆராய்ந்து ஸம்ஸ்க்ருத மூலம், ஆங்கில ஆராய்ச்சி இரண்டுடனும் வெளியிட்டிருக்கிறார்

இந்த நூல் சுமார் கி. பி. 1800 ல் சென்னையில் எழுதப்பட்டது. இதில் அக்காலத்திய கோட்டையும் அதைச் சுற்றிய நகரமும் அவற்றை அண்டிய திருவல்லிக்கேணி, கொஞ்ச தூரத்தில் உள்ள நுங்கம்பாக்கம், திருவொற்றியூர், தொட்டிக்கலை, திருநீர்மலை, மற்றும் நகரத்துக்குள் உள்ள சில தெருக்களும் பாக்கங்களும் வருணிக்கப்படுகின்றன. நுங்கம்பாக்கம், மயிலை இவற்றைச் சுற்றி அந்தக் காலத்தில் இருந்த ஏரிகள் சொல்லப்படுகின்றன. ஒற்றவாடைச் சுவரும், சுவருக்கு வெளியே தன வணிகரும் பிரபுக்களும் தங்கி இன்புற்றிருந்த பெரும் தோட்டங்கள் அக்காலத்தில் பல இருந்தன; அவற்றில் பல இங்கே பேசப்படுகின்றன. பரம்பரைப் பெரிய மனிதர்களாகவும், கும்பனியுடன் வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டும், அவர்களுக்குத் துபாஷ்களாகவும் இருந்த பிரபுக்களில் பலர் பெயருடன் இதில் விரிவாய் வருணிக்கப்படுகிறார்கள்; அவர்களில் சிலரின் சந்ததியார் இன்றும் சென்னையில் இருந்து வருகின்றனர். இப்படி வருணிக்கப்படும் பிரபுக்கள்: தொட்டிக்கலை வேதாசலமுதலியார்; திருவல்லிக்கேணி அண்ணாசாமி பிள்ளை; நுங்கம்பாக்கம் தேவநாயக முதலியார்; மணலி வேங்கட கிருஷ்ண முதலியார்; காளிங்கராயர்; ஸ்ரீரங்க நாயகம்; இன்னும் பல தமிழ் தனவந்தர்களும், அவர்களுக்கு உதவியாயிருந்த பிராமணப் பிரபுக்களும், தெலுங்கு வைசியருள் கொல்லாரவணப்பச் செட்டி, லிங்கப்பா, கோடகிருஷ்ணன் முதலியவரும், பிண்டுகூரி வேங்கடாத்ரி என்பவரும் வருணிக்கப்படுகிறார்கள்.

கும்பனியோடு இவர்களுக்கு இருந்த தொடர்பும், இவருடைய செல்வமும் ஒரு புறம் இருக்க, இந்த ஸர்வ-தேவ-விலாஸத்தில் இந்தப் பிரபுக்களுடைய இரண்டு விஷயங்கள் சிறப்பாகவும் விரிவாகவும் பேசப்பட்டிருக்கின்றன. ஒன்று இவர்கள் செய்த தர்மங்கள்; இரண்டு இவர்கள் கலைகளுக்கு அளித்து வந்த ஆதரவு. இவர் ஒவ்வொருவரும் சென்னையிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள கோயில்களுக்குத் தர்மகர்த்தாவாக இருந்து உத்ஸவங்களை விரிவாக நடத்தி வந்தனர். அண்ணாசாமி பார்த்தசாரதி கோயிலுக்குத் தர்மகர்த்தாவாயிருந்து கும்பனிக்காரருடன் பல சண்டைகளைப் போட்டார். லிங்கப்பா திருவொற்றியூர் கோயில் தர்மகர்த்தாவாக இருந்தார். தேவநாயகத்தின் பார்வையில் நுங்கம்பாக்கம் அகஸ்தீச்வரர் ஆலயம் இருந்தது. பிண்டுகூரி வேங்கடாத்ரி என்ற தெலுங்கர் பவழக்காரத் தெருவிலுள்ள கிருஷ்ணன் கோயிலையும், ஸ்ரீரங்கநாயகருக்கு உதவியாயிருந்து திருநீர்மலைக் கோயிலையும் மேல்பார்வையிட்டு வந்தார். தொட்டிக்கலை (கலைசை) சிதம்பரேச்வரர் கோயில் பரம்பரை தர்மம் வேதாசல முதலியாரின் குடும்பத்தில் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது.

தத்தம் தோட்டத்தில் இந்தப் பிரபுக்கள் வாரத்தில் ஒருநாள் கூடிப் பெரிய ஸதஸ்களை நடத்தி, அவற்றில் பண்டிதர்களைக் கௌரவித்தனர். இப்படிப்பட்ட ஸதஸ் இந்நூலில் மூன்று இடங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் சென்னையில் இருந்து, மேற்



பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவுடன் எல்லைப் பிரச்னை சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தில்லிக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதமர் பெரோஸ்கான் நூன் கொட்டும் மழையில் ராஜ கட்டத்திலுள்ள காந்தி சமாதிக்குச் சென்று மலர் வட்டம் அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

சொன்ன பிரபுக்களால் ஆதரிக்கப்பட்ட சில ஸம்ஸ்க்ருதப் பண்டிதர்களின் பெயர்களை நாம் இந்த நூலில் காண்கிறோம்.

பண்டிதருடன் பாடகரும், நாட்டிய மங்கைகளும் இவர்களால் போற்றப்பட்டு வந்தனர். இந்தப், பிரபுக்கள் நல்ல ரசிகராயிருந்தனர். ஒவ்வொரு ஸதஸ்ஸிலும் பாட்டும் ஆட்டமும் நடந்தன. அந்த ஸதஸ்ஸுகளிலிருந்து வளர்ந்தவையே தற்போதைய சங்கீத சபைகள். கர்நாடக சங்கீதத்தின் சரித்திரத்தில் ஈடுபட்டவருக்கும் இந்த சர்வதேவ விலாசம் முக்கியமான நூல். ஏனெனில் கர்நாடக சங்கீதத்தில் முன்னிருந்த பெரியார்களைப் பற்றிக் கர்ணபரம்பரையான கதைகள் நமக்குத் தெரியுமே அல்லாது அவர்களைப் பற்றி நூல் ஒன்றிலும் அத்தாட்சிபூர்வமான வரலாறு எழுதி வைக்கப்படவில்லை. இந்த ஸர்வ-தேவ-விலாஸம் ஒன்றிலேதான் கர்நாடக சங்கீத வித்வான்கள், விதுஷிகள் பெயர்களும், அவர்களை ஆதரித்த பிரபுக்கள் யார் யார் என்றும் முதன் முதலாக நாம் காண்கிறோம். தொட்டிக்கலை வேதாசலம், பல்லவி துரைசாமி அய்யரை ஆதரித்து வந்தார். பின்டுகூரி வெங்கடாத்ரி தியாகராஜ ஸ்வாமிகளின் குருவான சுண்டிவெங்கடரமணய்யாவை ஆதரித்து வந்தார். பாட்டிலும், ஆட்டத்திலும் புகழ் பெற்ற கும்பகோணம் நாராயணி, தஞ்சை மங்கா, வீரா நாச்சியார், மீனாக்ஷி என்ற பிரபல தாசிகளைப் பற்றியும் இந்த நூல் சிறப்பாகப் பேசுகிறது.

இப்படிச் சென்னையையும், இதன் கலைத் தொடர்புகளையும் விளக்கும் இந்த நூலைப் பல பழைய தஸ்தாவேஜுகளையும், மற்றச் சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்து, இதில் வரும் பெயர்களையும், இடங்களையும் கண்டுபிடித்து மிக பிரயாசைப்பட்டு, டாக்டர் ராகவன் வெளியிட்டிருக்கிறார். இந்த நூலில் வரும் பண்டைப் பிரபுக்களின் வீடுகளைத் தேடி, அவர்களுடைய தற்காலத்திய சந்ததியாரைக் கண்டுபிடித்து, பல விஷயங்களைத் திரட்டி எழுதியிருக்கிறார். தொட்டிக்கலை வேதாசல முதலியாரின் உருவப்படம் ஒன்றையும் தேடி எடுத்து இந்நூலில் வெளியிட்டிருக்கிறார்.

பேராசிரியர் ராகவன் செய்திருக்கும் ஆராய்ச்சியையும் பணியையும் மெச்சி, கனம் எம். பக்தவத்ஸலம் முகவுரை எழுதியிருக்கிறார்கள்; மந்திரி தம் முன்னுரையில் பண்டைப் பண்பாட்டையும், கலையையும், கோயில் தர்மத்தையும் இந்த நூலில் காணப்படும் பிரபுக்கள் பாதுகாத்து வந்ததையும், சென்னை தொன்றுதொட்டு வந்த பண்பாட்டுத் தொடர்பு கொண்ட இடம் என்றதையும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இந்நூலின் ஏட்டுப் பிரதியை இதுகாறும் பத்திரமாய்ப் பாதுகாத்து வந்ததற்கும், இப்போது இதை வெளியிட்டதற்கும் அடையாறு நூல் நிலையத்தாருக்கு நம் நன்றி உரியது.

கிடைக்குமிடம்: அடையாறு நூல் நிலையம், சென்னை; விலை: ரூ. 5.



பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

3. அர்ஜுனன் சோகம்

[விதுரர் வரவும்; யாதவ குல அழிவும், பாண்டவர்கள் பரகதி அடைந்ததும்.]

தர்மபுத்திரர், ஒன்றையுமே தனதெனக் கருதாமல், குடிகளை ஆண்டு வந்தார். முகுந்தனிடத்தில் மனத்தைச் செலுத்தின அவருக்கு இம் மண்ணுலகில் வாய்த்த பெருமைகளொன்றும் பெரிதாகத் தோன்றவில்லை.

உத்தரையின் கருவில் இருந்தபோதே பரீக்ஷித்து மன்னன் கடவுளைக் கண்டானல்லவா? சிசுவைக் காப்பதற்காகக் கருப்பையில் கட்டைவிரலளவில் நுழைந்த கண்ணன் உடனே மறைந்து விட்டான். பத்து மாதம் ஆனதும் பரீக்ஷித்து பிறந்தார். அப்பொழுது பெரியோர்கள் இக்குழந்தையைப் பார்த்து இவன் தன் குலத்தின் பெருமையைப் பெருக்குவான் என்றார்கள்.

இராமனைப்போல் ராஜ்யத்தை நடத்தியும், சிபியைப்போல் கொடையாளியாகவும், பரதனைப்போல் கீர்த்தியைப் பரப்பியும், பார்த்தனைப்போல்வில்லாளியாகவும், அக்கினியைப் போல் அண்ட முடியாதவனாகவும், கடலைப் போல் கரைகாண முடியாதவனாகவும், சிங்கம் போல் திறமுள்ளவனாகவும், இமயமலை போல் வணங்கப்பட்டவனாகவும், பூமியைப்போல் பொறுமையுள்ளவனாகவும், பெற்றோரைப்போல் பிழையைப் பாராட்டாதவனாகவும் இருப்பான் என்று அவர்கள் தருமனிடம் சொன்னார்கள். மேலும், முனிகுமாரன் சாபத்தினால் பாம்பால் கடியுண்டு இறக்கப் போவதையும், அதன்முன் சுகர் வாயால் பாகவதம் கேட்டு ஆன்ம சொரூபத்தின் உண்மையை அறியப் போவதையும் சோதிடம் மூலமாகக் கண்டு தெரிவித்தனர். விஷ்ணுவினால் காப்பாற்றப் பட்டதினால் அக்குழந்தைக்கு விஷ்ணுராதன் என்ற பெயர் வந்தது. கருப்பையில் கண்ட கண்ணன் இவன்தானோ என்று பார்த்த மனிதரிடம் எல்லாம் இடைவிடாது பரீட்சை பார்த்ததினால் இவனுக்குப் பரீக்ஷித்து என்ற பெயரும் பொருந்தியது.

இதனிடையே, பாரதப்போரில் தான் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டு தீர்த்த யாத்திரை சென்ற விதுரர் ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பினார். அவரைக் கண்டு தருமபுத்திரர் முதலியோர் மரியாதை செய்து ஆனந்தப்பட்டார்கள்.

பிறகு தருமர் "நம் சுற்றத்தினரான யாதவர்கள் தங்கள் நகரில் சுகமாக வாழ்ந்துவருகிறார்களா? தாங்கள் அவர்களைப் பார்த்தீர்களா? அல்லது கேள்விப் பட்டீர்களா?" என்று விதுரரிடம் வினவினார். யாதவ குலம் அழிந்துபோனது விதுரருக்குத் தெரிந்தேயிருந்தது. ஆனால் அதை மட்டும் விதுரர் தருமருக்குச் சொல்லவில்லை. வேறு தாம் கண்டதும் கேட்டதும் எல்லாம் எடுத்துரைத்தார். ஏற்கெனவே நொந்திருந்த தரும

ரின் மானத்தை மேலும் புண்படுத்த அவர் விரும்பவில்லை.

பாண்டவர்கள் குடும்பத்தில் ஈடுபட்டுக் காலத்தைக் கழித்து வந்தார்கள். கடப்பதற்கரிய காலமும் கடந்து கொண்டே வந்தது. இதைக் கண்ட விதுரர் ஒருநாள் திருதராஷ்டிரனிடம் சென்று அவருக்கு விரக்தி வருவதற்காகச் சில உண்மைகளை எடுத்து உரைக்கலானார். "தந்தை, தமையன், தம்பிமார், தனயர், நண்பர் அனைவரும் இறந்துவிட்டனர். முதுமை, உடம்பைத் தின்றுவிட்டது. பிறர் வீட்டில் குடியிருக்கிறீர். உமது மைந்தரைக் கொன்ற பீமன் இடும் அன்னத்தை நாய்போல் உண்கிறீர். இப்படியிருந்தும் உமக்கு ஏன் இந்தவாழ்வில் ஆசை? கண்காணாக் காட்டுக்குச் சென்று பயனற்ற இவ்வுடலை விடுவதே நலம். நீங்கள் உறவினர் கண்களுக்கு எட்டாத வடதிசையை நோக்கிப் போவீர்" என்றார்.

இதைக்கேட்ட கண்ணில்லாத திருதராஷ்டிர மன்னன் பாசத்தை அகற்றிவிட்டுத் தம் தம்பி விதுரர் காட்டிய வழியைப் பின்பற்றி வெளியேறினார். காந்தாரியும் அவரைத் தொடர்ந்தாள். அன்றிரவு தாய்தந்தையரைக் காணாத தருமர் அவர்கள் எங்கு சென்று பரிதவிக்கின்றனரோ என்று எண்ணி மிக்க வருத்தத்தை அடைந்தார். அச்சமயம் அங்கு நாரதரும் தும்புருவும் வந்து சேர்ந்தார்கள். அவரிடம் திருதராஷ்டிரர் போன இடத்தைக் குறித்துத் தருமர் வினவினார். நாரதரும் தர்மருக்கு ஆறுதல் கூறித் தேற்றினார்: 'ஒருவரையும் குறித்து நீர் வருந்தலாகாது. கடவுள் பிராணிகளைக் கூட்டிவைக்கிறார். பிரிக்கிறார். தன்னுடையது என்ற மோகத்தினால் உண்டாகும் அன்பே துயரத்துக்குக் காரணமாகும். ஆகையால் 'என்னை விட்டுப் பிரிந்த திருதராஷ்டிரன் எவ்விதம் உயிர் தரிப்பார்' என்ற விரகத்தை விட்டுவிடும்.

"திருதராஷ்டிரர், விதுரருடனும், காந்தாரியுடனும் கூடி இமயமலையின் தென் பாகத்தை அடைந்திருக்கிறார். கங்கையில் நீராடி, அந்த நீரையே அருந்திக்கொண்டு எஞ்சிய காலத்தைக் கழித்து வருகிறார். இன்னும் ஐந்து நாட்களில் அவர் உடல் சாம்பலாகப் போகிறது. அவருடன் காந்தாரியும் இறப்பாள். அப்பொழுது விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக வெளியேறி விடுவார்.

"காலத்தைக் கோலாக உடைய கண்ணனும் அரக்கரை அழிப்பதற்காக இப்புவியில் அவதரித்தார். அவர் வந்த காரியமும் அனேகமாய் முடிந்து விட்டது. அவர் பூமியில் இருக்கும் வரை நீங்களும் உயிருடன் வாழ்வீர்கள்" என்று வரப் போவதைத் தெரிவித்து விட்டு நாரதர் மறைந்தார்.

* * *

அர்ஜுனன், கண்ணனுடன் சில நாட்கள் சேர்ந்திருக்க வேண்டுமென்ற



அவா மிருந்தவனாய்த் துவாரகைக்குச் சென்றிருந்தான். சில மாதங்கள் ஆகியும் அவன் திரும்பவில்லை. இதனிடையே ஹஸ்தினாபுரத்தில் தருமர் அனேக அபசகுனங்களைக் கண்டார். இவைகளைத் தம்பியான பீமசேனனிடம் தெரிவித்தார். அர்ஜுனன் துவாரகை சென்று ஏழு மாதங்களாகியும் திரும்பி வராததை எண்ணி வருத்தமடைந்தார். அப்பொழுது அர்ஜுனனும் திரும்பி வந்தான். அவன் முகம் களையற்று இருந்தது. கண்களில் நீர் வடிந்தது. உடனே தருமருக்கு நாரதர் சொன்ன வார்த்தைகள் மனத்தில் தோன்றின. பயத்துடன், "துவாரகையில் அனைவரும் சௌக்கியமாக இருக்கின்றனரா?" என்று அர்ஜுனனைக் கேட்டார். அதற்கு அர்ஜுனன் கண்ணும் கண்ணீருமாக மறைந்து போன கண்ணனை எண்ணி மனம் கலங்கினவனாகத் தருமனை நோக்கிப் பின்வருமாறு பதில் கூறினான்: "அரசே! ஹரி என்னை வஞ்சித்துவிட்டான். எவனுடைய அருளினால் நான் அளவில்லாத பலத்தை அடைந்து இந்திரனையும் ஜயித்தேனோ, எவனுடைய மகிமையினால் பீமன் ஜராஸந்தனை வதம் செய்தானோ, எவனுடைய உதவியால் திரௌபதியின் கூந்தலைக் கையால் பிடித்து இழுத்த துச்சாஸனன் முதலியோரின் மனைவியர் கூந்தல் கட்டாமல் கலைந்து கிடக்கின்றனவோ, எவன் வந்து அருந்தின பருக்கையினால் துர்வாஸரும் அவருடைய பதினாயிரம் சீடர்களும் பசி தீர்ந்தவர்கள் ஆயினரோ, எவனுடைய பெருமையினால் சிவன் என்னுடைய வீரத்தைக் கண்டு எனக்குப் பாசுபதம் என்ற அஸ்திரத்தைக் கொடுத்தனனோ, எந்தக் கண்ணனைச் சுற்றமாக அடைந்து கடல் போன்ற கௌரவ சேனையைத் தாளாகத் தாண்டினேனோ அவன் நம்மை விட்டு அகன்று விட்டான்! நண்பனும், அன்பனுமான அந்தப் புருஷோத்தமனை விட்டுப் பிரிந்த நான் திறம் அற்றவனாகப் போய் விட்டேன். கோபாலனுடைய பதினாயிரம் பெண்களைக் காப்பாற்றத் துணிந்த நான் இடையர்களால் ஒரு பெண்ணைப் போல் ஜயிக்கப்பட்டேன். அதே வில்லும், அதே அம்பும், அதே தேரும், யாவும் கண்ணன் இல்லாமல் சாம்பலில் செய்த ஓமம் போலும், வஞ்சகனிடம் வாங்கின பொருள் போலும், உப்பு பூமியில் இட்ட விதைபோலும் பயனற்றனவாக மாறிவிட்டன.

"யாதவர்களில், ஐந்தாறு பேரைத் தவிர, அனைவரும் அந்தணன் சாபத்தினால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மாய்ந்து விட்டனர்.

"இதெல்லாம் கண்ணனுடைய விளையாட்டு. நம்மைக் கொண்டு கௌரவர்களைக் கொன்றார். யாதவரைக் கொண்டு சால்வன் முதலியோரைக் கொன்றார். யாதவரை அவர்களைக் கொண்டே கொன்றார்.

"இப்பொழுதும் கண்ணன் சொன்ன மொழிகளை நினைத்தால் எனது மனம் பரவசம் அடைகிறது" என்று விரிவாகக் கூறி ஓய்ந்ததும், அர்ச்சுனனுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது. போர்க்களத்தில் கண்ணன் காட்டிய வழியைப் பின்பற்றி மனம் தேறினான்.

யாதவ குலம் நாசமடைந்த வரலாற்றைக் கேட்ட தருமர் தாமும் இப்புவியை விட்டு அகல வேண்டும் என்று தீர்மானித்தார். தன்னுடைய பேரன் பரீக்ஷித்தை, கடலை இடை ஆபரணமாகத் தரித்த பூமிக்கு மன்னனாக அபிஷேகம் செய்து வைத்தார். அநிருத்தனின் மைந்தன் வஜ்ரனை மதுரைக்கு அதிபதியாக நியமித்தார். தம் பொருள்களையெல்லாம் கொடுத்தார். 'நான்' என்ற எண்ணத்தை அகற்றினார். மனத்தையும் உயிரையும் ஒருங்சுக ஒடுக்கி, ஆத்மாவை ஆண்டவனிடம் ஒப்புவித்தார். மரவுரியுடுத்து ஆகாரமின்றி, பித்தன் என்ற தோற்றத்துடன், கடவுளையே சிந்தனை செய்து கொண்டு தம் முன்னோர் சென்ற வட திசையை நோக்கிப் புறப்பட்டார்.

தம்பிகள் நால்வரும் தருமனைப் பின் தொடர்ந்தனர். கண்ணன் தாள்களையே மனத்தில் வைத்துக் கொண்டு, பக்தி பெருகி, சிற்றின்பத்தைப்பற்றி நிற்பவர் அடைய முடியாத பதவியை ஐவரும் அடைந்தார்கள். விதுரரும், சாபத்தினால் இழந்த யம பதவியைத் திரும்பவும் அடைந்தார். பாஞ்சாலியும் பகவானை அடைந்தாள். (தொடரும்)


செப்டம்பர் வெளியீடு
துன்பத்தின் சூறாவளியிலும் சுடர்விட்டுப்
பிரகாசிக்கும் பிறவிப்பாசம் . . .
நான் வளர்த்த தங்கை
டைரக்ஷன்
ch. நாராயணமூர்த்தி B.A.,
அஸோஸியேட் டைரக்ஷன் T.K. ராமு
வசனம் ரா. வே
ஒளிப்பதிவு P. ராமசாமி
சங்கீதம் P. நாகேஸ்வர ராவ்
ஸ்டுடியோ: நெப்டியூன்

பாண்டிமாதேவி

அத்தியாயம் 23

சேந்தன் செய்த சூழ்ச்சி

பறளியாற்று வெள்ளம் காரணமாகச் சுற்று வழியில் அரண்மனைக்குப் புறப்பட்டிருந்த சேந்தனும், தளபதியும், திருநந்திக் கரையை அடையும் போது ஏறக்குறைய நடுப்பகல் ஆகி விட்டது. வல்லாளதேவனின் உடல் தான் குதிரைமேல் திருநந்திக் கரைச் சாலையில் சென்று கொண்டிருந்ததே ஒழிய உள்ளம் முழுதும் அரண்மனையில் நடந்து கொண்டிருக்கும் கூற்றத் தலைவர் கூட்டத்தில் லயித்திருந்தது.

"அடாடா! இந்தப் பாழாய்ப் போன பறளியாற்று வெள்ளம் நம்முடைய திட்டத்தையே மாற்றி விட்டதே? இன்னுமா அரண்மனையில் கூற்றத் தலைவர் கூட்டத்தைத் தொடங்காமல் இருக்கப் போகிறார்கள்? நேர் வழியாகப் புறப்பட்டுப் போயிருந்தால் இதற்குள் நாமும் ஒழுங்காக அரண்மனைக்குப் போய்க் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கலாம். நாம் போகவில்லை என்பதற்காகக் கூட்டம் நின்றுவிடவா போகிறது? நமக்குத்தான் பல விதத்தில் நஷ்டம்! இப்போதுள்ள தென் பாண்டி நாட்டு அரசியல் சூழ்நிலையில் மாறுதலைச் 'செய்வதற்கான முக்கியமான பல செய்திகளைக் கூட்டத்தில் விவாதித்திருப்பார்கள். போய்க் கலந்து கொண்டிருந்தால் கூற்றத் தலைவர்களும், மகாமண்டலேசுவரரும் எந்த நோக்கத்தில் கருத்துக்களை வெளியிடுகிறார்கள் என்று தெரிந்துகொண்டிருக்க



நா. பார்த்தசாரதி

லாம். ஊம்! நினைத்துப் பயன் என்ன? கூட்டம் முடிவதற்குள் அங்கு எப்படிப் போக முடியும்?

இத்தகைய நினைவுகளோடு குதிரையில் சென்று கொண்டிருந்த வல்லாளதேவன் அடிக்கொரு தரம் பெருமூச்சு விட்டான். பக்கத்தில் குதிரையை மெதுவாகச் செலுத்தியவாறே வந்து கொண்டிருந்த நாராயணன் சேந்தன் தளபதியின் முக மாறுதல்களையும், பிற செயல்களையும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அக் காலத்தில் திருநந்திக் கரையும், அதைச் சூழ அமைந்திருந்த பூதப்பாண்டி முதலிய சிற்றூர்களும் சமணர்களும் அவர்களுடைய திருமடங்களும், தவப்பள்ளிகளும் நிறைந்துள்ள பிரதேசமாக இருந்தன. காலஞ் சென்ற பேரரசர் பராந்தக பாண்டியர் சைவ சமயத்தைப் போற்றி வளர்த்தாலும் ஏனைய சமயங்கள் வளரவும் உறுதுணை புரிந்தார். தமது அரசாட்சிக் காலத்தில் திருநந்திக் கரையிலுள்ள சமணப் பெரும்பள்ளிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக அவர் அளித்த பள்ளிச் சந்தங்கள் பல. சமணர்கள் சீராக வாழ்ந்த காலத்தில் திருநந்திக் கரை மலைப் பகுதிகளில் அற்புதமான குகைக் கோவில்களைக் குடைந்தார்கள். சமண மதம் இப்போதுள்ள சூழ்நிலையில் அவ்வளவு சிறப்போடில்லையானாலும் அதன் பெருமைக்குரிய அடையாளங்கள் அங்கங்கே தென்படத்தான் செய்தன.

சமணர் திருமடங்களும், பெருந்தவப் பள்ளிகளும் நிறைந்த ஓர் பகுதியில் தளபதியும், சேந்தனும் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றனர். அழுக்கடைந்த ஆடையும் மயிற்பீலி தாங்கிய கையுமாகச் சமணத் துறவிமார்கள் வீதியில் அங்கும் இங்குமாகப் போய் வந்து கொண்டிருந்தனர்.

"சேந்தா! தண்ணீர் வேட்கை அதிகமாக இருக்கிறது. இங்கே பருகுவதற்கு நீர் கிடைக்குமா?" என்று ஒரு சமணப்பள்ளியைச் சுட்டிக் காட்டிச் சேந்தனிடம் கேட்டான் தளபதி.


"கிடைக்கும்! இறங்கி உள்ளே போய்க் கேளுங்கள். அது வரை நான் குதிரையைப் பார்த்துக் கொண்டு இங்கே இருக்கிறேன்" என்றான் நாராயணன் சேந்தன்.

தளபதி குதிரையிலிருந்து இறங்கிச் சமணப் பள்ளியினுள் நுழைந்தான். அங்கே உட்புறம் உட்கார்ந்து ஏதோ பழைய சுவடியைப் படித்துக் கொண்டிருந்த வயது முதிர்ந்த துறவி ஒருவர் அவனைப் புன்முறுவல் செய்து வரவேற்றார். அவனுடைய தோற்றத்தையும், உடைகளையும் பார்த்தவுடனேயே அவன் பெரிய பதவியிலுள்ளவனாக இருக்கவேண்டுமென்பதை அந்தச் சமணத் துறவி தெரிந்து கொண்டார்.

"வாருங்கள்! உங்களுக்கு என்னவேண்டும்?" என்று அன்புடனே விசாரித்தார் அவர்.

"சுவாமீ! தாகம் அதிகமாயிருக்கிறது. பருகுவதற்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்றான் வல்லாளதேவன். துறவி எழுந்து சென்று அவனுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். அவன் வேண்டிய மட்டும் பருகித் தாகத்தைத் தணித்துக் கொண்டான்.

"வெகு தூரம் பிரயாணம் செய்து அலுப்படைந்தவர்போல் தென்படுகிறீர்கள். இப்படிச்



சிறிது படுத்திருந்து பிரயாணக் களைப்புத் தீர ஓய்வு எடுத்துக்கொள்ளுங்களேன்'' என்று பரிவாக உபசரித்தார் அந்தத் துறவி.

''இல்லை. நான் அவசரமாகப் புறத்தாய நாட்டு அரண்மனைக்குச் செல்ல வேண்டும். தங்க நேரமில்லை'' என்று அவன் கூறவும் வியப்புடன் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்த துறவி, ''அடாடா! இவ்வளவு தூரம் வீணாக அலைந்திருக்கிறீர்களே? அரண்மனைக்குச் செல்லப் பறளியாற்றின் கரையை ஒட்டினாற் போலக் குறுக்குச் சாலை ஒன்று செல்கிறதே. அதன் வழியாகப் போயிருந்தால் இதற்குள் அரண்மனை போய்ச் சேர்ந்திருக்கலாமே. அதை விட்டு விட்டு இவ்வளவு தொலைவு அலைந்திருக்கிறீர்களே?'' என்றார்.

''சுவாமீ! அந்த வழி எனக்கும் தெரியும்! ஆனால் பறளியாற்றில் வெள்ளம் வந்து நேற்று இரவே அந்தக் குறுக்கு வழி யெல்லாம் உடைப்பெடுத்து மூழ்கி விட்டதாமே? அதனால்தான் சுற்று வழியாக இருந்தாலும் பரவாயில்லை என்று இப்படி வந்தோம்.''

''அப்படியா அந்த வழியை வெள்ளம் உடைத்துக் கொண்டு போய் விட்டதென்று உமக்கு யார் அப்படிச் சொன்னார்கள்?'' என்று ஒரு தினுசாகச் சிரித்துக்கொண்டே கேட்டார் அவர்.

''ஏன்? என்னுடன் பிரயாணம் செய்யும் ஒரு நண்பன்தான் சொன்னான்.''

''நான் இன்று காலையில்தானே அதே பாதையாக இங்கு வந்து சேர்ந்தேன்! பறளியாற்றில் வெள்ளம் போவது உண்மைதான். ஆனால் பாதை உடைப்பெடுத்து மூழ்கி விட்டதாகச் சொல்லி யிருந்தால் அது முழுப் பொய்யாகத்தான் இருக்க வேண்டும்.''

தூய்மை திகழும் அந்தத் துறவியின் முகத்தைப் பார்த்தபோது அவர் கூறுவது பொய்யாக இருக்காது என்று தோன்றியது அவனுக்கு.

திடீரென்று தளபதியின் சந்தேகம், கோபம், எல்லாம் நாராயணன் சேந்தன்மேல் திரும்பின. அவன் எதற்காகவோ, தன்னிடம் பொய் சொல்லித் தன்னைச் சுற்றி வளைத்து இழுத்தடிப்பதாகத் தோன்றியது. தன் உணர்ச்சிகளையோ, கோப தாபங்களையோ அங்கே அவரிடம் வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை அவன். ''சரி! நான் வருகிறேன்,



சுவாமீ! இவ்வளவு தொலைவு அலைந்தது அலைந்தாயிற்று. இனி எந்த வழியாகப் போனால் என்ன?'' என்று அவரிடம் வணங்கி விடை பெற்றுக் கொண்டான்.

"இந்த ஊர் எல்லை கடக்கிறவரை நாராயணன் சேந்தனிடம் எதுவும் கேட்கக் கூடாது. எல்லை கடந்தவுடன் அந்தத் திருட்டுக் குள்ள நரியைக் குதிரையிலிருந்து கீழே பிடித்துத் தள்ளி இரண்டு கன்னங்களிலும் பூசைக் காப்புக் கொடுத்து, 'ஏனடா நாயே! என்னைப் பொய் சொல்லி ஏமாற்றினாய்?' என்று கேட்க வேண்டும்.'' இவ்வாறு மனக் கொதிப்புடன் எண்ணிக்



கொண்டே திருநந்திக் கரைச் சமணப் பெரும்பள்ளியிலிருந்து வெளிவந்தான் தளபதி வல்லாள தேவன். படிகளில் இறங்கித் தெருவைப் பார்த்ததும் அவனுக்குப் பகீரென்றது. அங்கே நாராயணன் சேந்தன் இல்லை. நிறுத்தி விட்டுப் போயிருந்த தளபதியின் குதிரையும் இல்லை. வல்லாளதேவன் திகைத்தான். ஒரு விநாடி அவனுக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்றே புரியவில்லை. நெற்றி சுருங்கியது. புருவங்கள் வளைந்தன, விழிகள் சிவந்தன, தோள்கள் விம்மிப் புடைத்தெழுந்தன. வார்த்தைகளில் அடக்கி விவரிக்க முடியாத ஆத்திரம் அவனுள் குமுறியது. சேந்தன் தன்னை வேண்டுமென்றே ஏதோ ஒரு காரணத்துக்காகத் திட்டமிட்டு முட்டாளாக்கிவிட்டது போல் இருந்தது அவனுக்கு. தான் அன்றையக் கூட்டத்தில் கலந்து கொள்ள அரண்மனைக்கு உரிய நேரத்தில் போய்விடாமல் தடுத்து அலைக்கழிக்கவே சேந்தன் தொடக்கத்திலிருந்து சூழ்ச்சி புரிந்து வந்திருக்கிறான் என்பதும் அவனுக்கு ஒருவாறு புரிந்தது.

"சேந்தன் எந்தப் பக்கமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான்? எப்போது போனான்?'' என்று அக்கம் பக்கத்தில் யாரிடமாவது விசாரிக்கலாமென்று எண்ணியவனாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தான் தளபதி.

சமணப் பள்ளியின் வாயிற்புறத்து மேடையில் இருபது இருபத்திரண்டு வயது மதிக்கத் தக்க இளம் பெண் ஒருத்தி பூ விற்றுக் கொண்டிருந்தாள். அவள் கையில் பூக்கூடை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. கையிலே பூமாலை ஒன்றை வைத்துக் கொண்டிருந்தாள். கூடையில் ஆம்பல், தாமரை, மல்லிகை, முல்லை, சண்பகம், கோங்கு, வேங்கை முதலிய பல நிறங்களையும், பலவகையையும் சேர்ந்த புது மலர்கள் குவிந்திருந்தன. தான் தண்ணீர் குடிப்பதற்காகச் சமணப் பள்ளிக்குள் நுழைந்தபோதும் அந்தப் பெண் அங்கே உட்கார்ந்திருந்ததாக நினைவிருந்தது வல்லாள தேவனுக்கு. அவளைக் கேட்டால் சேந்தன் எங்கே போனான் என்ற விவரம் தெரியலாம் என்று நினைத்தான்.

அந்தப் பூக்காரப் பெண் நல்ல அழகியாகக் காட்சியளித்தாள். அந்த நிலையில் மலர்க் குவியல்களுக்கிடையே அவளை எவனாவது ஒரு கவிஞன் பார்த்திருந்தால், "மலர்களுக்கிடையே — சாதாரணமான வெறும் மலர்களுக்கு இடையே — இளமையும், மோகமும், செறிந்த புதிய பெருமலர் ஒன்று பூத்துப் பொலிவுடன் வீற்றிருக்கிறது'' என்ற கருத்து அமையும்படி ஒரு கவிதையே இயற்றியிருப்பான். செந்தாழை நிறமும், செங்குமுத இதழும், கருமேகக் கூந்தலுமாகப் பூப்போன்ற கையினால் இருவாட்சி பூப்போன்ற விரல்களைக் கொண்டு பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள் அவள். சண்பக மொட்டுக்களைப் போன்ற அவளுடைய விரல்களில் ஒளிந்து கொண்டிருந்த திறமை உதிரிப் பூக்களை ஊழ்வினையை வரிசைப் படுத்தும் பரம்பொருள் நியதிபோல்



...பரிபூர்ண மாக நம்புவ தற்க்கும்...
...கவர்ச்சிகர மான அமைப் புக்கும்...
... உட்பூச்சு க்கும், வெளிப் பூச்சுக்கும் ...
...நேர்த்தியான வர்ணவேலைக ளுக்கும்...
... அதைப்பற்றி சந்தேகமே இல்லை அதுதான் ஷாலிமார் ஸுபர்லாக்... எல்லோரும் விரும்பும் நேர்த்தியான ஸிந்தடிக் எனமல்
SHALIMAR


டெக் டூத்பிரஷ் வாங்க
3 தகுந்த காரணங்கள்
1 மிருதுவான கீட்டன் முடிகள்
ஈறுகளை புண்ணாக்காமல் பற்களை சுத்தம் செய்கின்றன
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம்
'ஓவல்' மற்றும் 'ஷார்ட் ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்
3 கைக்கு அடக்கமான பிடி
விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது
நினைவிலிருக்கட்டும்:
இந்த மூன்று விசேஷ
அம்சங்கள் பொருந்தியது
புது மாதிரி டெக்
ஒன்றே!
Tek
Johnson & Johnson
OF INDIA
PRIVATE LTD.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட்

வரிசைப்படுத்தி வேகமாகவும் நளினத்துடனும் தொடுத்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் தன்னுடைய சொந்தக் கவலைகளையும், அதிர்ச்சிகளையும், மறந்து அந்த விரல்களின் நளினத்தை-விரல்களுக்குரியவளின் வனப்பை அனுபவித்து நோக்கினான் தளபதி. பின்பு தன் நினைவு வரப் பெற்றவனாய் மெல்ல நடந்து அவள் அருகில் சென்று, "பெண்ணே! சிறிது நேரத்துக்கு முன் இந்தமடத்து வாசலில் இரண்டு குதிரைகளும் ஒரு குட்டை மனிதனும் இருந்தார்களே! அவன் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு எந்தப் பக்கமாகப் போனானென்று உனக்குத் தெரியுமா?" என்று தன்னுடைய குரலில் கனிவையும், இனிமையையும் வரவழைத்துக் கொண்டு விசாரித்தான்.

கீழே குனிந்து பூத்தொடுத்துக் கொண்டிருந்த அந்தப் பெண் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒருவித உணர்ச்சியும் தென்படவில்லை. உதடுகள் அசைந்து கோணின. பதில் சொல்லவில்லை.

"உன்னைத்தான் அம்மா கேட்கிறேன். பதில் சொல்லேன்" என்று சிறிது உரத்த குரலில் இரைந்தான் தளபதி. அப்போதும் அவள் வாயிலிருந்து பதில் வரவில்லை. "ஐயா! உங்களுக்கு என்ன வேண்டும்? அந்தப் பெண்ணுக்குப் பேச வராது. அவள் பிறவிச் செவிடு-பிறவி ஊமை." பின்னாலிருந்து குரல் வந்தது.

தளபதி திரும்பிப்பார்த்தான். அந்தப் பெண்ணின் தந்தை போல் தோன்றிய வயதான கிழவன் நின்று கொண்டிருந்தான். கேள்விப்பட்ட உண்மையில் ஏற்பட்ட அதிர்ச்சி, தான் கேட்க வேண்டிய கேள்வியைக் கூட மறந்து போகச் செய்து விட்டது. "அவளா ஊமை? அமுதக்குடம் போல் பருவத்தின் அழகு மெருகு செய்திருக்கும் அந்தப் பொற் சித்திரப் பாவையா ஊமை?"

தளபதி பரிதாபத்தோடு அவளைப் பார்த்தான். "படைப்புக் கடவுள் பொல்லாதவன். மிகமிகப் பொல்லாதவன்!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்.

"என்ன ஐயா? பூ ஏதாவது வேண்டுமா? வேண்டுமானால் சொல்லுங்கள். தரச் சொல்லுகிறேன்" என்று அந்தக் கிழவன் தொணதொணத்தான்.

"ஒன்றும் வேண்டாம்! இங்கே வாசலில் என் நண்பன் ஒருவன் குதிரைகளோடு நின்றுகொண்டிருந்தான். நான் மடத்துக்குள் சென்று திரும்புவதற்குள் திடீரென்று எங்கோ போய்விட்டான். அவன் எந்தப் பக்கமாகப் போனான் என்று எனக்குத் தெரிய வேண்டும்."

"எனக்குத் தெரியாது! நான் பார்க்கவில்லையே, ஐயா!" என்று கையை விரித்து விட்டான் கிழவன். 'இங்கே இவர்களிடம் விசாரித்துப் பயன் இல்லை' என்று எண்ணிக் கொண்டு சாலையில் இறங்கி நடந்தான் தளபதி.

போகும்போது கடைசி முறையாக அந்தப் பூக்காரப் பெண்ணை அவன் கண்கள் ஏக்கத்தோடு பார்க்கத் தவறவில்லை. தன்னை ஏமாற்றிய சேந்தன், அவனுடைய சூழ்ச்சிகள், வேறு எத்தனையோ முக்கியமான சிந்தனைகள்-எதுவும் அப்போது தளபதியின் உள்ளத்தில் மேலெழுந்து நிற்கவில்லை. கால்போன போக்கில் நடந்து கொண்டே, பொருத்தமில்லாத இடத்தில் பொருத்தமில்லாத அழகை வைத்து விடும் படைப்பின் முரண்பாட்டைச் சிந்தித்துக் கொண்டே சாலையில் நடந்தான். எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லை அவனுக்கு.

அத்தியாயம் 24
அடிகள் கூறிய ஆருடம்

துறவியை நீராடச் சொல்லி விட்டு அவருடைய பூசைக்கு வேண்டிய மலர்களைக் கொய்வதற்காக நந்தவனத்துக்குச் சென்ற குழல்மொழியை அம்பலவன் வேளான் சந்தித்தான் அல்லவா? மகாமண்டலேசுவரர் உங்களிடம்சொல்லும்படி முக்கிய செய்தி கூறியனுப்பியிருக்கிறார் என்று வேளான் கூறவும் 'என்ன அவசரச் செய்தியோ?' எனப் பதறிப் போனாள் அவள்.

"அம்மா! வசந்த மண்டபத்தில் தங்கியிருக்கும் துறவியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்ளச் சொன்னார். அடிகள் மாபெரும் சித்து வித்தைகள், மந்திர தந்திரங்கள் எல்லாம் கைவரப் பெற்றவராம். சிறிது மனங் கோணினாலும் சொல்லாமல் இங்கிருந்து மறைந்து விடுவாராம். அவர் இங்கிருந்து மறைந்து விட்டால் அதனால் தென் பாண்டி நாட்டுக்கே பலவிதத்திலும் தீங்குகள் உண்டாகுமாம். கண்ணை இமை காப்பதுபோல் இந்தத் தீவிலிருந்து வெளியேறி விடாமல் அவரைப் பத்திரமாகக் காக்க வேண்டும்

என்று கூறி அனுப்பினார்'' என்றான் படகோட்டி அம்பலவன் வேளான்.

இதைக் கேட்டதும் குழல்மொழிக்கு நிம்மதி ஏற்பட்டது. ''அப்பா! இவ்வளவுதானா? என்ன பிரமாதமான செய்தியோ என்று பயந்து போனேன். இதைத்தானா திரும்பவும் அப்பா உன்னிடம் சொல்லி விட்டுப் போனார். ஏற்கனவே என்னிடம் அவர் கூறிய செய்தி தானே!'' என்று அவனுக்குப் பதில் சொல்லி விட்டு நந்தவனத்துக்குள் நுழைந்தாள் அவள்.

வேளான் வந்தவழியே திரும்பிப் படகுத் துறைக்குப் போய்ச் சேர்ந்தான். இடையாற்றுமங்கலம் அரண்மனை நந்தவனத்தில் இல்லாத மலர் வகைகள் தென்பாண்டி நாட்டிலேயே



இல்லை என்று சொல்லிவிடலாம். தீவின் கால் பகுதி நிலப் பரப்பில்தான் கட்டடங்களும், மாளிகைகளும் அமைந்திருந்தன. எஞ்சிய பகுதி முழுதும் வானளாவிய மரங்களும், மலர்ச் சோலைகளும், பசும்புல் வெளிகளும், மலர்வாவிகளும் நிறைந்துக் கொண்டிருந்தன. நந்தவனத்துக்குள் சென்ற குழல்மொழி கால் நாழிகைக்குள் பல வகை மலர்களாலும் குடலையை நிரப்பிக் கொண்டு திரும்பி விட்டாள்.

அடிகள் நீராடி வழிபாடுகளை முடித்துக் கொண்டபின் குழல்மொழி அவரை அட்டிற்சாலை (சமையலறை)க்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினாள். உணவு முடிந்ததும் குழல்மொழி அவரை நோக்கி, ''அடிகளே! தாங்கள் இனி வசந்த மண்டபத்தில் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம். மாலையில் நான் அங்கு வருவேன். வேளானிடம் சொல்லிப் படகில் சிறிது நேரம் பறளியாற்றில் சுற்றி வரலாம்'' என்றாள்.

''பெண்ணே! பகலில் உறங்கும் வழக்கம் எனக்குக் கிடையாது. இப்போது நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இந்த இடையாற்று மங்கலம் மாளிகையைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. நீ என்னோடுகூட வந்து சுற்றிக் காட்ட முடியுமா?'' என்றார் அவள் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே.

அவருடைய விருப்பத்தைக் கேட்டுக் குழல்மொழி திகைத்தாள். அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தயங்கினாள். அவர் வெளியிட்ட விருப்பம் அத்தகையதாக இருந்தது. தென்பாண்டி நாட்டின் படைத் தலைவனை தளபதி வல்லாளதேவன்கூட வெளியிட முடியாத விருப்பம் அது. இன்று வரை இடையாற்று மங்கலம் மாளிகையின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளையும் குறைவின்றி முழுமையாகப் பார்த்தவர் மகாமண்டலேசுவரரைத் தவிர வேறு யாருமில்லை. அவருடைய அருமைப் புதல்வியான குழல்மொழிக்கும் அந்தரங்க ஒற்றனான நாராயணன் சேந்தனுக்கும் கூடத் தெரியாத இரகசியப் பகுதிகள், பாதுகாப்புக்குட்பட்ட இடங்கள் எத்தனையோ அந்த மாளிகையில் உண்டு. அப்படி இருக்கும் போது ஊர் பேர் தெரியாத இந்தத் துறவிக்கு மாளிகையைச் சுற்றிக் காட்டுவது எப்படி முடியும்? 'சுற்றிக் காட்டலாம்' என்றே வைத்துக் கொண்டாலும் எவற்றைக் காட்டுவது? எவற்றை மறைப்பது? குழல்மொழி இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள்.

''நீ தயங்குவதைக் கண்டால் என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஏதோ சில இடையூறுகள் இருப்பதாக அல்லவா தெரிகிறது? முடிந்தால் சுற்றிக் காட்டலாம். இல்லாவிட்டால் நான் வற்புறுத்தவில்லை'' என்று தணிவான குரலில் மன்னிப்புக் கேட்பது போன்ற தொனியில் கூறினார் துறவி.

''இடையூறுகளா? அப்படி ஒன்றுமில்லை. இந்த மாளிகையைப் பொறுத்த வரையில் என்னுடைய தந்தை சில கட்டுப்பாடுகளும் வரையறைகளும் வைத்திருக்கிறார்....''

''என்ன கட்டுப்பாடுகளென்று நான் அறியலாமோ?''

''எல்லா இடங்களையும் எல்லோருக்கும் சுற்றிக் காட்டுவதில்லை! அரண்மனையில் இருப்பவர்களும் சரி, வந்து

போகிற விருந்தினர்களும் சரி, இன்னார் இன்ன பகுதிகளில்தான் பழக வேண்டுமென்று கடுமையான கட்டுக் காவல் வைத்திருக்கிறார்.''

அவள் கூறியதைக் கேட்டுத் துறவி மறுமொழி கூறாமல் இலேசாகப் புன்முறுவல் செய்தார்.

''என்ன? நீங்களாகவே சிரித்துக் கொள்கிறீர்கள்?''

''மகாமண்டலேசுவரரின் கூர்மையான அறிவு எப்படியெல்லாம் வேலை செய்கிறதென்று நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்தது.''

''பரவாயில்லை, அடிகளே! உங்கள் விருப்பத்தை நான் கெடுக்கக் கூடாது. எழுந்து வாருங்கள். இந்த மாளிகையில் எந்த இடங்களையெல்லாம் காட்ட முடியுமோ அவற்றைக் காட்டுகிறேன்.''

''நீ காட்டாத இடங்களையெல்லாம் நான் என்னுடைய தவவலிமையைக் கொண்டு ஞான நோக்கத்தால் பார்த்து விட்டால் என்ன செய்வாய்?''

''அப்படி ஞான நோக்கத்தால் பார்க்கிற சாமர்த்தியமுள்ளவர் எல்லா இடங்களையும் இருந்த இடத்திலிருந்தே பார்த்துக் கொள்ளலாமே?'' என்று பச்சைக் குழந்தை போல் கைகொட்டிச் சிரித்து அவரைக் கேலி செய்தாள் மகாமண்டலேசுவரரின் புதல்வி.

''நீ பெரிய குறும்புக்காரப் பெண். உன் தந்தையின் சூழ்ச்சி, சாதுரியம் ஆகியவற்றில் முக்கால் பங்கு உனக்கு வந்திருக்கிறது'' என்று சிரிப்புக்கிடையே கூறிக் கொண்டே சுற்றிப் பார்ப்பதற்காக எழுந்திருந்தார் துறவி.

குழல்மொழி அவரை அழைத்துக் கொண்டு அவருக்கு முன் நடந்தாள்.

''அடிகளே! உங்களுக்கு முக்காலமும் உணரும் திறன் உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தத் தென்பாண்டி நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய சில முக்கியமான செய்திகளைப் பற்றி நான் உங்களிடம் ஆருடம் கேட்கப் போகிறேன்.''

''ஆகா! தாராளமாகச் சொல்கிறேன். எதிர்காலம் ஒளிநிறைந்ததாக இருக்கப் போகிறது. வெற்றிகளும் செல்வங்களும் விளையப் போகின்றன. மாதந் தவறாமல் மூன்று மழை பொழியப் போகிறது......''

''போதும்! போதும்! நிறுத்திக் கொள்ளுங்கள். உலகத்தில் முதல் ஜோதிடன் பிறந்ததிலிருந்து இன்று வரை பொதுவாக எல்லாரும் வைத்துக் கொண்டிருக்கிற நாலைந்து புளுகு மூட்டைகளையே நீங்களும் அவிழ்த்து விடுகிறீர்களே? மாதம் மூன்று மழை பெய்வதை இன்னொருவர் கூறியா அறிந்து கொள்ள வேண்டும்? வளத்துக்கு இருப்பிடமான நாஞ்சில் நாட்டில் மாதம் முப்பது நாளும் எங்கேயாவது மழை பெய்து கொண்டுதான் இருக்கிறது......'' முன்னால் நடந்து கொண்டிருந்த குழல்மொழி திரும்பி நின்று அவரைக் கேலி செய்தாள்.

அப்போது அவர்கள் இருவரும் இடையாற்று மங்கலம் மாளிகையின் தெற்கு மூலையில் ஒரு முக்கியமான பகுதிக்கு வந்திருந்தார்கள். கண்ணாடி போன்ற சுவர்களில் தீட்டியிருந்த உயிர்க் களை சொட்டும் ஓவியங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே நடந்தார்



துறவி. மகாமன்னராகிய பராந்தக பாண்டியரின் வீரச் செயல்கள் அந்த ஓவியங்களில் தீட்டப்பட்டிருந்தன. இன்னும் தென்பாண்டி நாட்டின் அரச மரபைச் சேர்ந்த வீரர்களின் போர்ச் செயல்கள், வாழ்க்கைக் காட்சிகள், அறச் செயல்கள், திருப்பணிகள் எல்லாம் தீட்டப்பட்டிருந்தன. அந்த ஓவியங்களை நிமிர்ந்து பார்க்கும்போது இளந்துறவியின் மயக்கும் முகத்தில் பெருமிதச் சாயல் படர்ந்தது. விரிந்து அகன்ற வீர மார்பும், செறிந்துயர்ந்த தோள்களும் விம்மிப் புடைத்தன. விழிகளில் அற்புதமானதொரு ஒளி மின்னியது. துறவிக்கு மனத்தில் சுயநினைவு, சூழ்நிலைகளை மறந்த ஒருபெரும் பரவசம்

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியைத்தான் இவ்விதழ் அட்டையில் வண்ண ஓவியமாக வரைந்திருக்கிறார் ஓவியக் கலைஞர் வினு.

உண்டாயிற்று. தன்னோடு குழல்மொழி என்ற பெண் வந்துகொண்டிருப்பது கூட அவருக்கு மறந்து போய் விட்டது. சுவர்ப் பரப்பில் துடிக்கும் உயிர்களாக நின்ற அந்த ஓவியங்களில் பந்தபாசங்கள் இல்லாத துறவியின் உணர்ச்சியைக் கவர அப்படி என்னதான் இருந்ததோ? எதிரே பார்க்காமல் சுவரைக் கண்டு கொண்டே நடந்தவரை, "நில்லுங்கள்! இதற்குமேல் போகக்கூடாது. கடுமையான பாதுகாப்புக்கு உட்பட்ட இடம்" என்று குறுக்கே கை நீட்டி வழிமறித்தாள் குழல்மொழி.

சுவர்ச் சித்திரங்கள் என்ற கனவுலகத்திலிருந்து விடுபட்டு எதிரே பார்த்தார் துறவி. அந்த இடத்துக்கு எதிரே இருந்த அறைவாயிலில் தூய வெள்ளைத் திரை தொங்கியது. திரையில் பாண்டியப் பேரரசின் அடையாளச் சின்னமாகிய மீனின் உருவமும் நாஞ்சில் நாட்டுக் கலப்பை, மேழி வடிவங்களும் பெரிதாக வரையப் பட்டிருந்தன. திரைக்கு இப்பால் மின்னல் துண்டு போல் ஒளி வீசும், உருவிய வாள்களுடன் இரண்டு யவன வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தனர். 'அடல் வாள் யவனர்' என்ற சங்கத் தமிழ் நூல்களின் வருணனைக்கு ஏற்பக் கருமெழுகில் பிடித்துப் பிடித்து உருவாக்கிய இரண்டு பயங்கரச் சிலைகள் நிற்பது போல் ஆடாமல், அசையாமல் நின்று கொண்டிருந்தனர் அந்த யவன நாட்டுக் காவல் வீரர்கள்.

"ஏன் இதற்கு மேல் போகக்கூடாது என்கிறாய்? போனால் என்னவாகி விடும்?" என்று கேட்டார் துறவி.

"நான்தான் முன்னமேயே சொன்னேனே! இந்த மாளிகையில்என் தந்தையாரின் விருப்பத்துக்கு இணங்கத்தான் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும். அவருடைய உத்தரவை மீறினால் அவருக்கு ரொம்பக் கோபம் வந்துவிடும். என்ன செய்வார் என்றே சொல்ல முடியாது."

"யாரும் பார்க்கக் கூடாத அறைகளில் இதுவும் ஒன்றோ?"

"ஆமாம்!"

"அப்படியானால் சரி! இதற்குமேல் நாம் போக வேண்டாம். உன் வார்த்தைக்கு நான் கட்டுப்படுகிறேன். ஆனால் அந்தத் திரைக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதையாவது தெரிந்து கொள்ளலாமோ?"—துறவி கேட்டார்.

குழல்மொழி கொற்கைத் துறை ஒளி முத்துக்களைப்போன்ற தன் அழகிய பல்வரிசை தெரியச் சிரித்தாள். "அடிகளே! நீங்கள் பெரிய தந்திரக்காரர். அந்த இடத்துக்கே போகக் கூடாதென்று நான் சொல்கிறேன். நீங்களோ அங்கே என்ன இருக்கிறதென்று கேட்கிறீர்கள்? கெட்டிக்கார மனிதர்தாம் நீங்கள்."

"சொல்லா விட்டால் போயேன். நான் ஆருடத்தால் கண்டு பிடித்துத் தெரிந்து கொண்டால் அப்போது என்ன செய்வாய்? இதோ கண்டுபிடித்து விடுகிறேன் பார்!" என்று சொல்லி ஏதோ மந்திரத்தை உச்சரிக்கிறவர் போல் பாவனை செய்தார்.

"அடே அப்பா! கண்டு பிடித்துவிடுவீர்களோ? எங்கே கண்டுபிடித்துச் சொல்லி விடுங்களேன், பார்ப்போம்."

"இதோ கேட்டுக்கொள்; தென்பாண்டி வேந்தர் மரபின் சுந்தர முடியும் வீர வாளும், பொற் சிம்மாசனமும் ஆகிய அரசுரிமைச் சின்னங்கள் இருக்கின்றன அங்கே."

துறவியின் ஆருடத்தைக் கேட்டு அதிர்ந்துபோய் நின்ற குழல்மொழியின் முகத்தில் ஈயாடவில்லை. (தொடரும்)

வாழ்க மணமக்கள்




திருவாரூர் பிரபல நகை வியாபாரம் திரு கே. ஆர். தியாகராஜ பிள்ளை குமாரர் திரு இராஜேந்திரனுக்கும் திருமதி இராஜேஸ்வரிக்கும் 9-9-58ல் திருமணம் மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நெடுநேரமாக விளையாடி ஓய்ந்துவிட்ட இளவரசி சாருமதி தன் கையிலிருந்த வண்ண மலர்களாலான பூப்பந்தைக் கீழே போட்டு விட்டுச் சண்பகக் குஞ்சத்தினடியில் வந்து உட்கார்ந்துகொண்டாள். கையிலிருந்த ஓலைச் சுவடியில் தன் கவனத்தைச் செலுத்தி, அதில் ஆழ்ந்து போயிருந்த அவளுடைய சகோதரி சங்கமித்திரை, தன்னருகில் வந்து அமர்ந்த இளைய சகோதரியைக் கவனியாமல், தன் வேலையிலேயே கண்ணாயிருந்தாள். இதை ஓரக்கண்ணால் கவனித்த சாருமதியின் உதடுகளில் ஒரு குறும்புப் புன்னகை நெளிந்து மறைந்தது. நெடுநேரமாய் ஓடி விளையாடியதில் கலைந்துபோயிருந்த தன்னுடைய கேசத்திலிருந்து முன் நெற்றியில் வந்து விழுந்த இரண்டொரு குழற்கற்றைகளைக் கையினால் பின்னால் தள்ளிவிட்டுக் கொண்டாள். முகத்தில் அரும்பிய வியர்வை முத்துக்களைத் துடைத்துக் கொண்டு ஒருதரம் களைத்தாள். அப்பொழுதும் சங்கமித்திரை அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. பொறுமையை இழந்தவளாய்த் தன் சகோதரியைத் தோளைத் தொட்டுக் குலுக்கினாள் சாருமதி.

“அக்கா! நீ இந்த உலகத்தில்தான் இருக்கிறாயா? அல்லது எங்கேயாவது சொப்பன லோகத்துக்குப் போய் விட்டாயா?” என்று கேட்டு விட்டுக் கலகலவெனச் சிரித்தாள்.

திடுக்கிட்டுத் திரும்பிய சங்கமித்திரை சட்டென்று சமாளித்துக் கொண்டு சகோதரியின் சிரிப்பில் தானும் கலந்து கொண்டாள்.

“போ, அக்கா! நீ, வர வர விளையாடுவதற்கே வருவதில்லை. எனக்குத் தனியாக விளையாடி விளையாடி அலுத்துப் போய்விட்டது! இன்றைக்குச் சங்கமாலைக்கு உடல் நலமில்லை. ஆகவே அவளும் வரவில்லை! நீயானால் எப்பொழுது பார்த்தாலும் இந்த ஓலைச்சுவடிகளுடனேயே உறவு கொண்டாடிக்கொண்டிருக்கிறாய்! இப்படி ஆழ்ந்து போகும்படி அவற்றில் என்னதான் இருக்கிறதோ? இங்கே கொண்டு வா அவற்றை! நான் கொண்டு போய்ச் சம்பா நதியில்





எறிந்து விடுகிறேன்!'' என்று சங்கமித்திரையின் கையிலிருந்த ஓலைச் சுவடிகளைப் பிடுங்கப் போனாள்.

தன் சகோதரியின் கைகளில் அகப்படாமல் அவற்றைச் சட்டென்று தன் ஆடையில் மறைத்துக் கொண்டாள் சங்கமித்திரை. பிறகு கலகல வென்று நகைத்தபடியே, ''சாரு! இந்த ஓலைச்சுவடிகளை எவ்வளவு சிரமத்தின் பேரில் பெற்றிருக்கிறேன், தெரியுமா? ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொக்கிஷம்! புத்ததேவரின் சீடரான மகான் ஸாரிபுத்தரின் அருள்வாக்குகள். அவர் கையினாலேயே பொறிக்கப்பட்ட ஓலைகள் இவை. பாடலிபுத்திரத்து மகா விகாரத்திலிருந்து எவ்வளவோ காவமாக நான் வேண்டிக் கொண்டதன் பேரில் தலைமைப் பிக்ஷு இவற்றை அனுப்பியிருக்கிறார். இன்னும் ஒரு திங்களுக்குள்ளாக இவற்றை நான் பார்த்து விட்டுத் திருப்பிவிட வேண்டும்!'' என்று கூறிவிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

செம்பருதியின் பொற்கோளம் வானமுகட்டின் மேற்குக் கோடியில் தகத்தகாயமாய் மின்னிக் கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தது. பாடலிபுத்திரத்து உன்னதமான அரண்மனை உத்தியான வனத்தின் சண்பகக் குஞ்சங்கள் நிறைந்த இடம் அது. மனத்தை மயக்கச் செய்யும் பரிமளம், அவ்விடம் முழுதும் வியாபித்துக் கொண்டிருந்தது. இளவேனிலின் சௌந்தர்ய சோபையில், சிறிதும் பெரியதுமான சண்பக மொட்டுக்கள் தம் தலையவிழ்ந்து நகைத்த காட்சி, சிறிதும் பெரிதுமான மெருகிட்ட பொற் கிண்ணங்கள் அந்தக் குஞ்சங்களில் பொருத்தப்பட்டிருப்பதைப் போல் தோன்றியது. கதிரவனின் மறையும் கிரணங்களெல்லாம் அவற்றின் மேற்படிந்து அவற்றைப் பொன்மயமாய் மின்னச் செய்து கொண்டிருந்தன.

சங்கமித்திரையின் அழகிய நெற்றியில் சிந்தனைக் கோடுகள் ஒன்றிரண்டு தென்பட்டன. அவள் திரும்பித் தன் சகோதரியை நோக்கி, ''சாரு! விளையாடிக்கொண்டேயிருந்து விட்டாயே! அன்னையார் உன்னை இரவு பூஜைக்குச் சண்பக மலர் பறித்துவரச் சொன்னது நினைவில்லையா? நேரம் அந்தி மயங்கி விட்டதே! இனிமேல் எப்பொழுது பறிக்கப் போகிறாய்?'' என்றாள் கவலையுடன். துள்ளி யெழுந்தாள் சிறியவள்.

''ஐயையோ! மறந்தே போய் விட்டேன். அக்கா! நீயும் வா! சீக்கிரமே பறித்துவிடலாம்!'' என்று பக்கத்திலிருந்த கூடையை யெடுத்து அதில் பரபரவென்று மலர்களைப் பறித்து நிரப்பலானாள். கையிலிருந்த ஓலைச் சுவடிகளை ஒரு பட்டுத் துணியில் சுற்றி ஒரு சண்பகக் குஞ்சத்தினடியில் வைத்து விட்டு, இளவரசி சங்கமித்திரையும் அவளுக்கு உதவி செய்யலானாள்.

''குழந்தாய்!...இவ்வளவு அதிகாலையிலேயே எழுந்து என்ன செய்கிறாய்?'' என்று கேட்டபடியே சங்கமித்திரையின் விடுதிக்குள் நுழைந்தாள் அவள் அன்னையான மகாராணி அஸந்திமித்திரை. பலகணியருகில் அமர்ந்து வெளியே நோக்கிக் கொண்டிருந்த இளவரசியின் அலை போன்ற கருங் கூந்தலிலிருந்து நீரம் சொட்டிக் கொண்டிருந்தது. அலட்சியமாகத் தன் நெற்றியில் வந்து விழுந்த கூந்தல் சுருள்களை ஒரு கையினால் பின்புறம் தள்ளி விட்டுத் தன் மடியில் வைத்திருந்த ஓலைச்

◀ வேங்கடலட்சுமி ▶

கவடிகளையும், சாளரத்தின் வழியாகத் தூரத்தே தெரிந்த மகாவிகாரத்தின் ஸ்தூபிகளையும் மாறி மாறி நோக்கியபடி அசையாச் சிற்பமாய் வீற்றிருந்த சங்கமித்திரை தன் அன்னையின் குரல் கேட்டுச் சட்டென்று திரும்பினாள். வந்திருப்பது யாரெனக் கண்டதும் பரபரப்புடன் தன் மடியிலிருந்த கவடிகளையெல்லாம் சேர்த்து அருகாமையிலிருந்த ஒரு பீடத்தின் மீது வைத்து விட்டுப் பணிவுடன் எழுந்து தன் அன்னையை வணங்கினாள்.

அன்புடன் அவளைத் தழுவிக் கொண்ட மகாராணி, "குழந்தாய்! இதென்ன தவக்கோலம்? உன் உடம்பிலிருந்த ஆடையணிகளெல்லாம் எங்கே போயின?—நேற்றுத்தான் உன் தோழி சங்கமாலை சொன்னாள்,....அதிகாலையில் நீ தன்னந்தனியாகச் சம்பாநதிக்குச் சென்று இந்த நடுக்கும் குளிரில் நீராடி விட்டு வருவதாகவும், மகாவிகாரத்திலிருந்து வந்திருக்கும் ஓலைச் சுவடிகளிலேயே மூழ்கிப் போய், உன் வயதுக்குரிய வேடிக்கை விளையாட்டுகளையும்,—ஏன், உணவையும் கூட மறந்து விட்டாயென்றும்,....எல்லாம் சொன்னாள். இதென்ன விநோதம்?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

ஒரு கணம் மௌனமாய்த் தலைகுனிந்து நின்றாள் கட்டழகி. சற்றுப் பொறுத்து அவள் தன் தாயை நிமிர்ந்து நோக்கிய பொழுது அவளுடைய கரிய விழிகள் ஒரு அபூர்வமான ஒளியுடன் மிளிர்ந்தன. "தாயே!......... முன்பொருதரம் நான் மகாவிகாரத்துக்குச் சென்ற பொழுது மகான் ஸாரிபுத்தரின் அருள் மொழிகள் பொறித்துள்ள இவ்வேடுகளைக் கண்டு அவற்றை ஒரு சிலநாட்கள் என்னிடம் கொடுத்து வைக்கும்படியாகத் தலைமை பிக்ஷுவைக் கேட்டுக் கொண்டேன். ஒரு திங்கள் வைத்திருந்து விட்டுப் பத்திரமாக அனுப்பி விடும்படி கூறி இவற்றை அனுப்பி வைத்திருக்கிறார். சொற்ப காலத்துக்குள்ளேயே இவற்றைத் திருப்பியனுப்பி விட வேண்டுமேயென்பதால், இவற்றை முனைந்து படிக்கிறேன்— வேறொன்றுமில்லை" என்றாள் நிதானமாக.

தன் எதிரே நின்ற இளவரசியை ஒரு விநாடி கூர்ந்து கவனித்தாள் மகாராணி.— தாயின் அன்புகனிந்த இருதயம் அந்த ஒரு பார்வையிலேயே, மகளுடைய தோற்றத்தில் உண்டாயிருந்த மாறுதல்களையெல்லாம் கண்காணித்து விட்டது.

மெருகிட்ட பொற்பாவை போன்று எழிலுடன் விளங்கும் அவ்வரிவையின் தளதளத்த மேனி, தனது வழக்கமான சோபையை இழந்து துவண்டு வாட்டமுற்றிருந்தது. பார்ப்பவர் கண்களைப் பறிக்கும்படியான முகமண்டலத்தில் தேஜஸ் குறைந்து விட்டது. அழகான கருவிழிகளைச் சுற்றிலும் கருவளையங்கள் தென்பட்டன.

ஒரு பெருமூச்சு விட்டாள் மகாராணி. எதையோ கேட்க வாயெடுத்தவள் சட்டென்று தன்னைத் தடுத்து நிறுத்திக் கொண்டாள். "குழந்தாய்! சங்கமித்திரை! இலங்கை மன்னனாகிய தீசனுக்குச் சக்ரவர்த்தி அனுப்

பப்போகும் ஓலைகள் தானே இவை?'' என்று கனிவுடன் கேட்டாள்.

''ஆம், தாயே! அவைகள்தாம்.''

மீண்டும் ஒரு வினாடி மௌனம் சாதித்தாள் மகாராணி.


''குழந்தாய்! எக்காரணம் பற்றியும் நாளை இரவு சம்பா நதிக்கரையில் நடக்கவிருக்கும் பெருநிலவுக் கொண்டாட்டத்துக்கு வராமல் இருந்து விடாதே! அப்புறம் நம் மந்திரி ராதாகுப்தர் மிகவும் வருத்தப்பட்டுக் கொள்வார். அவர் தமது ஒரே மகனான மங்களகுப்தனுக்கு இருபத்திரண்டு ஆண்டுகள் நிரம்பியதை மிகப் பெரிய முறையில் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார். பாடலீபுத்திரத்துப் பெருமக்கள் யாவருக்கும் அழைப்புக்கள் போயிருக்கின்றன. ஆகையால் மறந்து விடாமல் நாளைச் சந்திரோதயத்துக்குத் தயாராகி விடு'' என்று இளவரசி உண்மையிலேயே மறந்து போய்விட்ட அக் கொண்டாட்டத்தை ஞாபகப்படுத்தினாள்.

''ஆகட்டும், அம்மா! கண்டிப்பாய் வருகிறேன்'' என்று பணிவாய்ப் பதிலளித்த மகளின் வார்த்தைகளால் சிறிது சமாதானமடைந்த மகாராணி, ''குழந்தாய்! ஆடையணிகளையெல்லாம் எடுத்து அணிந்து கொள். உன்னுடைய இந்தத் தவக்கோலம் என் உள்ளத்தைப் புண்படுத்துகிறது. அப்புறம் அதிகாலையில் இவ்வாறு போய் முழுகாதே! இந்தக் குளிர் உடலுக்கு ஊறு செய்யும். உணவு உட்கொள்ளுவதற்கு இனிமேல் நீ என்னுடைய விடுதிகளுக்கு வந்துவிட வேண்டும் என்றெல்லாம் தன் செல்வ மகளுக்கு அன்புக் கட்டளைகளிட்டு விட்டு அவ்வறையை விட்டு வெளியே செல்வதற்கு எத்தனித்தவள் சட்டென்று ஏதோ ஞாபகத்துக்கு வரவே, ''சங்கமித்திரை! அவள் எங்கே, சாருமதி? நேற்று முழுதும் என் கண்ணிலேயே அவள் தென்படவில்லையே!'' என்று கேட்டாள்.

இளவரசியின் இதழ்களில் ஒரு புன்னகை தோன்றியது. ''அதோ, பாருங்கள்! சாளரத்துக்கு வெளியே!'' என்று சங்கமித்திரை சுட்டிக் காண்பித்தாள்.

அவள் காட்டிய திக்கை நோக்கிய மகாராணியின் முகத்திலும் ஒரு புன்னகை மலர்ந்தது.

சற்றுத் தூரத்திலிருந்த சண்பகக் குஞ்சங்களுக்கடியில் அழகிய மான் குட்டியொன்று துள்ளிக்கொண்டிருந்தது. அதற்குச் சமீபத்திலேயே கையில் ஒரு கொத்துப் பசும் புல்லை வைத்துக் கொண்டு அதற்கு அதை ஊட்ட முயன்று கொண்டிருந்தாள் சாருமதி. அந்தப் பொல்லாத மான் குட்டி, அவள் அருகில் வருமளவும் அசையாமல் நின்றுவிட்டு, அவள் தன்னருகில் வந்தவுடன் ஓட்டமாக ஓடி, அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. மான் குட்டி ஓடுவதும் சாருமதி கையிலிருந்து புல் கற்றையுடன் அதைத் துரத்துவதுமாக நடந்து கொண்டிருந்த வேடிக்கையைக் கண்ணுற்ற மகாராணி கலகலவென்று நகைத்துக் கொண்டே, ''இன்னும் சிறு குழந்தையைப் போல் விளையாடுகிறாளே! நாளைய வைசாகத்துக்குப் பதினாறு வயது பூர்த்தி



தூய்மையான நறு மணத்திற்கு...

ஒரு பிரத்தியேக கலப்புள்ள, சருமத்திற்கு வன்மையூட்டும் தாவர எண்ணெயும், சுத்தமான மைசூர் சந்தன தைலமும் சேர்க்கப்பட்டு இருப்பதால் கடைகளில் சோப்புகளிலே மிகச் சிறந்தது கோத்ரெஜ் சந்தன சோப்பு என வழங்கப் படுகிறது.

அபரிமிதமான நுரையுடன் சருமத்திற்கு குளுமையான சுகமளிக்கிறது. இதன் தூய்மையான சுகந்தம் நாள் முழுவதும் உங்களை நறுமணம் கமழும் எழிலுடன் விளங்கச் செய்கிறது.

விலைக்கு விலை, எடைக்கு எடை, மற்றும் சிக்கனமானதும் கூட!



இப்போது புதிய கவர்ச்சி தரும் பெட்டிகளில் கிடைக்கின்றன

> கோத்ரெஜ் சந்தன சோப்பில் மிருகக் கொழுப்பு கிடையாது

Godrej கோத்ரெஜ் உங்களுக்காக உயர்தர சோப்புகளை தயாரிக்கிறது
டாய்லெட்டுக்கும் - சலவைக்கும் - ஷேவரத்திற்கும்
ஹேர்டானிக், டாய்லெட் பவுடர்...

யாகிறது! உன்னைக் காட்டிலும் அவள் இரண்டு வயதுதான் இளையவள்” என்று சாருமதியின் வயதைக் கணக்கிட்டு விட்டு வெளியே சென்று விட்டாள்.

தன்னைப் பெற்ற அன்னை சென்றவுடன் மீண்டும் சாளரத்தண்டை போய் உட்கார்ந்தாள் சங்கமித்திரை.

இளைஞனாயிருந்த போதிலும் மூன்று வருடங்கள் முன்னால் நடந்த மகத்தான கலிங்கத்துப் போரில், மகததேசத்துச் சேனைகளின் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கி, அவற்றைத் திறம்பட நடத்தி, தனது வீரச் செயல்களால் அசோக சக்கரவர்த்தியின் பெருமதிப்பைப் பெற்றவன், ராதாகுப்தரின் ஏகபுத்திரனான மங்கள குப்தன். மௌரிய சாம்ராஜ்யமே அவனது கீர்த்திக்கும் திறமைக்கும் தலை வணங்கியது. பெருங்குலத்து உதித்த பெற்றோர் பலர் அவனைத் தங்கள் பெண்களுக்குக் கணவனாகக் கொள்ள விழைந்தனர். ஆனால் கட்டழகனான மங்களகுப்தன் தனக்கு இயற்கையான புன்னகையுடன் பல கன்னிகைகளை வேண்டாமென்று நிராகரித்து விட்டான்.

இதற்கு முந்திய வைசாகத்தின் மகாபூர்ணிமை தினம். பகவான் புத்தரின் ஜயந்தியை முன்னிட்டுப் பாடலிபுத்திரம் விழா கொண்டாடிக் கொண்டிருந்தது. அன்பின் அருளொளியை அகிலமெல்லாம் பரப்பிய ஆதித்தியனான புத்த தேவனின் அமுத வாக்குக்களை யொத்த தண்ணொளியை எங்கும் பரப்பி, உயிர்களை ஆனந்தத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தான் முழுமதி.

அன்றைய தினம் அரண்மனை உத்தியான வனத்தில், அழகு பெற அலங்கரிக்கப்பட்ட கூடாரங்களில், விதம்விதமான அதிசயப் பொருள்களைப் பரப்பி, அரண்மனைப் பெண்கள் தம்மை அழகுபெற அலங்கரித்துக் கொண்டு, அவற்றை விற்பனை செய்வார்கள். அங்கு அவற்றை வாங்குபவர்கள், அப் பெண்கள் கேட்கும் விலையைக் கொடுத்தே தீரவேண்டும். இது நெடுநாட்களாக நடந்து வரும் ஒரு சம்பிரதாயம்.

அவ்விரவு, மற்றையப் பெண்களுடன் ஒரு கூடாரத்தில் கட்டழகியான சங்கமித்திரையும் அவள் சகோதரி சாருமதியும் தந்தத்தாலான பல விலையுயர்ந்த பொருட்களையும், பாரசீகத்திலிருந்து வந்த உயர்ந்த பட்டாடைகளையும் விலை கூறிக்கொண்டிருந்தனர். மிகத் துரிதமாக எல்லாப் பொருட்களும் விற்றுப்போய் விட்டன. இளவேனில் இன்புற மலர்ந்து நகைக்கும் சண்பக மலர்களைப் போல் பொன் சரிகை வேயப்பட்டிருந்த பட்டாடையொன்று மட்டுமே மிஞ்சியிருந்தது.

அச்சமயத்தில் அக்கூடாரத்து எதிரே தன் தோழர்கள் இருவருடன் வந்து நின்றான் ஆணழகனான மங்களகுப்தன். மலர்ந்த முகத்துடன் இளவரசிகள் இருவரையும் நோக்கி அப்பட்டாடையை விலை கேட்டான்.

இயற்கையிலேயே சற்றுச் சங்கோசமுடையவளான சங்கமித்திரை, ஏதும் பதில் சொல்லாமல் தன் சகோதரியை நோக்கினாள்.

பெரிய தனது கருவிழிகளை மலர்த்தி அவனைக் குறும்பாக நோக்கியபடியே, “அதன் விலை முப்பதாயிரம் பொற்காசுகள். உங்களால் அவ்வளவு விலை கொடுத்து வாங்க முடியுமா?” என்று கேட்டு விட்டுக் கலகலவென்று நகைத்தாள் சாருமதி.

“இதோ பெற்றுக் கொள்ளுங்கள்!” என்று பதிலுக்கு நகைத்து விட்டுத் தன் தோழர்களிடமிருந்த பொற்கிழிகளை வாங்கிக் கலகலவெனப் பொற்காசுகளை அவள் எதிரே கொட்டினான். பிறகு அவர்களிடமிருந்து பட்டாடையைப் பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான் மங்கள குப்தன்.

ஆனால், போவதற்கு முன்பாக அவன் சாருமதியின் மீது வீசிய பார்வையையும் நாணமே இன்னதென்று அறியாத அவள்,



சிவந்து குங்குமமாகி விட்ட முகத்துடன் சட்டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டதையும் பெரியவளான சங்கமித்திரை கவனித்தாள். இன்னதென்று விளங்காத ஒரு வேதனை தன் நெஞ்சத்தை இறுக்கிப் பிழிவதை உணர்ந்த பொழுது அவளுக்கே மிகவும் வியப்பாயிருந்தது.

“இதென்ன விநோதம்? இப்படிப்பட்ட இனம் விளங்காத சஞ்சலம் எனக்கு உண்டாகக் காரணமென்ன?” என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு அவ்வுணர்ச்சியை விவரிக்க முயன்றபோதிலும் அது ஏனோ அவள் இருதயத்தில் ஒரு முள்ளைப் போல் அடிக்கடி தோன்றி உறுத்திக் கொண்டேயிருந்தது.

விழாக்களெல்லாம் முடிந்து அந்தப்புரத்துக்குத் திரும்பியபொழுது தன் சகோதரியைக் கேட்டாள் சாருமதி.



உபாத்தியாயர்: உன் ஸ்லேட் எங்கேடா?
பையன்: அப்பா அதாலே என்னை அடித்தார். உடைந்து போய்விட்டது!
உபாத்தியாயர்: அடுத்த தடவை வாங்கும் போது நல்லதா, கனமா வாங்கச் சொல்லுடா!

"அக்கா! முப்பதாயிரம் பொற்காசுகள் கொடுத்துப் பட்டாடை வாங்கிக் கொண்டு போனாரே, அந்த வாலிபர் யார்?"

"அவர் தாம் கலிங்கத்துப் போரில் எத்தனையோ வீரச் செயல்களைப் புரிந்ததாகக் கூறிப் புகழப்படும் மங்களகுப்தர். நம் பிரதம மந்திரி ராதாகுப்தரின் மகன்" என்று பதில் அளித்தாள் சங்கமித்திரை.

"ஓ! அப்படியா?" என்று அதிசயத்தில் அமிழ்ந்து போனாள் சாருமதி. அதோடு மங்களகுப்தனின் வீரச் செயல்களில் ஆர்வம் காட்டி அவள் துருவித் துருவிக் கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்கத் தொடங்கவே, சங்கமித்திரையின் மனத்தில் பனிச்சென்று ஒரு எண்ணம் உதயமாகிச் சொல்லொணு வேதனையை அளித்தது. அவ்வேதனையை மறக்க வேண்டிய அவள் அடிக்கடி பௌத்த சங்கங்களுக்கும், மகாவிஹாரத்தில் அடிக்கடி நடைபெறும் பிக்ஷுக்களின் உபதேசப் பிரசங்கங்களுக்கும் செல்லலானாள்.

• • •

மறுதினம் மாலை மங்கி, கங்குல் பரவும் வேளை தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு உள்ளே நுழைந்த சாருமதி தன் சகோதரியின் விடுதி வெறுமையாயிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். ஒரு விநாடி அப்படியே நின்று விட்டு வெளியே வந்தவள் தோழி சங்கமாலையைக் கண்டாள்.

"சங்கமாலை!...அக்கா எங்கே?......பௌர்ணமி நிலவுக் கொண்டாட்டத்துக்கு வரவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை. இளவரசி அப்பொழுதே மகாவிஹாரத்துக்குப் போய் விட்டார்கள்! இன்று அங்கு மகாவந்த பிட்சுவின் பிரசங்கமாம். இரவு வர நெடு நேரம் ஆகலாமென்று கூறச் சொன்னார்கள்" என்றாள் அவள். சாருமதியின் முகம் வாடி விட்டது. ஏதோ யோசித்த வண்ணம் சிறிது நேரம் நின்றாள்.

பிறகு வேகமாய் மகாராணியின் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றாள்.

"அம்மா! அக்கா வரவில்லையாம்! மகாவிஹாரத்துக்குப் பிரசங்கம் கேட்கப் போய் விட்டாளாம்!" என்று வருத்தத்தோடு தெரிவித்தாள் சாருமதி.

மகாராணியின் முகம் வாடி விட்டது. "நேற்று என்னிடம் வருகிறேனென்று சொன்னாளே!" என்று கூறி விட்டு ஒரு விநாடி மௌனம் சாதித்தாள்.

"குழந்தாய்! சங்கமாலையுடன் நீ முதலில் போ! சக்கரவர்த்தி, மகேந்திரன் முதலியவர்களெல்லாம் அப்பொழுதே போய்விட்டார்கள். ராதாகுப்தர் நமக்காகக் காத்திருப்பார். முடிந்தால் சங்கமித்திரையையும் அழைத்துக் கொண்டு சற்று நேரத்துக்கெல்லாம் நான் வருகிறேன்!" என்று அவளை யனுப்பி விட்டு இளவரசியின் வருகைக்காகக் காத்திருந்தாள் மகாராணி.

உப்பரிகையில் சென்று, தூரத்தே வளைந்து ஓடிய சம்பாநதியின் கரையில், முழு நிலவின் ஒளியில் கூட்டம் கூட்டமாகக் காணப் பட்ட பொம்மை உருவங்கள் போன்ற ஆண்களையும் பெண்களையும் பார்த்தபடியே அசைவற்று நெடுநேரம் நின்றாள் மகாராணி.

அன்பு நிறைந்த அவளுடைய அன்னை இருதயம், தன் அருமை மகளின் மன உணர்ச்சிகளைத் தெற்றெனப் புரிந்துகொண்டது. வெம்பனி படர்ந்த தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

நெடுநேரம் சென்றது. முழுமதி உச்சி வானத்தை யடைந்தது கண்டு உள்ளே போகத் திரும்பினாள் மகாராணி.

"அம்மா!" என்று அழைத்தபடி அன்னை அருகில் வந்து வணங்கிய சங்கமித்திரை, "இவ்வளவு நேரமாக உறங்காமல் எனக்காகக் காத்திருக்கிறீர்களா, அம்மா?" என்று பணிவுடன் கேட்டாள்.

"குழந்தாய்!"

"அம்மா!"

தன் மகளை இறுக அணைத்துத் தழுவிக் கொண்ட மகாராணி, அந்த விநாடியிலேயே தன் செல்வ மகளின் வாழ்க்கையிலுண்டான திருப்பத்தை உணர்ந்து கொண்டாள்.

தன் தாயை ஏறிட்டு நோக்கினாள் சங்கமித்திரை. அவள் முகம் சலனமற்றிருந்தது.

"அம்மா! இலங்கை அரசனான தீசனின் அழைப்புக் கிணங்கி, மகான் மாரிபுத்தரின் சுவடிகளுடன், நானே இலங்கைக்குப் போய்ப் பகவான் புத்தரின் அருள், மார்க்கத்தைப் பரப்ப வேண்டுமென்பது என் அவா! பிக்ஷுணியாகச் செல்லத் தங்கள் அநுமதி தேவை. தந்தையின் அநுமதியைப் பெற்று விட்டேன்" என்றாள் சங்கமித்திரை.

மௌனமாகத் தலையசைத்த மகாராணி, தன் அருமை மகளைக் கட்டித் தழுவியபடியே அவள் கையிலிருந்த சுவடிகளை நோக்கினாள். பெற்ற அன்னையான அவள் உள்ளத்தில் உண்டான வேதனை பொலபொலவெனக் கண்ணீர் முத்துக்களாக உதிர்ந்தது.

"சுவடிகளுடன் நீயே இலங்கைக்குப் போய் வா, குழந்தாய்! புத்த தேவன் அருள் உனக்கு வழி காட்டும்" என்றாள் அவள் அன்னை கண்ணீர் உகுத்தபடியே.



அதோ வந்துவிட்டது ஆகாரம்...

மழையில்லாமலோ அல்லது வெள்ளத்தினலோ, எந்தக் காரணத்தினலாவது, பஞ்சம் என்று வந்துவிட்டால் நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடிவதங்குகிறார்கள். அந்த மாதிரி சமயங்களில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொருள்கள் மிக வேகமாக அனுப்பப்பட வேண்டும். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக உதவி செய்யும் அரிய பணியை ஐ.ஏ.ஸி. மிகப் பெருமையுடன் ஏற்று நடத்துகிறது.

உலகத்திலேயே பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஸ்தாபனங்களிலொன்றான ஐ.ஏ.ஸி. யின் விமானங்கள் வருஷந்தோறும் சுமார் 20,000,000 மைல்கள் பறக்கின்றன; 5½ லக்ஷத்திற்கு மேற்பட்ட ஜனங்களுக்கு துரிதமானதும், சுகமானதுமான பிரயாண வசதியை அளிக்கின்றன. 58,000 டன்களுக்கு மேல் தபாலையும், சரக்குகளையும் தேசத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு ஒரு சில மணி நேரங்களில் கொண்டு சேர்க்கின்றன.

பாரத நாட்டின் அன்றாட வாழ்க்கையில் குறுக்கிடும் எதிர்பாராத சங்கடங்களிலிருந்து தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதுகாக்க ஐ.ஏ.ஸி. உதவியாயிருக்கிறது.


1957-58-ல் ஐ.ஏ.ஸி.யைப் பற்றிய சில குறிப்புகள்:-
18,318,552 மைல்கள் பறந்தது
599,578 பிரயாணிகளை ஏற்றிச்சென்றது
44,208 டன் சரக்கு சுமந்தது
5,166 டன் தபால் தூக்கிச் சென்றது

ஐ.ஏ.ஸி. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பணியாற்றுகிறது

இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன்

செய்து பார்

நடக்கும் ஆடு



இந்தப் பொம்மையை நீங்களே செய்யலாம். இதற்குத் தேவையானதெல்லாம் ஒரு மெல்லிய வெள்ளை அட்டை, கெட்டியான கறுப்புக் காகிதம் அல்லது மெல்லிய 'ஸ்ட்ரா' போர்டு, 5 பித்தளைக் குமிழ் காகிதக் கிளிப், கொஞ்சம் பசை.

வெள்ளை அட்டையில் மேலேயுள்ள ஆட்டின் மூன்று பாகங்களையும், அம்புபோன்ற இரண்டு நீண்ட அட்டைத் துண்டுகளையும் அதேபோல் பெரிதாக வரைந்து கத்திரித்து எடுத்துக் கொள்ளுங்கள். (படம் வரையத் தெரியாதவர்கள் இங்கு மேலே உள்ள படத்தை நேரிய 'டிரேஸ்' செய்து வெட்டிக் கொள்ளலாம். ஆனால் ஆடு சிறியதாக இருக்கும்) பிறகு ஆட்டின் பாகங்களையும், நீண்ட அட்டைத் துண்டுகளையும் இடது கைப் பக்கமுள்ள படத்தில் காட்டியபடி கிளிப்பினால் பொருத்தி, கிளிப்பைப் பின்புறம் மடித்து விடுங்கள். இனி கெட்டியான கறுப்புக்காகிதத்தை இரண்டாக மடித்துக்கொள்ள வேண்டும். இந்தக் காகிதத்தில் ஆட்டின் முதுகு நீளத்துக்கு இரண்டு இடத்தில் வெட்டிப் பிளந்து கொள். முதல் பிளவு மடிப்பிலும் இரண்டாவது பிளவு மடிப்பின் கீழே மடித்த காகிதத்தின் நடுவிலும் (ஒருபகுதியில் மட்டும்) இருக்க வேண்டும். இனி ஆட்டின் முதுகுக்கு மேலே நீட்டிக் கொண்டுள்ள அட்டையை 2வது பிளவில் நுழைத்து மேலேயுள்ள (மடிப்புப்) பிளவின் வழியே வெளியே இழுத்துவிடு. இனி ஆட்டின் முதுகுப் புறத்தின் பின்னே இரு மூலையிலும் கொஞ்சம் பசை தடவி ஆட்டின் வயிறு மறைத்துக் கொண்டிருக்கும் பிளவை மூடிக் கறுப்புக் காகிதத்தோடு ஒட்டிவிடு. இப்போது ஆடு காகிதத்தில் அசையாமல் ஒட்டப்பட்டு விடும். கறுப்புப் பேப்பரின் மடித்த மூலைகளையும் பசையினால் ஒட்டிவிடு. இப்போது ஆடு கீழே (வலது கைப் பக்கத்தில்) உள்ள படத்தில் இருப்பது போல் கறுப்புக் காகிதத்தில் ஒட்டி நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும். பசை காய்ந்ததும் மேலேயுள்ள நீண்ட கைப்பிடி போன்ற அட்டையைப் பிடித்து மேலும் கீழுமாக அசைத்துப் பார். ஆடு வாலையும் தலையையும் ஆட்டிக் கொண்டு நடப்பதைக் காணலாம்! ஒரு முக்கிய கவனிப்பு. ஆட்டின் பாகங்களை கிளிப்பினால் இணைக்கும்போது துவாரத்தைச் சற்றுப் பெரிதாகச் செய்து இணைக்கப்பட்ட பாகங்கள் தாராளமாக அசையும்படி அமைக்க வேண்டும். அப்போதுதான் ஆட்டின் தலை, வால், கால்கள் இயங்கும். இல்லாவிட்டால் கைப்பிடி அட்டையை நகர்த்தும்போது ஆட்டின் அங்கங்கள் சரியாக இயங்காது. செய்து பாரேன். வேடிக்கையாக இருக்கும். —மூர்த்தி







மூன்று நண்பர்கள்

வாண்டு மாமா

6. வெடிகுண்டு

கதவைச் சற்றுப் பலமாக விரல்களால் குட்டினான். அயர்ந்து தூங்கும் கிட்டுவின் தாயாரை எழுப்பிவிடக் கூடாது என்ற எண்ணம் மணிக்கு. கதவோ திறககப்பட வில்லை. வேகமாக அழுத்தித் தள்ளினான். என்ன ஆச்சரியம்! கதவு திறந்து கொண்டு விட்டது. அது தாளிடப்படாமல்தான் இருந் திருக்க வேண்டும். மெள்ள உள்ளே எட்டிப் பார்த்த மணி அங்கு மனிதர்கள் படுத்துத் தூங்கும் அரவம் கொஞ்சமும் இல்லாதிருப் பதைக் கண்டு திகைத்தவனாக வேகமாக உள்ளே நுழைந்து, "பட்டு! பட்டு!" என்று குரலைத் தாழ்த்தி, ஆனால் அழுத்தமாகக் கூப்பிட்டான். பதில் இல்லை. அறைக்குள் வெளிச்சமுமில்லை. பரபரப்புடன் படுக்கை யில் கை வைத்த மணி அது காலியாக இருப்பதைக் கண்டு திகைத்தான். அதில் வெகு நேரமாக யாரும் படுக்கவில்லை என்ப தற்கு அறிகுறியாக ஜில்லென்று இருந்தது. தலையணையை முகர்ந்து பார்த்தான், அவள் தடவிக்கொள்ளும் தைலத்தின் வாசனை வருகிறதா வென்று. இல்லை. அப்படி யானால், "இன்னும் அவள் திரும்பி வர வில்லையா? அவர்கள் போய் வெகு நேர மாயிற்றே!" என்று சிந்தித்தபடியே வேக மாகக் கீழே இறங்கி வந்தான். "ஒரு வேளை கிட்டுவுடனே பட்டுவும் கீழேயே படுத்துக் கொண்டு விட்டாளோ?"

கூடத்து விளக்கைப் போட்டான். பளி ரென்று ஒளி பரவியது. கிட்டு படுத்துக் கொள்ளுவதாகச் சொன்ன அறையும் காலியாக இருந்தது. இன்னமும் அவர்கள் திரும்பாதது மணிக்கு என்னவோ ஒருவித பயத்தைக் கொடுத்தது. ஒருவேளை சதி காரர்கள் அவர்களை மடக்கிப் பிடித்திருப்பார்களோ என்ற நினைவெழுந்தது. ஆனால் 'ரங்கசாமி யும் கூட இருக்கிறானே, ஒன்றும் நிகழ்ந்து நேர்ந்துவிடாது' என்ற ஆறுதல் ஏற்பட்டது.

கடிகாரத்தின் 'டிக் டிக்' ஒலி தெளிவாகக் கேட்டது. "அதைத் தவிர அது என்ன இன்னொரு ஒலி?" மணி திகைப்புடன் மேஜைக்கு மேலே மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். அதே சமயத்தில் மேஜை மீதிருந்த ஒரு பெட்டியின் மேல் அவன் கவனம் பதிந்தது. 'பட்டு பாட்டு வகுப்புக்கு எடுத்துச் செல்லும் சுருதிப் பெட்டி யல்லவா அது? அது எங்கே இங்கு வந்தது?' அருகே சென்று ஆராய்ந்தான். அது சுருதிப் பெட்டியல்ல. அதன் உள்ளே மின்சாரக் கம்பிகளும் பாட்டரி யும். "ஐயோ! அது... அது!" அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அது குறிப்பிட்ட நேரத்தில் தானாக வெடிக்கும் படியான வெடிகுண்டு (டைம் பாம்) அடங் கிய பெட்டி!

• • •

மணி ஏழாவது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் இரண்டாவது மகாயுத்தம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தது. ஒவ்வொரு நாளும் வகுப்பில் வாத்தியார் யுத்தச் செய்திகளைப் பற்றி விளக்குவார். திறந்த வாய் மூடாமல் திகைப்பும் வியப்பும் பயங்கரமும் நிறைந்த யுத்தரங்கச் செய்திகளைக் கேட்டிருக்கிறான் மணி. விதம்விதமான ரகசிய ஆயுதங்களை யெல்லாம் ஜர்மானியர்கள் கையாண்டு பிரிட்டிஷ்காரர்களைத் திகைக்க வைத்த விவரங்களை அவன் உபாத்தியாயர் உற்சாக மாகச் சொல்லுவார். அவர் ஹிட்லரின் கட்சி. அந்தக் கதைகளில் 'டைம் பாம்' என்ற ஒரு வெடிகுண்டைப் பற்றி அவர் சொல்லி இருந்தது மணிக்கு இப்போது நினைவுக்கு வந்தது. 'அந்த வெடிகுண்டு எந்தவிதமான உருவ அமைப்பிலும் இருக் கும். குறிப்பிட்ட நேரத்தில் தானாக மணி யடிக்க அலாரம் கடிகாரத்தில் உள்ள விசையைப் போல் இந்த வெடிகுண்டிலும் குறிப்பிட்ட நேரத்தில் தானாக வெடிக்கும் படியான ஒரு அமைப்பு இருக்கும். இன்ன நேரத்தில் வெடிக்க வேண்டும் என்பதற்கு ஏற்ப அதைப் பொருத்தி வைத்து விட்டால் போதும். குறிப்பிட்ட அந்த நேரத்தில் அது பயங்கரமாக வெடித்துச் சர்வ நாசத்தை விளைவிக்கும். அந்தக் குண்டின் அருகில் காது வைத்துக் கேட்டால் அதற்குள் கடிகாரத்தைப் போலவே 'டிக் டிக்' என்று ஒலி கேட்கும்.' இப்படி உபாத்தியாயர் சொல்லி இருந்ததும் நினைவுக்கு வரவே மணி அந்தப் பெட்டிக்குள் இருப்பது நிச் சயம் அதுபோன்றதொரு 'டைம் பாம்'

தான் என்று தீர்மானித்து விட்டான். அவன் உடலிலே மின்சாரம் பாய்ந்தது போன்றதொரு அதிர்ச்சி ஏற்பட்டது. 'சதிகாரர்கள், தங்கள் இருப்பிடமும் ரகசியமும் எனக்குத் தெரிந்து விட்டது என்பதினால் இது என் வீடென்று நினைத்து இந்த வீட்டையே என்னோடு வெடி வைத்துத் தகர்த்து எறியத் திட்டமிட்டு விட்டார்கள்' என்ற முடிவுக்கு வர மணிக்கு அதிக நேரமாகவில்லை. அதை அப்படியே எடுத்து ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தாவி எடுத்தான். நடுங்கும் உள்ளத்திலும் உடலிலும் உறுதியை வரவழைத்துக் கொண்டான். பெட்டியைக் கையில் எடுத்ததும் சட்டென்று மின்னலைப் போல் ஒரு எண்ணம் தோன்றியது.

'இதை ஜன்னல் வழியாக வீசினால் அந்த அதிர்ச்சியில் அது வெடித்து அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தால்...?'

''ஐயோ!'' மணியின் நெஞ்சு நடுங்கியது. கிட்டுவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் உள்ளவருக்கு ஐந்து குழந்தைகள். கடைசிப் பையன் பாபு, கன்னங்குழியச் சிரிக்கும் அந்த அழகிலே மணி எத்தனையோ தடவைகள் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறான். 'இதை வெளியே வீசி எறிவதினால் அடுத்த வீட்டுக் குழந்தைகளுக்கு...' மணியினால் அதை நினைக்கவே முடியவில்லை. வீசுவதற்கு ஓங்கிய கை தானாகத் தணிந்தது. அவன் இதயத்தோடு போட்டி போட்டுக் கொண்டு 'டிக் டிக்' என்று துடிக்கும் அந்தப் பயங்கர ஆயுதமுள்ள பெட்டியைத் தன்மார்புடன் அழுத்திப் பிடித்துக் கொண்டான். அதை அழுத்தி மூடக்கூட முடியவில்லை. அதிலிருந்து மின்சாரக் கம்பிகள் இரண்டு வெளியே துருத்திக் கொண்டு நின்றன. மணிக்கு அந்தப் பெட்டியை அழுத்தி மூடுவதற்குப் பயம். அப்படிச் செய்தால்—அந்த அதிர்ச்சியில் அது உடனே வெடித்து விட்டால்?...

அந்த நிலையிலும் அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. இத்தகைய பயங்கரமான ஆயுதத்தைக் கொண்டு போய் எங்கே போடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டான். 'புலித்தேவன் தோப்புக்கு மறு பக்கத்திலுள்ள அந்த மைதானம்தான் இதைக் கொண்டு போய்ப் போடுவதற்கு ஏற்ற இடம். ஏன் புலித்தேவன் பங்களா அருகிலேயே போட்டாலும் போடலாம். சதிகாரர்களின் தங்குமிடமான அதை, அவர்களுடைய வெடிகுண்டான இதனாலேயே அழித்து விட்டால்? ஆம் அதுதான் சரியான முடிவு.'

மணி ஓட்டப்பந்தயத்தில் அசகாய சூரன். அடிபட்ட முழங்கால் அதிகமாகப் பாதிக்காதிருந்தால் பத்தே நிமிஷத்தில் அவன் புலித்தேவன் தோப்பை அடைந்து விடுவான். யோசிக்கவோ தயங்கவோ அவனுக்கு நேரமில்லை. அந்தக் கொடிய ஆயுதம் எந்த நிமிஷத்திலும் பயங்கரமாக வெடித்து விடலாம். குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் அந்த வெடிகுண்டு அடங்கிய பெட்டியைக் கமுக்கட்டில் இடுக்கி அணைத்தபடி வெளியே ஓடலானான் மணி. ஸ்நானம் செய்தது போல் வியர்வை அவன் உடலை நனைத்திருந்தது. வீதிக்கு வந்த மணி வாயுவேகம் மனோவேகம் என்பார்களே அது போல் தலைதெறிக்கப் புலித்தேவன் தோப்பை நோக்கி ஓடலானான். முழங்கால் வலியைப் பற்றிய எண்ணமே அவனுக்குச் சிறிதும் இல்லை.

அந்தத் தெருவின் முனையிலே வளைந்து திரும்பிய மணி பாறாங்கல்லில் மோதிக் கொண்டது போன்ற உணர்ச்சியிலே அப்படியே பொறி கலங்கி நிலைதடுமாறிப் போனான். மோதிக் கொண்ட வேகத்திலே பீதியடைந்து 'வீல்' என்று கத்தியும் விட்டான் மணி. அதே சமயம் இரண்டு இரும்புக் கரங்கள் மணியின் தோள்களைப் பற்றின. தன்னைப் பற்றிய உருவத்தின் கரங்களிலிருந்து விடுபடத் திமிறியபடியே நிமிர்ந்து நோக்கினான் மணி. அது ஒரு நெடிதுயர்ந்த மனித உருவம். தான் மோதிக் கொண்டது சுவரில் அல்ல, இரவு ரோந்து சுற்றும் ஒரு போலீஸ்கார் மீது தான் என்பதை அறிந்த மணிக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

''என்ன தம்பி! எங்கே இந்த வேளையிலே இத்தனை அவசரமாக ஓடுகிறாய்?'' என்றார் 465.

''ரொம்ப நேரமாயிட்டுது, சார்! அம்மா கவலைப்படுவாங்க. அதுதான் இப்படி ஓட



றேன்'' என்றான் மணி குளறியபடி. போலீஸ்காரர் மணியின் தோள்களைப் பற்றியிருந்த தம் கைகளை எடுத்தார். ''இத்தனை நேரமாக நீ எங்கே தம்பி போய் விட்டு வரே...உண்மையைச் சொல்லி விடு'' என்றார், எதிலும் உண்மையையே அறிய விரும்பும் அவர்

''எங்கேயுமில்லே சார். என் சிநேகிதன் வீட்டிலேயிருந்து வரேன்.'' மணிக்கு ஓடிவந்த வேகத்தில் மூச்சு வாங்கியது. போலீஸ்காரர் கேள்விகளுக்கு நிதானமாகப் பதிலளிக்கும் நிலையிலில்லை அவன். கொஞ்சம் கொஞ்சமாகத் தன் கையிலுள்ள வெடி குண்டு, தன் கடைசி விநாடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற நினைவு அவனை நிற்கவிடவில்லை. போலீஸ்காரரின் காதுகளில் அந்த வெடிகுண்டின் 'டிக் டிக்' ஒலி விழுந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மணி அந்தப் பெட்டியை அடிக்கடி பார்த்துக் கொள்வதை அவர் கவனித்து விட்டார். ''அந்தப் பெட்டிக்குள்ளே என்ன தம்பி?'' என்று கேட்டார். அவர் குரலில் அதிகாரமோ, அதட்டலோ இல்லை. அன்பு கலந்திருந்தது. மணி நாக்கினால் காய்ந்த தன் உதட்டை நக்கி நனைத்துக் கொண்டான். என்ன பதில் சொல்வது? 'சந்தேகம் கொண்ட அவருக்கு எதையும் கேட்க, பார்க்க உரிமையுண்டு. பொது மக்களின் பத்திரத்துக்கு ஆபத்தான விஷயத்தில் போலீசுக்குத் தானே அக்கறை. உண்மையைச் சொல்லி விட்டால் என்ன?' என்று நினைத்தான் மணி. ஆனால் அடுத்த விநாடியே தன் மாமாவின் வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்தன.

''போலீஸ் என்றால் விளக்கம், விசாரணை. அவர்களிடம் சிக்கிக் கொண்டால் பிறகு விடுபடவே முடியாது. எங்கள் காரியங்களோ மிக்க ரகசியமானவை.''

உண்மையை அவரிடம் சொல்லக் கூடாது என்ற முடிவுக்கு அவன் வருவதற்குள் அவனையறியாமலே அவனுடைய வாய் ''இது ஒரு வெடிகுண்டு சார்!'' என்று சொல்லி விட்டது.

மணியின் வார்த்தையைக் கேட்ட போலீஸ்காரர் விலாவில் கையை அழுத்திக் கொண்டு கடகட வென்று சிரித்தார். மணியின் வார்த்தைகளில் அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அடக்க முடியாத சிரிப்புடன் இனி சிரிக்க முடியாது என்ற நிலையில், ''தம்பி! அது வெடிகுண்டுதானே? அப்போ சரி...உன்னைப் பார்த்தால் யோக்கியமான பையனாகத் தெரிகிறது போ... வெடிகுண்டு வெடிக்கிறதுக்கு முன்னால் சீக்கிரமாய்ப் போய்ப் படுத்துக் கொள்'' என்று சொல்லி விடை கொடுத்தார்.

மணியும் பெட்டியை இறுக அணைத்துக் கொண்டு ஓடலானான்.

மணி ஓடுவதையே பார்த்துக் கொண்டு நின்ற போலீஸ்காரர் குல்லாயை எடுத்துத் தனது வழுக்கைத் தலையிலிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டபடியே, ''பையனைப் பார்த்தால் நல்லவனாகத் தெரிகிறது. ஆனால் அவன் முகத்திலே ஏன் அப்படிக் கலவரம்? நிஜமாகவே எதையோ கண்டு பயந்தவன் போலல்லவா இருக்கிறான்'' என்று சிந்தித்தவர் சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல், ''அடே, தம்பி, நில்லு நில்லு'' என்று கத்தினார்.

தெருக் கோடிக்குப் போய்விட்ட மணி போலீஸ்காரரின் குரல் கேட்டதும் சட்டென்று குறுக்குச் சந்து ஒன்றில் புகுந்து இன்னும் வேகமாக ஓடலானான். அந்தக் குண்டு வெடிக்க இன்னும் எத்தனை நிமிஷங்கள் - விநாடிகள் இருக்கின்றனவோ, யார் கண்டார்கள்? மூச்சைப் பிடித்துக் கொண்டு அவன் ஓடலானான்.

வெகு தொலைவில் கேட்ட போலீஸ்காரரின் ஊதுகுழல் நாதம் வர வர மங்கி மறைந்தே விட்டது. மணியை அவரால் பின் தொடர முடியவில்லை. பீதியும், அயர்வும் அவன் நெஞ்சை அடைத்தன. கொடிய விஷப்பாம்பைத் தூக்கிக் கொண்டு ஓடும் உணர்விலே அவன் உடல் ரோமமெல்லாம் குத்திட்டு நின்றன. தன் பலங்கொண்ட மட்டும் அதை வீசித் தூர எறிந்து விட்டு, அதிலிருந்து விடுதலை பெறத் தவித்தது அவன் உள்ளம். அவனால் ஓடவே முடியவில்லை. வியர்வை வேறு வழிந்து வந்து பார்வையை மறைத்தது.

''அதோ...அதோ புலித்தேவன் தோப்பு. மைதானம்!'' கால் தடுக்கித் தடுமாறித் தலை குப்புற விழுந்தான் மணி. வீடு, மரம், விளக்குக் கம்பம், வீதி எல்லாமே அவனைச் சுற்றி வேகமாகச் சுழல ஆரம்பித்தன. அந்த நிலையிலும் அந்தப் பெட்டியை அவன் கைகள் விடவில்லை. எப்படியாவது எழுந்திருந்து அந்தப் பெட்டியை வீசி எறிய வேண்டும் என்று மணியின் உள்ளுணர்வு கூறியது. எழுந்திருக்க முயன்றான். கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. எப்படியோ கைகளை ஊன்றி எழுந்திருந்தான். வர வர அவன் நினைவு மங்கிக் கொண்டு வந்தது. அந்தப் பயங்கர ஆயுதத்தின் 'டிக் டிக்' ஒலியும் மெல்ல மெல்லத் தேய்ந்துவிட்டதை உணர்ந்தான். அவன் மயங்கித் தரையில் விழுந்தபோது அவன் எண்ணத்திலே நிறைந்து நின்றது இதுதான்: 'பிறரைக் காப்பாற்றும் முயற்சியில் மணி தன்னுடைய உயிரைக் கொடுத்தான் என்று என் மாமா பெருமைப் படப் போகிறார்.'

(தொடரும்)

தமிழ் கூறும் நல்லுலகம்

நோர்வேலா தக்ஷிண பாரத சமாஜத்தினர் கோகுலாஷ்டமியைச் செப்டம்பர் 6ந் தேதி வெகு சிறப்பாகக் கொண்டாடினர். பஜனையும், திவ்விய நாம சங்கீர்த்தனமும், சகஸ்ர நாம அர்ச்சனையும் நடந்தன. இந்த வைபவத்தில் ஏராளமான பெண்மணிகளும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஹிந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட்டின் ரெஸிடெண்ட் டைரக்டர் திரு எம். கணபதி எல்லா வைபவங்களிலும் வந்திருந்து சிறப்பித்தார்.

★

ஜபல்பூர் தென்னிந்திய சங்கத்தின் ஆதரவில் ஆகஸ்டு 15, 16, 17 தேதிகளில் "சுதந்திரத் திருவிழா" கொண்டாடப்பட்டது. 17-ந் தேதியன்று ராஜாஜியின் படத் திறப்புவிழா நடைபெற்றது. பழம் பெரும் தேசபக்தர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அவர்கள் ராஜாஜியின் மகிமையைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

அதைத் தொடர்ந்து, "விடுதலைப்போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்கு" என்ற பொருள் பற்றி ஓர் சொற்பொழிவும், பாரதியின் இன்னிசை விருந்தும், "குமாஸ்தா குப்புசாமி" என்ற ஹாஸ்ய ஓரங்க நாடகமும் நடைபெற்றன.

★

ஜபல்பூர் தென்னிந்திய அமெச்சூர் நடிகர் சங்கத்தின் ஆறாவது ஆண்டு விழா ஜீ. சி. எப். எஸ்டேட் வங்காளி கிளப்பில் திரு பி.வி. ராமமூர்த்தி அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதுசமயம் காரியதரிசி திரு டி. எம். இராகவனு அவர்களால் தயாரித்ததும் டைரக்ட் செய்ததுமான "அறிவே ஆண்டவன்" என்னும் சமூக நாடகம் நடந்தேறியது. நாடகத்தில் பாகவதராக நடித்த திரு என். மணிவாசகம், தகப்பனாராக நடித்த திரு டி. ஏ. சுந்தர்சிங், திரு ராமதாஸ், பிள்ளையாய் நடித்த திரு டி. துரைராஜ், பெண் வேடம் தாங்கி நடித்த திரு மதன கோபால், திரு பிருதிவிராஜ், வில்லனாக நடித்த திரு எம். டி. மூர்த்தி இவர்கள் எல்லோரும் திறமையுடன் நடித்து ரசிகரது பாராட்டுதலைப் பெற்றனர்.

திரு பீட்டர்ஸ் குழுவினரின் பின்னணிப் பாட்டும் பக்க வாத்தியமும் காதுக்கு இனிமையாக அமைந்திருந்தன.

★

எட்டியாந்தோட்டை இம்பீரியல் படமாளிகையில் திரு நா. பொ. தருமலிங்கம் கலாமன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசினார்.

" நமது நாடும் பண்பாடும் சிறந்து செழிப்புற்று விளங்கக் கலைவளர்ச்சி அவசியம். அரசியல்வாதிகளால் சாதிக்க முடியாத பல செயல்களையும் சமூக மறுமலர்ச்சியையும் கலைஞர்களால் ஆக்க முடியும். நம் தாய் நாடாம் பாரத நாட்டில் இசை, நடனம் போன்ற கலைகள் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல் நம் இலங்கையில் இல்லாதது வருந்தத்தக்கது. இந்நிலையை நீக்கி நம் நாட்டிலும் கலைமணம் கமழும்படி செய்ய வேண்டும்" என்று தலைவர் துவக்க உரையில் கூறினார்.

மற்றும் ஆசிரியர்கள் கே. கந்தசாமி, கே. நல்லையா, பி. கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு கே. நல்லையா மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மன்ற நிர்வாகிகளும் இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

★

கண்ணன் பிறந்த தினமான கோகுலாஷ்டமி அன்று இந்தூர்வாழ் தென்னிந்தியர்கள் 'குமாரபவனி'ல் ஒன்றுகூடி அப் புண்ணிய தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று பஜனையும் சங்கீதக் கச்சேரிகளும் விமரிசையாக நடந்தன.

கச்சேரியில் மிருதங்கம் வாசித்ததோடுகூட வாய்ப்பாட்டிலும் தமது திறமையை காட்டிவிட்டார் திரு ரவீந்தரன் அவர்கள். திரு கிருஷ்ணமூர்த்தியும், திருமதி சரோஜா அவர்களும் செவிக்கினிய கீர்த்தனைகளை வரையின்றி வழங்கினர்.

முடிவில் திரு வி. பி. அய்யர் அவர்கள் கண்ணன் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதின் அவசியத்தைப் பற்றி விளக்கமாகக் கூறி, விழாவில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்குத் தம்முடைய மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.




சென்னை சார்ட்டர்ட் அக்கவுன்டெண்ட் திரு டி. வி. மீனாட்சி சுந்தரம் புதல்வர் திரு எம். வி. எஸ். மணி பி. ஈ.க்கும், திருச்சி சார்ட்டர்ட் அக்கவுன்டெண்ட் திரு ஜி. பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. சத்தியபாமாவுக்கும் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

வாழ்க மணமக்கள்!

திருச்சி சிம்ஸன் & கோ., லிமிடெட்டின் பிராஞ்சு மானேஜரான ஸ்ரீ கே. ஆர். சுப்பிரமணியம் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி சங்கரிக்கும் Mr. கே. என். வெங்கட்டராமன் B. A. (Hons.) (சீனியர் ரிசர்ச் ஸ்காலர், சென்னை யுனிவர்ஸிடி) அவர்களுக்கும் திருமணம் திருச்சியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !





ஹிந்திப் பிரச்னை

வட நாட்டிலுள்ள ஹிந்தி பாஷைப் பண்டிதர்களும், அரசியல்வாதிகளும் அதிகார ஆசையும், வெறியும் கொண்டு செயல்படத் தொடங்கி விட்டார்கள் என்பதைத் தங்கள் 7-9-58 இதழ் தலையங்கத்திலிருந்து தெளிவாக அறிய முடிகிறது. இதை இப்பொழுதே தடை செய்து நிறுத்தாவிட்டால் "இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கினான்" என்ற பழமொழிப்படி முடிந்து விடும். ஹிந்தி பாஷையைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைப் போல், மற்ற பாஷையினர் சில ஆண்டுகளில் ஹிந்தியைக் கற்று வாகவமாகப் பேசவோ, எழுதவோ முடியாது.

இன்றைய தினம் எந்த பாஷையில் உயர்ந்த இலக்கியமோ, கட்டுரையோ வெளிவந்தாலும், அது ஆங்கில பாஷையில் முதலில் வெளிவந்து விடுகிறது. பிறகுதான் மற்ற பாஷைகளில் வெளிவருகின்றன. உலகெங்கும் பரவி நிற்கும் அறிவுச் செல்வமும், இலக்கியச் செல்வமும் நிறைந்த ஆங்கிலத்தை இந்தச் சமயத்தில் கைவிடுவது, நமது அறிவீனத்தை வெளிப்படுத்துவதாகும்.

சென்னை
5—9—58
வெ. நாகராஜன்

நீடுழி வாழ்க!

"விலைவாசிகள் உயர்வது ஏன்?" என்ற கட்டுரை தற்போது பாரதநாட்டில் நிலவி வரும் உண்மை நிலையைத் தெளிவாக்குகிறது. "அகடிதகடனா சாமர்த்தியம்" இந்தி வெறியர்களின் அவசரப் புத்தியைக் காட்டுகிறது. "ஜில்லாப் பிரிவினை" அவசியம் நிர்வாகச் செலவை அதிகரிக்கத்தான் செய்யும் என்ற உண்மையைக் கூறுகிறது.

அறிஞர் ஸ்ரீ ராஜாஜியின் "நவீன உத்தர காண்டம்" தற்காலம் யாவரும் படித்துப் பயன்படும்படியிருக்கிறது. புலவர் ஸ்ரீ நா.பா. அவர்களின் "பாண்டிமாதேவி" பழங்காலத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. "பொங்கி வரும் பெருநிலவு" நிச்சயம் காரிருளைப் போக்கும். இந்நாளில் எதற்கும் "பொரிகைக் கடிதம்" தேவைதான். "வளையல் தந்தவன்" உண்மையில் மிக நல்லவன். காந்தனின் "நாடோடி மன்னன்" சினிமா விமரிசனம் நல்ல முறையில் அமைந்துள்ளது. இன்னும் பல.

அரசியல் கட்டுரைகளின் மூலம் கல்கியின் புகழ் எங்கும் திகழ்கிறது. மேலும் வளர வேண்டுமென்றே எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அதிராமபட்டினம்
1—9—58
அ. உலகநாதன்

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்

அரசினர் தண்ணீர்த் திட்டத்துக்குப் பணம் இல்லையென்று கூறிவிட்ட பிறகு திருச்சி நகர மன்றம் 16-6-58ல் அவசரத் தேவையல்லாத சில செலவுகளை ஒதுக்கி வைத்து விட்டு ரூபாய் பத்து லட்சம் இதற்காக அனுமதித்துள்ளார்கள்.

ஆனால் அரசினர் இப்போது வெளியிட்டுள்ள அறிக்கையில், குழாய்க் கிணறுகள் அமைத்து, போதிய தண்ணீர் வருகிறதா என்று பரிசோதித்துப் பார்த்து விட்டுப் பிறகு அவர்களுக்கு அறிவிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தப் பரிசோதனைக்கே மூன்று ஆண்டுகள் ஆகிவிடும். அதுவரை திருச்சி மக்கள் உயிரோடு இருக்க வேண்டுமே?

போதாக் குறைக்கு ஏற்கனவே, சானிட்டரி இஞ்சினியரால் தயாரிக்கப்பட்ட புதை சாக்கடைத் திட்டத்தையும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிற வரையில் கைவிட்டு விட்டார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் திருச்சியில் காங்கிரசல்லாத ஒருவர் நகரசபைத் தலைவராக இருப்பதுதான் என்றும், அவரைக் காங்கிரஸ்காரராக ஆக்கும் முயற்சிதான் நகரசபைக்குப் பல விதத்திலும் தொல்லை தருவது என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய அரசியல் பித்தலாட்டங்களுக்கும், சூதாட்டங்களுக்கும் நடுவே வரி கொடுக்கும் திருச்சி மக்கள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

திருச்சி
9—9—58
ஆர். நாகசுந்தரம்
நகர மன்ற உறுப்பினர்

இன்றைய நிலைமை!

நம் நாட்டில் விவசாயிகள் அதிகம். நிலப்பரப்பும் இருக்கிறது. நேர்மையான முறையில் தற்காலம் உள்ள வசதியைக் கொண்டே முயற்சி செய்தால்தான்ய இறக்குமதி தேவையில்லை. ஆனால் இன்றைய நிலைமை கூலிக்கும், வருமானத்துக்கும்தான் கிளர்ச்சி. வேலை செய்ய ஒருவரும் விரும்பவில்லை.

விவசாயிகள் தொகை அதிகம். அவர்களிடையே தவறான எண்ணங்கள் அதிகமாகப் புகுத்தப்பட்டிருக்கின்றன.

பொன் விளையும் நிலங்களில் இன்று யாருக்கு 60 சத விதம் யாருக்கு 40 சத விதம் என்ற கிளர்ச்சிதான் நடைபெறுகிறது. அந்த நாற்பதாவது ஒழுங்காகக் கிடைக்குமா என்ற பயம்தான் [ஏற்பட்டுள்ளது. அந்தக் கிலியில் ஏரு போட்டு விளைந்த நெல்லுக்குச் சண்டை போட்டுக் கொண்டு கோர்ட்டுக்குப் போவதை விட 'வெறும் மண் விளைந்தது



போதும், செலவு செய்யும் தொகையாவது நம்மிடம் மிச்சமாக இருக்கட்டும்' என்ற பந்தோபஸ்து உணர்ச்சி ஏற்படும் நிலைமை உண்டாகி விட்டது.

மாயூரம்
9—9—58
ஏ. எஸ். கணேசன்

மாயாவாதம்!

'அகடிதகடனா சாமர்த்தியம்' என்ற அழகான துணைத் தலையங்கம் பார்த்தேன். ஹிந்தி "அபிமானி"கள் அடிக்கடி எடுத்துச் சொல்லும் வாதத்தைத் தவிடுபொடியாக்கி விட்டீர்கள்.

தமிழ் நாட்டில் ஆங்கிலம் தெரிந்தவர்களை விட ஹிந்தி தெரிந்தவர்களே அதிகம் என்று சொல்லும் 'ஹிந்தி பிரசார் ஸமாசார்' இதழ் ஒன்றை நானும் படித்தேன்.

முதல் முறை, முதல் பரீக்ஷையில் தேறுபவர், இரண்டாவது முறை, அடுத்த பரீக்ஷையில் தேறுகிறார். மூன்றும் முறை அதற்கும் அடுத்த பரீக்ஷையில் தேறுகிறார். பிராத்மிக் தேறியவர், 'மத்யமா' தேறியவர் என்று ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் போட்டுக் கூட்டிப் பார்த்தால், ஒருவரே எத்தனை பரீக்ஷை தேறியிருக்கிறாரோ, அத்தனை நபராகக் கருதப்பட இடமுண்டு. இந்த முறையில்தான் ஸபா புள்ளி விவரம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதை நான் எங்கள் வித்தியாலயம் நடத்திய 'ஹிந்தி ஆட்சி மொழியாக முடியுமா?' என்ற விவாதத்தின் போது குறிப்பிட்டேன். இதைப் பற்றி விளக்கம் கேட்டு எங்கள் வித்தியாலயத்தின் சார்பில் உள்ள மாணவர் சங்கம் ஸபாவுக்கு எழுதியது: பதிலில்லை!

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவர்களை ஆங்கிலம் தெரிந்தவர்களாகவும், 'ஸபா'வின் 'ராஷ்டிரபாஷா' தேறியவர்களை ஹிந்தி அறிந்தவர்களாகவும் வைத்துக் கொண்டு கணக்குப் போட்டுப் பார்த்தால் தெரிய வரும் அகடிதகடனா சாமர்த்தியம்.

திருச்சிராப்பள்ளி
1—9—58
வேணி

சேவை செய்ய முடியுமா?

சென்ற நான்கு ஆண்டுகளாகச் சைதாப்பேட்டையில் "கல்வி சேவா நிலையம்" என்ற பெயரில் ஒரு ஆரம்பப்பள்ளி நிறுவி, அதைப் பொதுஜன சகாயத்தின் பேரில் நடத்தி வருகிறோம். அதற்குச் சர்க்கார் அங்கீகாரம் வேண்டுமென்று 1955 ஜூலையில் விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அதற்கு 1958 ஏப்ரல் வரையில் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

அங்கீகாரம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் நாங்கள் இருந்தபொழுது கல்வி அதிகாரியால் 29-3-58 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி "'புது ஆரம்பப் பள்ளிகளை அங்கீகரிப்பதற்கில்லை" என உத்தரவு வந்தது.

இந் நிலையில் எங்களது போன்ற பொது ஸ்தாபனங்கள் எப்படிக் கல்வி விஷயத்தில் உற்சாகத்துடன் சேவை செய்ய முடியும்?

மதராஸ்-15
1—9—58
எம் சுபத்ரா மாதவன்
தலைவர், மாதர் காங்கிரஸ்

வாழ்த்துகிறோம்!

மங்காத பழந்தமிழர் மாண்புதன்னை
மனம்நோகும் சமுத்தின் மறத்தமிழர்
இங்கிதமே படித்துருகி இழிவகல
எழில் 'பாண்டிமாதேவி'யாம் இங்கதையும்
'பொங்கிவரும் பெருநிலவும்' போன்றுரையும்
பூத்து நறுமணம் கமழும் பொய்கைதன்னை
சங்கூதி வாழ்த்துகிறோம்! வாழ்க! வாழ்க!
சாகாத வரம்பெற்று வாழ்க 'கல்கி!'

ருச்சவெளி
30—8—58
அனலன்

பஸ் நிலையம்

மதுரை மாவட்டத்தில் தெற்கே இருக்கும் கம்பம் நகரத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஒரு பஸ் நிலையம் நிறுவவில்லை; நடுச் சாலையில் பஸ்ஸை நிறுத்தி டிக்கெட் கொடுக்கின்றனர். பொது ஜனங்கள் தங்குவதற்கும் தங்கும் இடம் இல்லை. பஸ்ஸில் டிக்கெட் எடுக்கும் நேரம் பார்த்து பிக்பாக்கெட் தொல்லை. இத்தனை கஷ்டங்களும் என்று தீருமோ!

திருவாங்கூர்
4—8—58
பி. துரைசாமி பிள்ளை

அறிவூட்டும் கட்டுரைகள்!

கல்கி ஆராய்ச்சி அரங்கத்தில் வெளியான ஒவ்வொரு கட்டுரையையும் படித்து மகிழ்ந்தேன். இந்தியாவின் அன்னியச் செலாவணியில் ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைப் பற்றி நாட்டில் தலைசிறந்த ஒவ்வொரு அறிஞரும் தங்களுக்குத் தோன்றிய காரணங்களை ஒளிவு மறைவின்றி அப்படியே எடுத்துரைத்திருக்கிறார்கள். சிலர் அதைச் சமாளிக்கும் வகையில் பரிகாரமும் வெளியிட்டிருக்கிறார்கள். இதிலிருந்து 'இந்தியாவின் பொருளாதார நிலை என்ன? அது சம்பந்தமாகச் சர்க்காரின் கொள்கை யாது?' என்பதையெல்லாம் இலகுவாக அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது.

உழைப்பு, உற்பத்திப் பெருக்கு, சேமிப்பு, விவசாய அபிவிருத்தி, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், அன்னிய மூலதனம் போன்ற ஒவ்வொரு விஷயத்தையும் புள்ளி விவரங்களுடன் தெளிவான முறையில் மக்களுக்குப் புரியும்படி விளக்கியிருக்கிறார்கள்.

கொழும்பு
8—9—58
எம். கே. எம். பிச்சைத்தம்பி

உங்கள் அழகே உங்களுக்கு ஆபரணம்...
உங்கள் முக சருமத்தை மென்மையாயும்
அழகாயும் வைக்க

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்

உபயோகியுங்கள்

மிருதுவானதும், குளுமையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. அதை அழகுடனும், இளமையுடனும் வைக்கும்! இது எண்ணெய்ப் பசை யற்றது. மற்றும் முகத்தில் தடவிய சிறிதே விநாடிகளில் மறைந்து விடு கிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவி பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் அற்புதமான க்ரீம்

தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உங்கள் முகத்தில் தடவுங்கள். அது சருமத்தை சுத்தம் செய்து, சருமம் மிருதுத்தன்மையற்றுப் போவதையும், சருமத்துவாரங்கள் வரண்டு போவதையும் தடுக்கிறது. அத்துடன் பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகித்து, உங்கள் அழகுக்கு தகுந்த பாதுகாப்பு அளியுங்கள்.



இலவசப் புத்தகம்

"LOVELIER WITH POND'S" என்ற அழகு இலவச புத்தகத்தை வரவழையுங்கள். இதில் அழகு பராமரிப்புபற்றி உபயோகமான குறிப்புகள் அடங்கியுள்ளன. பி. ஓ. பாக்ஸ் 1018, டிபார்ட்மெண்ட் செ. 25V, பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு 25 நயா பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.

செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

பதினாறாம் அத்தியாயம்

இன்னுயிர்த் தோழிக்கு இன்பக் கதை

காதல் மலரிலே அன்புத் தேனை உறிஞ்சிக் குடித்துவிட்டு ரீங்காரம் செய்யும் இரு கரு வண்டுகளைப் போல் விமலாவும் நிர்மலாவும் நேரம்போவதே தெரியாமல் அந்தரங்கம் பேசினார்கள்.

''இன்றைக்கு என்ன மகாராணியார் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார்கள் போலிருக்கிறதே?'' என்று கண் சிமிட்டிக் கேட்டாள் நிர்மலா.

''எதனால் அப்படிச் சொல்கிறாய்?''

''முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா? இஞ்சி தின்ற குரங்கு தேன் குடித்த நரியாக மாறியிருக்கிறதே!''

''எல்லாம் நீ கற்றுக்கொடுத்த பாடம் தானே! உன்னுடைய யுக்தி பலித்துவிட்டது, நிர்மலா!''

அவள் கரங்களைப் பற்றித் தன் அருகே உட்கார வைத்து அணைத்துக் கொண்டாள் நிர்மலா. கன்னத்தோடு கன்னம் இழைய, ''என்ன நடந்தது? ஆரம்பத்திலிருந்து விவரமாகச் சொல்லேன்'' என்று கெஞ்சினாள்.

மல்லிகாவிடம் தான் போய் விட்டு வந்ததையும் முதலில் அதற்காக நடராஜன் தன்னைக் கோபித்துக்கொண்டதையும், அதற்கு அப்புறம் சிரித்துக் கொண்டே சாப்பிட உந்ததையும் சொன்னாள் விமலா.

நடராஜனின் வீம்பையும் பசிக்கு அவன் பணிந்ததையும் நினைத்து நினைத்து உடல் குலுங்கச் சிரித்தார்கள் அந்தப் போக்கிரிப் பெண்கள்.

''விமலா! தவறிப் போய்க்கூட நான் தான் உன்னை மல்லிகாவிடம் போகும்படி தூண்டிவிட்டேன் என்று சொல்லித் தொலைத்து விடாதே. அப்புறம் அவர் என்னை மன்னிக்கவேமாட்டார்.''

''சேச்சே! அப்படியெல்லாம் சொல்வேனா, என்ன? அவள் காலில் நான் விழுந்ததாக அத்தானிடம் சொல்லியிருக்கிறாள் போலிருக்கிறது. அதனால் தான் அத்தானுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. எவ்வளவு நெஞ்சழுத்தம் பார்த்தாயா, அவளுக்கு?''

'' போகட்டும். எப்படியோ கோபத்துடன் இருந்த அவரை உன்னுடன் பேச வைத்து விட்டேன். அதுதானே முக்கியம்?''

''என்ன இருந்தாலும் உன்னுடைய கெட்டிக்காரத்தனம் வருமா? அத்தான் லண்டனிலிருந்து திரும்பி வந்ததுமே அவரை ஒரு கலக்குக் கலக்கி விட்டவள் அல்லவா?''

''விமலா! கடந்து போன அந்த நிகழ்ச்சி உனக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் எனக்கு வேதனையாக இருக்கிறது. தயவுசெய்து அந்தச் சம்பவத்தை நினைவுபடுத்தாதே.''

''தப்புத்தான், நிர்மலா! கோபித்துக் கொள்ளாதே. உன்னுடைய யோசனை இவ்வளவு சீக்கிரம் பலித்துவிடும் என்று நான் நம்பவேயில்லை. அத்தானின் மனம் இவ்வளவு சீக்கிரமாக மாறிவிடும் என்று எதிர்பார்க்கவேயில்லை.''

''அதிகமாக நம்பிக்கை வைத்துவிடாதே. தன் மனத்தை அவரே இன்னும் புரிந்து கொள்ளவில்லை. நீ என்னவோ எல்லாம் தெரிந்துகொண்டவள் போல் பேசுகிறாய்!''

''அப்படியானால் என்னுடன் முன்போலவே சிரித்துப் பேச ஆரம்பித்திருக்கிறாரே, அதெல்லாம் பொய்யா?''

''உன்னுடன் பேசுவதெல்லாம் உண்மையான, இயற்கையான பேச்சுத்தான். விமலா! அத்தானுடன் சிறு வயது முதலே நீ நெருங்கிப் பழகியிருந்தும் அவரைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் உன்னுடன் பேசாமல் இருந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? உன்னை மோசம்செய்கிறாரே என்பதினால் ஏற்பட்ட வெட்கம்தான். இப்போது அது நீங்கிவிட்டது. உண்மை



உனக்குத் தெரிந்து விட்டது. உன்னை ஏமாற்றவில்லை என்று அறிந்ததும் சரளமாக முன்போலவே பேசுகிறார். அதனால் மனமே மாறி விட்டதாகத் தீர்மானிக்க முடியுமா? உனக்கு இன்னமும் சோதனைக் காலம்தான் விமலா!''

ஆழ்ந்த அனுதாபத்துடன் நிர்மலா கூறிய வார்த்தைகள் ஆறுதலை அளிக்காமல் ஆங்காரத்தையே வளர்த்தன.

''என்னிடம் காணாததை அவளிடம் என்ன கண்டு விட்டார்?'' என்று கோபமாகக் கேட்டாள் விமலா.

''அழகைத்தான்!''

''பார்ப்பவர்கள் மனத்தையெல்லாம் கலங்க அடிக்கும்படியான அழகு இருக்குமானால் அதனை ஒரு பாபமாகவே கருதுகிறேன் நான். அந்த இடத்தில் தூய்மையான காதல் எப்படித் துளிர்விட முடியும்? அதிகமாக உரமிடப்பட்ட செடி வாடி வதங்கிக் கருகிப் போவதுபோல் காதலும் கருகி விடும். மல்லிகாவின் அழகு அத்தகையதுதான் நிர்மலா! கவர்ச்சி உண்டாகலாம். அதனைக் காதல் என்று நினைத்து ஏமாந்து போகலாம். ஆனால் ஏமாந்து விட்டோம் என்பதை என்றாவது ஒருநாள் உணர்ந்து தானே ஆக வேண்டும்?''

''எப்படியானால் என்ன? அவள் அழகி என்பது உண்மைதானே? அவளுக்குப் பணிவிடை செய்த பத்து நாட்களும் [illegible] எழிலைக் கண்டு வியந்துகொண்டே [illegible]தேன். நடராஜனின் உள்ளம் [illegible] லயித்ததில் ஆச்சரியமே ஏற்பட [illegible] எனக்கு.''

''[illegible]ப்பு, நிர்மலா! நீ சொல்வதை [illegible]கொள்ளவே முடியாது. மல்லிகா [illegible]யாக இருக்கலாம். ஆனால் அந்த [illegible]க்கு நீயோ அல்லது நானோ குறைந்தவர்களல்ல. மல்லிகாவின் கண்ணுக்குக் கண், முகத்துக்கு முகம் கரத்துக்குக் கரம் உடலுக்கு உடல் விரலுக்கு விரல் என்று ஒவ்வொரு அங்கத்துக்கும் நான் ஈடுகொடுக்க முடியும். சந்தேகமேயில்லை. நடை உடை பாவனைகளிலே அந்த அழகை அடக்கமாகப் பிரயோகிக்கிறோம். ஆனால் மல்லிகாவின் அழகோ வசீகரிக்கும் தன்மை கொண்டது. அதுதான் வித்தியாசம். மனம் வைத்தால் ஒரே நொடியில் நானும் அந்தமாதிரி மாற முடியும்!''

''வேண்டாம், வேண்டாம்! நீ இப்போது இருப்பதே ரொம்ப ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது. எங்கேயாவது மாற்றிக் கொண்டு விடாதே. அப்புறம் எனக்கு மட்டும் இல்லை, உன் அத்தான் நடராஜனுக்குக் கூடப் பிடிக்கவே பிடிக்காது.''

''சரி! சரி! இந்த அழகுப் புராணம் போதும். நீ உன்னைப் பற்றிப் பேசு. உன்னுடைய உள்ளம் கவர்ந்த கள்வனைப் பற்றிச் சொல்லு!''

நிர்மலா சொன்னாள். எத்தனை முறை சொன்னாலும் அலுக்காமல் இனித்துப் புளகாங்கிதமடையச் செய்யும் அந்த இன்பக் கதையை, ஒளிவு மறைவு இல்லாமல் இன்னுயிர்த் தோழிக்கு எடுத்துரைத்தாள். இறைக்க இறைக்க ஊறும் கேணியைப்போல் எத்தனை கூறினாலும் இன்னும் சொல்வதற்கு விஷயங்கள் இருக்கத்தான் செய்தன. எல்லையற்ற இன்பத்தைக் கொடுக்கும் முடிவற்ற கதையைக் கேட்டுக் கேட்டுப் பொருமினாள் விமலா.

கொடுத்து வைத்தவள்! இவளுடைய காதல் பாதை, கரடுமுரடாக, மேடு பள்ளமாக இல்லாமல் வெண்பட்டு விரித்த பஞ்சணை மெத்தைமேல் கால் பாவாமல் ஒயிலாக நடந்துசெல்ல அமைந்திருக்கிறது. ஆனால் எனது காதலிலே



எத்தனை குறுக்கீடுகள், தடங்கல்கள், இன்ப துன்பங்கள்? அதைச் சொன்னபோது நிர்மலா மறுத்தாள். "துன்பம் இனிமேல்தான் எனக்குத் தொடங்கப் போகிறது, நிர்மலா! நானே அமைத்துக் கொண்டிருந்த கட்டுப்பாடு குலைந்து போயிற்று. என்னைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. இதுவரையில், எனக்கும் சொல்லத் தைரியம் இல்லை. உண்மை நிலை அவருக்குத் தெரியும்போது, என்ன நேருமோ யார் கண்டது? நிர்மலாவின் உடல் சிறிது நடுங்கியது. சிநேகிதியை இறுக அணைத்து ஆறுதலளித்தாள் விமலா.

* * *

மனிதன் எதற்காகக் காரியங்களைச் செய்கிறான் என்பதற்கு மூன்று காரணங்கள் கூறினார் ஒரு அறிஞர்.


முதலாவது, உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயந்து செய்யப்படும்காரியம். சவுக்கடி கொடுத்து விரட்டப்படும் கழுதைக்கு இதனை ஒப்பிட்டார்.



இரண்டாவது, ஊதியம் கிடைக்கும் என்ற ஆசையில் செய்யும் காரியங்கள். கழுதைக்கு முன்னால் 'காரட்டை'த் தொங்க விட்டு ஆசை காட்டி ஓடச் செய்வதற்கு இதனை ஒப்பிட்டார்.

மூன்றாவது, செய்யும் காரியத்தில் தன்னிகரில்லாதவன் என்று பெயரெடுப்பதிலே உள்ள காதல்.

மூன்றாவது முறையைக் கையாள்பவன் செயற்கரிய செயல்களைப் புரிவான் என்பது அவரது முடிவு.



சென்னை அட்வகேட் திரு கே. ராஜா அய்யர் அவர்களின் புதல்வர் திரு துரைராஜுக்கும் திரு ஜீ. ராமநாதன் அவர்களின் புதல்வி சௌ. விஜயலக்ஷ்மிக்கும் கும்பகோணத்தில் ஆகஸ்டு 17ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

நடராஜன் இந்தக் கடைசிக் குணத்தைக் குறைவறப் பெற்றிருந்தான். வைத்தியத் தொழிலில், முக்கியமாக சஸ்திர சிகிச்சையில் ஒப்புயர்வற்றவனாக விளங்க வேண்டும் என்பது அவன் லட்சியம். ஆகவே அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் மிகுந்த கவனத்தோடு நிதானமாகச் செய்து வந்தான். அப்போதெல்லாம் தலைக்குமேலே வேலை இருப்பதாக எண்ணுவான் அவன்.

ஆனால் மல்லிகாவைப் பார்த்ததிலிருந்து அவனுக்கு இருந்த வேலைகள் போதவில்லை. வேலையில் ஒன்றுபட்டுப் போகும்போது மல்லிகாவோ, விமலாவோ அங்கு தலைகாட்டுவதில்லை. ஒரு நிமிஷம் ஏதேனும் காரியம் செய்யாமல் இருந்தால் போதும், தண்ணீரில் அமுக்கி வைத்த ரப்பர் பந்து கையை எடுத்ததும் மேலே துள்ளி வருவதைப் போல் அந்த இரு முகங்களும் அவன் எதிரே வந்து நின்று துன்புறுத்த ஆரம்பித்தன. அதனால் கடமையையும் வேலையையும் மேலே மேலே வரவேற்றான். வரிசை வரிசையாக வந்த நோயாளிகளுக்கு முடிவே இல்லையா என்று முன்பு அலுத்துக் கொண்டவன் இப்போது முடிவில்லாமல் யாராவது வைத்தியத்துக்கு வந்து கொண்டே இருக்க மாட்டார்களா என்று ஏங்கினான்.

இந்தச் சமயத்திலேதான் நிர்மலா தன் தாயாருக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி லீவு கேட்டாள். விடுமுறை கொடுத்ததோடு 'கஞ்சி வரதப்பா' என்ற குரல் கேட்டு, 'எங்கே வருதப்பா?' என்று ஏங்கிக் கொண்டிருந்தவனைப் போல் தானும் அவள் வீட்டுக்குப் பின்னோடு சென்று அவள் தாயாரைக் கவனித்தான் நடராஜன்.

நிர்மலாவின் தாயார் நாகம்மாளுக்கு உடலில் வேதனை மிகக் குறைவு என்றும் உள்ளத்தின் வேதனைதான் அதிகம் என்றும் சில நிமிஷங்களிலேயே அவனுக்குத் தெரிந்து போயிற்று. தன்னுடைய ஒரே மகள் அன்புக் கணவனையும் இழந்து, ஆதரவுக்குத் தகப்பனும் இல்லாமல் அவதிப்படுவதை எந்தத் தாயார்தான் எத்தனை நாட்களுக்குச் சகிக்க முடியும்?

எதிர்பாராத விதத்திலே வைத்தியம் புரிய வந்த நடராஜனிடம் கொட்டித் தீர்த்து விட்டாள் அவள். நிர்மலாவுக்கு ஒரே கோபம். நடராஜனுக்குப் பின்னால் நின்றுகொண்டு அவன் கவனிக்காதவாறு கண்களைப் பயங்கரமாக உருட்டி விழித்துத் தாயாரைக் கோபித்துக் கொண்டாள். விரலைக் குவிந்த உதட்டின்மீது வைத்துச் சும்மா இருக்கும்படி சமிக்ஞை செய்தாள்.

அதையெல்லாம கவனித்தும் கவனிக்காதவள் போல் நடராஜனிடம் எல்லாவற்றையும் சொன்னாள் நாகம்மாள்.

கல்யாணமாகியும் கன்னியாகவே விட்டுச் சென்ற கணவன், அந்தத் துயரத்தைத் துடைக்க நர்ஸ் படிப்புக்கு அவளைச் சேர்த்து விட்டு நோயில் இறந்துபோன தகப்பன் ஆகியவர்களைப் பற்றி விரிவாகக் கூறினாள்.

சோகக் கதையை உள்ளம் நெகிழக் கேட்டான் நடராஜன். "எனக்கு அவள், அவளுக்கு நான் என்று இருக்கிறோம். கையைக் காலை இழுத்துக் கொண்டால் அவளைக் கண்காணிப்பீர்களா?" என்று நாகம்மாள் கேட்டபோது நடராஜனின் கண்களில் கண்ணீர் துளித்து நின்றது.


உறுதி மொழி கொடுத்து விட்டு, விடைபெற்றுக் கொண்டவனிடம், "வைத்தியம் புரிய வந்தவரிடம் ஏதேதோ சொல்லி விட்டேன். மன்னித்து விடுங்கள். உங்களைத் தவிர வேறு யாரிடம் நான் சொல்ல முடியும்?" என்று கூறினாள் நாகம்மாள்.

"நீங்கள் யாரோ நான் யாரோ என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள். நிர்மலா என் சகோதரியைப் போன்றவள்" என்றான் நடராஜன்.

"டாக்டர்! இன்னும் ஒரே ஒரு விஷயம். நிர்மலாவுக்கு மறுபடியும் கல்யாணம் நடக்கக் கூடுமானால் நான் தடுக்க மாட்டேன். ரொம்ப ரொம்ப சந்தோஷப் படுவேன்" என்று சொல்லி அழுது விட்டாள் நாகம்மாள்.



காால்கேட் குளோரோபில் டூத் பவுடர்
வெளியிடுகிறது
வீரிய குளோரோபிலின்
பூரணநன்மைகளை
COLGATE
CHLOROPHYLL
TOOTH POWDER
ஜயண்ட் சைஸ் லாபகரம்
வீரிய குளோரோபில்தான் உங்களுக்கு நன்மை தரவல்லது!
வாயில் தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது. அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது! வாய்க்குப் புதிய நறுமணத்தைத் தருகிறது!
பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தை*யாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப்படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!
ஈறுகளை பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப் பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.
* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.



ராபின்ஹூட்
உலகமெங்கும்
விரும்பப்படுவது
A SEN-RALEIGH Product
SRC 52 TM

காரில் ஏறிய அவனிடம் தாயாருக்காக மன்னிப்பு கேட்டாள் நிர்மலா.

"பைத்தியக்காரி! அம்மாவின் மன வேதனை பெண்ணுக்கே தெரியவில்லையா? அல்லது நான் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறாயா? எதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்? வருஷக் கணக்காக என்னிடம் நீ வேலை பார்த்து வந்தும் உன்னைப் பற்றி முழு விவரங்களையும் அறிந்து ஆவன செய்யாமல் இருந்த நான்தான் மன்னிப்பு கேட்க வேண்டியவன். 'திருமணம் நடக்கக்கூடுமானால்' என்று சந்தேகமாகப் பேசுகிறாள் உன் அம்மா. ஏன் கூடாது? நல்ல கணவனாக நீ அடைந்து புது வாழ்வு வாழ்வதைக் கண்குளிரக் கண்டு துயர் துடைக்கப் போகிறான், பார்!"

நடராஜன் காரைக் கிளப்பிக் கொண்டுபோய்விட்டான். 'டாக்டராக இருப்பதுடன் மாப்பிள்ளை வேட்டையிலும் இறங்கிக் கல்யாணத் தரகனாகப் போகிறாயா?' என்று தன்னைத்தானே கேட்டுச் சிரித்துக் கொண்டான். நம் முயற்சியால் ஒருவருக்குக் கல்யாணம் நடக்கிறதென்றால் எவ்வளவு மகிழ்ச்சி!

அவனை அனுப்பி விட்டு உள்ளே திரும்பிய நிர்மலா, 'கல்யாணம் நடக்கக் கூடுமானால், கல்யாணம் நடக்கக் கூடுமானால்' என்று ஜபித்தாள்.

வலிவு பெற்ற இரு கரங்கள் தோளில் அழுந்திக் கழுத்துக்குப் பின்னால் முடிச்சுப் போடும்போது, அந்தத் திரண்ட புஜங்களின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் தன் சிற்றிடை ஒடிந்து இன்ப வேதனையைக் கொடுப்பது போன்று ஒரு பிரமை அவளுக்கு. இதழ்க்கோடியில் அந்த நினைவிலே அரும்பிய புன்னகை அதரங்கள் முழுவதுமே பரவி விரைவில் உடல் முழுவதையும் சிரிப்பிலே சிலிர்க்க வைத்தது!

பதினேழாம் அத்தியாயம்

கதிர்வேலன் கண்ட விநோதக் காட்சி

கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்த தர்வானை ஒரே எட்டில் தாவிச் சென்று கட்டிப் பிடித்தான் கதிர்வேலன். தன் கழுத்தைச் சுற்றியிருந்த கைக்குட்டையைக் கழற்றி அவன் வாயில் திணித்தான்.

பின்னர், அவன் கையைப் பின்புறமாக முறுக்கித் தட்டுத் தடுமாறிக் கொண்டே எழுந்த சுகுமாரனிடம் ஒப்படைத்தான். தனது பையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து அவன் கரங்களைப் பின்புறத்தில் சேர்த்து வைத்து இறுகக் கட்டினார் சுகுமாரன். கதிர்வேலன் கீழே விழுந்திருந்த குணநாயகாவைத் தூக்கி அருகே இருந்த நாற்காலியில் உட்கார வைத்தான்.

"அடியும் உதையும் போதுமா, அல்லது இன்னும் கொஞ்சம் வேண்டுமா?"

"எங்கேயடா போய்விடப் போகிறாய்? திருட்டு நாயே!"

"நீயும் நானும் ஒருவரை யொருவர் 'திருட்டு நாயே' என்று திட்டுவது ரொம்ப ரொம்பப் பொருத்தம்தான். எனக்குப் பேசிக் கொண்டிருக்க நேரம் இல்லை. சீக்கிரமாக எங்களை அனுப்பு." கதிர்வேலனுடைய பரந்த மார்பு அலை கடலைப் போல் விம்மித் தணிந்தது.

உதட்டில் பட்ட காயத்தை நாக்கினால் தடவி விட்டுக் கொண்டான் குணநாயகா. பதில் பேசவில்லை. சில விநாடிகளுக்கு மேல் கதிர்வேலன் காத்திருக்கவும் இல்லை. புறக்கையால் வலது கன்னத்திலும் உள்ளங்கையால் இடது கன்னத்திலும் மாறி மாறி அடி விழுந்தது. குணநாயகாவின் தலை 'டென்னிஸ்' விளையாட்டைப் பார்ப்பவர்களுடைய தலைகளைப் போல் இடப்புறமும் வலப்புறமும் திரும்பிய வண்ணம் இருந்தது.

"நிறுத்து! நிறுத்து!" என்று விம்மலுக்கிடையே சொன்னான் குணநாயகா.

கதிர்வேலன் அடிப்பதை நிறுத்திக் கையை நீட்டினான். குணதிலகாவுக்கு எழுந்திருக்கக் கூடச் சக்தியில்லை. பையிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்துக் கதிர்வேலன் கையில் கொடுத்து வைரங்கள் இருக்கும் இரும்புப் பெட்டியைச் சுட்டிக் காட்டினான்.

மெழுகிலே பொருத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய சிறிய வைரங்கள் அடங்கிய பெட்டியை எடுத்துக் கொண்டு, குணநாயகாவுக்கும் மீசைக்காரத் தர்வானுக்கும் தனித்தனியே 'சல்யூட்' அடித்துவிட்டுக் கிளம்பினார்கள்.

'டாக்ஸி' ஏதாவது கிடைக்காதா என்று பார்த்துக்கொண்டே இருவரும் நடந்து சென்றார்கள்.

"குணநாயகா போலீஸுக்குத் தெரியப்படுத்தினால் என்ன செய்வது?" என்று கேட்டான் கதிர்வேலன்.

"ஒருநாளும் தெரிவிக்க மாட்டான். அப்படித் தெரிவித்தால் அவனுடைய புரளிகளும் வெளிப்பட்டு விடாதா?"

"அப்படிச் சொல்ல முடியுமா? நமக்கு எதிரேயே போலீஸுக்கு போன் செய்வதாக இருந்தானே?"

"நம்மைப் பயமுறுத்தலாம் என்ற அசட்டு நம்பிக்கை. வெறும் நடிப்பு, பாவனை. நாம் சும்மா இருந்திருந்தால் அவனும் பேசாமல் டெலிபோனை வைத்து விட்டிருப்பான். அதற்குள் தான் நான் சண்டை போடுவதற்கு ஆரம்பித்து விட்டேனே?"

"அடி வாங்கிக் கொண்டுதான் கொடுக்க வேண்டும் என்று அவன் தலையில் எழுதியிருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்வது? விமான நிலையத்திலேயே அவனிடம் பணத்தைக் கொடுக்காமல் இருந்திருக்கலாமோ என்று இப்போது தோன்றுகிறது."

"அப்படிச் சொல்ல முடியாது, கதிர்வேலு! அதிர்ஷ்டவசமாக, சென்னையில் சுங்கத்துக்குத் தப்பித்துக் கொண்டோம். அதே போல் இங்கேயும் தப்பி விடுவோம்என்பது என்ன நிச்சயம்? சென்னையில் ஒருவேளை சந்தேகம் ஏதாவது ஏற்பட்டு இங்கே டெலிபோனில் எச்சரிக்கை செய்திருந்தார்களானால் நம் கதி என்ன ஆவது? உன் கையில் இருந்த மல்லிகாவின் அலங்காரப் பெட்டியை ஒரு அதிகாரி வாங்கித் துருவித் துருவிப் பார்த்தானே, ஞாபகம் இல்லையா? நாம் முன் ஜாக்கிரதையாக இருந்தது நல்லதாகப் போயிற்று. மல்லிகாவும் அவளைக் காண ஆர்வத்துடன் கூடியிருந்த 'விசிறி'களும் நமக்குப் பேருதவி புரிந்திருக்கிறார்கள்!"



"இதற்கெல்லாம் தான் உதவி புரிந்திருப்பதாக மல்லிகா அறிந்தால் அவள் மனம் என்ன பாடுபடும்?"

"ஐயய்யோ! மறந்து போய் எதையாவது அவள் எதிரே சொல்லிவிடாதே! பயந்தே விடுவாள். கதிர்வேலு! எது எப்படிப் போனாலும் மல்லிகாவுக்கு நான் ரொம்பக் கண்யமான மனிதனாக இருக்க வேண்டும், தெரிகிறதா? அப்பாவைப் பற்றித் தவறான எண்ணம் மகளுக்கு ஏற்படுமானால் அதைவிட வேறு அவமானமே வேண்டியதில்லை. அவள் உடல் குன்றிப் போவாள். அவளை ஏறிட்டுப் பார்க்கவும் என்னால் முடியாது! எதற்குமே பயப்படாத நான் அவளுடைய கண்களின் குற்றச்சாட்டுக்கு எதிரே நிற்க முடியாமல் நெகிழ்ந்து விடுவேன்."

"மாமா! இதையெல்லாம் எனக்குச் சொல்ல வேண்டுமா, என்ன? என்னால் உங்களுக்கு அத்தகைய தர்மசங்கடமான நிலைமை ஒருநாளும் உண்டாகாது, நிச்சயம்."

இந்தச் சமயத்தில் சாலையில் காலியாகப் போய்க் கொண்டிருந்த ஒரு டாக்ஸியை நிறுத்தினார் சுகுமாரன். இருவரும் அதில் ஏறிக்கொண்டு ஜாகைக்குத் திரும்பினார்கள்.

"இருந்தாலும் இந்தக் குணநாயகா இப்படி நம்மை ஏமாற்றப் பார்ப்பான் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றான் கதிர்வேலன்.

சுகுமாரன் தமது வாயை இடது கையால் பொத்திக் கொண்டு வலது கையால் டாக்ஸி டிரைவர் இருப்பதைக் காண்பித்து ஞாபகப் படுத்தினார். 'இந்தத் தொழிலில் இதெல்லாம் சகஜம் தானே? இவனைப்போல் எத்தனை பேரைப் பார்த்தாகி விட்டது?'' என்று அவருடைய வாய் முணுமுணுத்தது.

ஜாகைக்குத் திரும்பியபோது மல்லிகா இன்னமும் அசந்து தூங்கிக் கொண்டு தான் இருந்தாள். அவள் பயப்படாமல் இருக்கப் புறப்படும் போது தான் எழுதி வைத்திருந்த கடிதத்தைச் சுக்குநூறாகக் கிழித்து எறிந்தார் சுகுமாரன். அவள் விழித்துக் கொள்ளாதபடி சத்தம் செய்யாமல் நகைப் பெட்டியைத் திறந்து வைர மாலையை எடுத்தார்.

அடுத்த அறையில் இருந்த கதிர்வேலனிடம் அதைக் காண்பித்துப் பேழையைத் திறந்தார். குணநாயகாவிடமிருந்து வாங்கி வந்த வைரங்களை அதற்குள் வைத்து மூடினார்.

"திரும்பும்போது இந்த மாலையைப் பெட்டியில் வைத்துவிடாமல் ஞாபகமாக அவளை அணிந்து கொள்ளச் செய்ய வேண்டும். பிரபல திரைப்பட நட்சத்திரம் மல்லிகாவின் கழுத்தை அலங்கரித்து அவள் மார்பில் புரளும் இத

னுள் ஏராளமான வைரங்கள் இருப்பதை யார்தான் சந்தேகிப்பார்கள்?''

"மாமா! இவையெல்லாம் அசல் வைரங்களா?''

"சேச்சே! மாலையில் கட்டியிருப்பவை யெல்லாம் அசல் கண்ணாடி! அதன் உள்ளே மறைந்து இருப்பவைதான் வைரங்கள்.''

"அதெப்படி மாமா! உங்களுக்குத் தெரியும்? குணநாயகாவும் போலி வைரங்கள் கொடுத்து நம்மை ஏமாற்றியிருந்தால் என்ன செய்வது?''

துர்ச்சொப்பனம் கண்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பவனைப்போல் திடுக்கிட்டார் சுகுமாரன்.

"அப்படியும் இருக்குமா?''

"ஏன் இருக்கக் கூடாது மாமா?''

"நாளைக்கு முதல் வேலையாக இதில் ஓரிரண்டு வைரங்களை மட்டும் வேறு ஒரு நகைக் கடையில் காண்பித்து விலை கேட்போம். போலியாக இருந்தால்......''

"அதை என்னிடம் விட்டு விடுங்கள், மாமா! நான் அவனைச் சரியானபடி கவனித்துக் கொள்கிறேன்.''

"இன்னொரு அபாயமும் இருக்கிறது, கதிர்வேலு! குணநாயகா போலீசுக்குச் சொல்ல மாட்டான். ஆனால் அவனுக்கென்று யாராவது சகாக்கள் இல்லாமலா போய் விடுவார்கள்? இன்று நீ அவனுக்குக் கொடுத்த அடிகளும் உதைத்த உதைகளும் பழி வாங்கும் எண்ணத்தை உண்டாக்கியிருந்தால்?''

"பழி வாங்க வருவார்களோ பழி வாங்க? பழத்தைப் பிழிவதுபோல் கசக்கிப் பிழிந்துவிடுவேன். வரட்டுமே!''

"கதிர்வேலு! உனக்குத் தைரியம் இருக்கிறது, வலிமை இருக்கிறது, உண்மைதான். ஆனால் இதிலெல்லாம் அதிகமாகச் சிக்கிக் கொள்ளக் கூடாது. உனக்குப் பரவாயில்லை. ஆனால் எனக்கும் மல்லிகாவுக்கும் எக்கச்சக்கமாகப் போய் விடும்.''

"வீண் வம்புக்குப் போகவில்லை, மாமா! ஆனால் வலிய வம்புக்கு இழுத்தால் நான் பின் வாங்க மாட்டேன்.''


"சமயத்துக்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளவேண்டும், கதிர்வேலு! சற்று முன்னால் குணநாயகா வலுவில் வம்புக்கு இழுத்தான். நமக்குக் காரியம் ஆகவேண்டியிருந்தது. சண்டை போட்டோம். இப்போது நம்முடைய காரியமெல்லாம் முடிந்துவிட்டது. இனிமேல் நம்மைத் தேடிக் கொண்டு சண்டை வந்தாலும் தட்டிக் கழிப்பதுதான் சாமர்த்தியம்'' என்றார் சுகுமாரன்.

* * *

சீ குமாரன் பிலிம்ஸ் 'கண்ணீரு'க்கு இலங்கையில் அமோகமான வரவேற்பு. அநேகமாக எல்லாத் தியேட்டர்களிலுமே ஒரு வாரத்துக்கு டிக்கட்டுகள் இல்லை என்று போர்டு தொங்கியது!

கொழும்பு நகரில் ஒரு தியேட்டரில் மேடையின் மீது தோன்றி மல்லிகா ரசிகர்களின் சார்பிலே மலர் மாலையைப் பெற்றுக் கொண்டபோது கரகோஷம் கொட்டகை இடிந்து விழும் போல் எழுந்தது. அவள் கரம் கூப்பி நன்றி தெரிவித்ததும் மறுபடியும் கரகோஷம். தன் பவழ வாயைத் திறந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபோது உற்சாகம் கரை புரண்டது.


வெளியீட்டு விழா முடிந்து ஜாகைக்குத் திரும்பியதும் இலங்கை முழுவதும்



சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்தாள் மல்லிகா. அவளுக்கும் சுகுமாரனுக்கும் இடையே பெரிய வாக்குவாதமே நடந்தது.

'உடனே திரும்ப வேண்டும். உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் நடராஜன் சொல்லியிருக்கிறான்' என்று வாதாடினார் சுகுமாரன். 'இவ்வளவு தூரம் வந்து விட்டு ஒன்றையுமே பார்க்காமல் திரும்புவதா? முடியவே முடியாது!' என்றாள் மல்லிகா.

கதிர்வேலன் சுகுமாரனைச் சமாதானப்படுத்தினான். "அடிபட்ட நாய் திரும்பாது, மாமா! குணநாயகாவுக்குப் பயப்படாதீர்கள். அவனுக்கு நஷ்டம் ஏதும் உண்டாகி விடவில்லையே? நமக்குக் கிடைத்துள்ள வைரங்களும் அசல் வைரங்கள்தான் என்று நிச்சயம் செய்து கொண்டு விட்டீர்கள். பின் எதற்காகப்



வயலின் வித்வான் லால்குடி திரு வி. ஆர். கோபாலய்யரின் குமாரரும் பிரபல வயலின் வித்வானுமான ஜி. லால்குடி ஜெயராமனுக்கும் செகந்திராபாத் ஸென்ட்ரல் ரயில்வே ஸ்ரீ வி. ஸ்ரீனிவாசய்யர் அவர்களின் குமாரி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் ஆகஸ்ட் 20ம் தேதி சேலத்தில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

பயப்பட வேண்டும்?'' என்றெல்லாம் தனிமையில் வாதாடி மல்லிகாவின் விருப்பத்துக்கு இணங்கச் செய்தான்.

கடைசியில் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் மல்லிகாவின் இரண்டு நடனக் கச்சேரிகளுக்குக் கூடச் சுகுமாரன் ஒப்புக் கொள்ளும்படியான நிலை ஏற்பட்டது!

உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் அவள் ஆடிய இரண்டு நடன நிகழ்ச்சிகளுக்கும் ஊரே திரண்டு வந்தது. எள் போட்டால் விழாத அளவுக்கு ஜன நெரிசல். அப்படிப் பட்ட பிரும்மாண்டமான கூட்டத்தைப் பார்த்தே அறியாத மல்லிகா பயந்தே போய்விட்டாள்.

"அப்பா! எனக்கு என்னமோ போல் இருக்கிறது. ஆடவே வராது என்று தோன்றுகிறது'' என்று திரைக்குப் பின்னால் அவள் கெஞ்சினாள்.

"அசடே! இதற்கெல்லாம் பயப்படுவார்களா என்ன? நீ என்ன ஆடத் தெரியாதவளா? எதற்கு இப்படி ஒரே படியாக நடுங்கிச் சாகிறாய்?''

"அந்தக் கூட்டத்தைப் பார்த்தாலே வயிற்றைக் கலக்குகிறதே அப்பா!''

"நான் சொல்கிறபடி செய்! உன் எதிரே ஒருவரும் இல்லை என்று எண்ணிக் கொள். கண்ணை மூடிக்கொண்டு ஆடு. அப்புறம் கண்ணைத் திறந்து பார்.''

மல்லிகா அப்படியே செய்தாள். நிருத்தியத்தைத் தொடங்கிய சிறிது நேரத்தில் அவளுடைய பயமெல்லாம் எங்கேயோ மறைந்து, மனம் கூட்டத்தை அடியோடு மறந்து போய் ஆட்டத்திலேயே லயித்து விட்டது.

நடன நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு இலங்கையைச் சுற்றிப் பார்ப்பதில் ஒரு வாரத்துக்கு மேல் கழிந்தது.

கொழும்பு நகரின் சிறப்பையும், கண்டி புத்தர் ஆலயத்தையும், பொலன்னருவா, அனுராதபுரம், நுவரெலியா முதலிய பல இடங்களையும் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தாள் மல்லிகா. அவளுக்கு இருந்த உற்சாகத்தில் சிகிரியா சிற்பங்களைக் காண அந்தச் செங்குத்தான படிகளில்கூடத் தைரியமாக ஏறி விட்டாள். அவளைப் பத்திரமாகத் திரும்ப அழைத்துச் செல்வது பெரும் பாடாகப் போய்விட்டது டைரக்டர் சுகுமாரனுக்கு.

கதிர்வேலனுக்கு மட்டும் உள்ளுக்குள்ளே ஒரு ஏக்கம், இந்த அற்புதங்களைப் பார்க்கும்போது நிர்மலா தன் அருகில் இல்லையே என்று. இதையெல்லாம் பார்த்தால் அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்! என்றைக்காவது ஒருநாள் அவளையும் அழைத்துக் கொண்டு இங்கே வரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

* * *

இலங்கைப் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பினாள் மல்லிகா. சுகுமாரன், கதிர்வேலன் இருவரின் காரியங்களும் வெற்றிகரமாகவே முடிந்து விட்டன.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கி வீட்டுக்குக் காரில் சென்று கொண்டிருந்தபோது தனக்கு எதிரே சாலை ஓரத்தில் ஒரு விநோதமான காட்சியைக் கண்டான் கதிர்வேலன்.

ரத்தத்தைக் கொட்டிக் குளிப்பாட்டியது போல ஒரு மரம் நின்று கொண்டிருந்தது. பசுமை என்பதையே அதில் காண முடியவில்லை. கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயின் பயங்கரச் சிவப்பாகக் காட்சி யளித்தது.

"மாமா! அந்த மரத்தைப் பாருங்களேன். ஒரே ரத்த மயமாக இல்லை?'' என்று கேட்டான் கதிர்வேலன்.


அவன் குரலில் இருந்த நடுக்கத்தைக் கண்டு வியந்து போனார் சுகுமாரன். பதில் பேசத் தோன்றவில்லை அவருக்கு.

இலைகளே இல்லாதபடி செக்கச் செவேல் என்ற மலர்கள் பூத்துக் குலுங்கி, குருதிச் சிவப்பான குங்குமக் குவியலாக நின்ற அந்தக் கொன்றை மரத்தை அதற்குமேல் பார்க்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டான் கதிர்வேலன். அடுத்த கணம் கார் அந்த மரத்தைத் தாண்டிவிட்டது. (தொடரும்)



பழையனூர்ப் பித்தன்

ரா. வீ.



அது பண்டைய காலத்துச் சிவன் கோயில். அதன் மதிள் சுவர்கள் இடிந்து, விரிசல் கண்டு தேய் விழுந்துகாட்சி அளித்தன, முதுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக; சுருக்கங்கள் விழுந்து தளர்ச்சியுற்று வலுக்குன்றிப் போன உடற் கோயிலுக்கு ஒப்பாக. அதன் நாற்புறத்துப் பிராகாரங்களிலும், இண்டு இடுக்கு விழுந்து கிடந்த மதிள் சுவர்களிலும் செடி கொடிகள் மண்டிக் கிடந்தன. அரசங் கன்றும், வேப்பங் கன்றும், எருக்கம் செடியும் ஏராளமாக முளைத்துச் செழித்துக் கொழுத்திருந்தன. ஒரு நாளாகிலும் ஒரு பொழுதாகிலும் காலையிலோ மாலையிலோ கோயிலில் குடிகொண்டிருக்கும் எம்பெருமான் நீரைக் கண்டிருப்பாரா என்று கேட்டால் யாருக்குமே சந்தேகம்தான். ஆண்டவனின் அருள் பேரொளியின் வடிவமான அப்பொருள் பரம சைதன்யமானவலவா? கொளுத்தும் வெய்யிலும், கொட்டும் மழை நீரும், சுழன்று சுழன்று வீசும் காற்றும் அதை என்ன செய்துவிட முடியும்?

பழையனூர் என்று வழங்கி வந்த அந்த ஊரின் சிவஸ்தலத்தைப் பற்றித் தெரியாதவர்களே கிடையாது. குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை ஆண் — பெண் அடங்கலாக அனைவரும் மகிமை வாய்ந்த அந்த மகாதேவனைப் பற்றிக் கதை கதையாகக் கூறுவார்கள். கலியுகத்தில் 'கண்கண்ட தெய்வம்' என்று போற்றிப் பூசித்துக் கையெடுத்துக் கும்பிடுவார்கள்.

வேலாயுத முதலி இந்தச் சிவனுக்கு வேண்டிக் கொண்டுதான் வழக்கிலே வெற்றி பெற்றான். கட்டியாள முடியாத பெரும் சொத்துக்கு வாரிசானான்.

பாலாண்டியின் மகன் டைபாய்டு என்னும் விஷ ஜுரம் கண்டு, பிழைக்க மாட்டான் என்று கிடந்தான். வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். அத்தகைய நிலையிலும் குழந்தையின் தாயார் 'சிவனே சரணம், சிவன் கோயிலே கதி' என்று குழந்தையும் கையுமாகக் கோயில் வாசலில் போய் உட்கார்ந்து விட்டாள். 'நீ என் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை யளித்தால் தான் உன் தாளடிகளை விடுவேன்' என்று அடம் பிடித்து அமர்ந்து விட்டாள். தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமான ஆண்டவன் மனமிரங்கி அருள் பாலித்தான்.

அப்புறம் அந்த மூக்கய்யா பண்டாரம் இன்று இலட்சக்கணக்கில் அரித்துக் கொட்டு

இருமே, யாருடைய தயவினால் என்கிறீர்கள்? பேரருள் புரியும் பெருமானின் அருள் பார்வையினால்தான். பிறை சூடிய பித்தன் அவரது கனவிலே தோன்றிப் பஞ்சு வியாபாரத்திலே புத்தியைச் செலுத்துமாறு தூண்டவில்லையென்றால், மூக்கய்யா பண்டாரமாவது, மூட்டை மூட்டையாகப் பணத்தைக் கட்டவாவது? இதே பித்தனுக்கு வேண்டிக் கொண்டதனால்தான், கண்ணுயிரக் கரையாளருக்கு லாட்டரிச் சீட்டிலே ஆயிரம் ஆயிரமாக அதிர்ஷ்டம் அடித்தது!

இவையெல்லாம் இந்தச் சிவபெருமானது திருவிளையாடல்களிலே மிகமிகச் சாதாரணமான நிகழ்ச்சிகள். இந்த சுந்தரமூர்த்தியின் பெருமைக்குப் பெரும் எடுத்துக்காட்டாகப் பற்பல பயங்கர, மயிர் சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சிகளை நடந்திருக்கின்றன. நினைத்தாலே நெஞ்சம் நெகிழ்ந்து மூளை கலங்கிவிடக்கூடிய நிகழ்ச்சிகள் அவை.



ஆண்டுதோறும் வைசாக பூர்ணிமையன்று இக் கோயிலில் குடி கொண்டிருக்கும் பெருமானுக்குப் பெருத்த அளவில் அதி விமரிசையாகத் திருவிழா எடுப்பது வழக்கம். பல மைல்களுக்கு அப்பாலிருந்து ஆண்களும் பெண்களும் கட்டுச் சோறும் மூட்டையுமாக ஆண்டவனின் திருவிழாக் கோலத்தைக் காண வந்து குவிவார்கள். கண்குளிரக் குளிர்ந்த நீர் அபிஷேகம் ஆவதைக் கண்டு மகிழ்ந்து மெய் சிலிர்த்து நிற்பார்கள். 'ஹர ஹர மகாதேவா!' 'நம: பார்வதீ பதயே' போன்ற புனிதச்சொற்கள் வானத்தையும் புவியையும் ஒன்றாக்கி எதிரொலிக்கும்.

மூக்கய்யா பண்டாரம் புஷ்பப் பல்லக்கு கட்டி, பெருமானுக்குப் பலமாக அலங்காரம் செய்வித்து வீதி வலம் வரச் செய்வார். வேத பாராயணம், தேவாரம், திருவாசகம் என்று கூட்டம் கூட்டமாகப் பஜனை கோஷ்டி பின் தொடரப் பகவான் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கண்ணுயிரக் கரையாளர் கோயிலுக்கு மட்டும் இல்லை, தமது வீட்டிற்குமே லட்ச தீபம் போட்டுக் களிப்பார்; இரவைப் பகலாக்கும் பணியில் மெய்மறந்து நிற்பார். அதுமட்டுமா? தெருவடைக்கப் பந்தல் போட்டு ஊர் முழுவதற்கும் அறுசுவை உண்டி அளிப்பார். இதையெல்லாம் பயங்கர, மயிர் சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சி என்று பறைசாற்ற முடியுமா? பேயனின் பெருமையை நிலைநாட்டக்கூடிய அந்த நிகழ்ச்சியே வேறு.

திருவிழாவன்று சிவனாண்டியின் அருளால், அந்தக் கிராமத்தில் எங்கேயாவது யாராவது ஒருவனாவது பைத்தியம் பிடித்துப் பாயைச் சுரண்டத் தொடங்கி விடுவான்!

"என்ன, நிஜமாகவா?" என்றுதானே கேட்கிறீர்கள்? உங்களது இந்தக் கேள்வியிலேயே நிகழ்ச்சியின் பயங்கரமும், மயிர் சிலிர்க்க வைக்கும் தன்மையும் புலனாகிறதே! ஆண்டு தவறினாலும் தவறலாம். பேயனின்-பித்தனின் குழாத்திலே எண்ணிக்கை அதிகரிப்பது இதுகாறும் தவறியதில்லை. சக்தி வாய்ந்த சிவனின் பெருமைக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன சிறந்த எடுத்துக் காட்டு வேண்டும்?

அந்த வருஷமும் வைசாக பூர்ணிமை உற்சவம் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மூக்கய்யா பண்டாரத்தின் வீட்டு வாசலிலே பந்தல் போட்டு நடந்தகூத்தைப் பற்றிப் பேசாதவர்கள், பாவம்! 'கர்ணார்ஜுன' நாடகம் கண்டு களிக்காதவர்களும் கிடையாது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, கரையாளரின் வீட்டு விருந்தும் குறைவின்றிக் கன ருசியாகவே அமைந்திருந்தது. ஆம்! பால் பாயசம் மட்டும் அளவுக்குச் சற்று அதிகமாகக் காய்ந்து போயிருந்தது. இருந்தாலும், அறுசுவைக்கு ஒரு குறையும் நேரவில்லை. மக்கள் வயிறார விருந்துண்டு மனம் மகிழ்ந்து போயினர். மூக்கய்யா பண்டாரம், கண்ணுயிரக் கரையாளர் இருவரது முயற்சியினாலும் உற்சவமும் வெகு சிறப்புற நடந்தது.

பாவாண்டியின் பெரு முயற்சியால் எழுப்பப் பட்டிருந்த சண்டி மண்டபத்தில், மறுநாள் கூடிய கூட்டம் உற்சவத்தின் வெற்றியைப் பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசியது. இந்தச் சமயத்தில்தான் குண்டுச் சட்டியில் குதிரையோட்டிய கதையாகக் கோவிந்தன் பயந்த விழிகளோடு இங்கும் அங்கும் ஒருமுறை பார்த்தான். பிறகு மிகவும் மெதுவான குரலில் "உங்களுக்குத் தெரியுமா? இந்த வருஷம் இதுவரையில் யாருக்குமே பைத்தியம் பிடிக்கவில்லே!" என்று ஒரு மூட்டையையும் அவிழ்த்து விட்டான்.

அரவத்தைக் கண்டவர்கள் அச்சத்தால் அயர்ந்து போய் நிற்பதைப் போல், எல்லோரும் பிரமித்து விக்கித்துப் போயினர். அங்கே அரவம் அடங்கி விட்டது. "என்ன! என்ன சொன்னாய்? ஒருநாளும் அப்படி இருக்கவே முடியாது!" என்று வெகுநேரம் கழித்து மெதுவாக ஒரு குரல் வந்தது.

"வழுக்கைத் தலை வீராசாமிக்குப் பைத்தியம் கட்டாயம் பிடித்திருக்க வேண்டுமே!" என்று அடித்துச் சொன்னான் ஹரிஹரன்.

கோவிந்தன் கண்களை ஒரு முறை உருட்டி விழித்து விட்டு, "நான் நேரில் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அவன் உங்களைப் போல் பைத்தியம்-கைத்தியம் பிடிக்காமல் நன்றாகவே இருக்கிறான்!" என்று மறுப்பு விட்டான்.

இந்தத் தடவை வழுக்கைத் தலை வீராசாமிதான், சிவனாண்டியின் பெருமைக்குப் பங்கம் விளையாமல் பாதுகாப்பான் என்று எல்லாருமே நம்பியிருந்தார்கள்.

நீலமணி ஆச்சாரி இதுவரையில் பேசாமல் அவர்கள் பேச்சைக் கேட்டவாறு புகையிலையைக் குதப்பிக் கொண்டிருந்தான். அவன் 'கடக்' கென்று புகையிலைச் சாற்றை விழுங்கி விட்டு, "ஆண்டவன் சித்தத்துக்கு ஒருநாளும் அப்பு-அழுக்கு கூற முடியாது. சரியாகத் தேடிப் பாருங்கள். கட்டாயம் எவனுக்காவது பைத்தியம் பிடித்திருக்கும். தொன்று தொட்டு நடந்துவரும் காரியம் எங்கேயாவது பொய்க்குமா?" என்றான்.

கோவிந்தன் மீண்டும் சிரித்து, "நான்தான் சொல்கிறேனே, இதுவரையில் யாருக்குமே மூளை பிறழவில்லை!" என்றான்.

நீலமணி ஆச்சாரிக்குத் தனது அசையாத நம்பிக்கையிலே பேரிடி விழுந்தது போன்றிருந்தது. கோபத்தினால் கொதித்து எழுந்து, "உனக்கு என்னடா தெரியும்? நீ நேற்றையப் பயல். நீ சொல்லி விட்டதனால் ஆண்டு ஆண்டு தோறும் நிகழ்ந்து வரும் பண்டைய ஒழுங்கு நிகழாமல் போய்த்து விடுமோ? கட்டாயம் யாரோ ஒருவன் பித்தனாகித்தானிருக்கிறான். இன்னும் நம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை என்று வேண்டுமானால் சொல்லு!" என்றான்.

ஆனால் மறுநாளும், யாருக்கும் பைத்தியம் பிடித்ததாகத் தகவல் வரவில்லை.

பழையனூர் மக்களுக்குச் சந்தேகம் வலுத்தது; கவலை அதிகரித்தது. ஊருக்கு ஏதோ தீங்கு நிகழவிருக்கிறது என்று தீர்மானித்து விட்டனர். என்ன கெடுதல் சம்பவிக்குமோ என்று ஊர் முழுவதும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு கதிகலங்கி நின்றது. ஒவ்வொருவனும் அவன் அவனுக்குத் தோன்றியபடியெல்லாம் மூளையைச் செலவிட்டுப் பயத்தை வளர்த்துக் கொண்டான்.

"இந்தமாதிரி ஏதாவது தீங்கு நேரக் கூடும் என்று எங்களுக்கு அப்பொழுதே தெரியும். பயமாகப் பயந்து கொண்டிருந்தோம். வருஷத்துக்கு ஒரு நாள் சிவனுக்குப் பூஜையும் அபிஷேகமும் செய்தால் ஆயிற்றா? வருஷம் முந்நூற்று அறுபத்து நான்கு நாட்களும் பட்டினி போட்டு விட்டு, ஒரு சொட்டு நீருக்கு ஆண்டவனை ஆலாய்ப் பறக்க விட்டால், இப்படி அடாத காரியத்தைச் செய்தால் இப்படித்தான் படுவார்கள். எத்தனைதான் கடவுளாயிருந்தாலும், பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு அல்லவா?" என்று கிராமத்துப் பெண்கள் கூடிப் பேசிக் கொண்டனர்.

பரசுராம சாஸ்திரியினால் எத்தனைதான் தம்மையடக்கியும் பேசாமல் இருக்க முடியவில்லை. "கலியுகம் அப்பா கலியுகம்! எத்தனை நாட்கள்தான் கலிவராமல் காத்திருப்பான்? நம் பழையனூர் சிவனாயிருக்கக் கொண்டு, இவ்வளவு நாட்கள் கலிபுருஷனை அடக்கி வைத்திருந்தார்; தமது பெருமையைப் போற்றிப் பாதுகாத்து வந்தார். மற்ற ஊர்த் தெய்வங்களாயிருந்தால், எப்பொழுதோ தன் பெருமையை இழந்திருக்கும்!" என்றார்; அதோடு தமது சொல்லுக்குப் பலம் தேடும் வகையில் பத்துப் பன்னிரண்டு ஊர்ச் சிவன்களின் சக்தியையும் அது குன்றிப் போன வரலாற்றையும் கதையாகவே கூறினார்.

கேதாரேசுவர சர்மாவுக்குப் பரசுராம சாஸ்திரியின் பேச்சைக் கேட்கக் கேட்கக் கோயில் குருக்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. குற்றமனைத்தையும் கோயில் குருக்கள் மீது சுமத்தினார். "அந்தப் பாவிப் பயல் ஏதோ தவறு செய்திருக்கிறான். இல்லாவிட்டால் இத்தனை நாட்களும் இல்லாமல் நம் ஊர்ச் சிவன் இப்படி மகிமை இழந்து சக்தி குன்றிப் போவாரா?" என்றார்.



இப்படியாகத் தெளிவாகப் புலனாகாத, ஊர் பெயர் தெரியாத பேராபத்து பயங்கரமான பல உருவங்கள் தரித்து, பழையனூர் மக்களின் மனத்திலே பெருங் கிலியை உண்டு பண்ணியது. இனி யாருக்காவது பைத்தியம் பிடிக்கக் கூடும் என்ற நம்பிக்கை கூட எல்லோருக்கும் போய்விட்டது.

அத்தனை பேர்களில் யாராவது ஒருவர் தன் நம்பிக்கையை இழக்காமல் இருந்தார் என்றால், அது நீலமணி ஆச்சாரி ஒருவனே தான்.

மாபெரும் தெய்வமான சிவனின் மாகாத்மியத்திலே அவன் அசையாத அழியாத நம்பிக்கை பூண்டிருந்தான்.

"யாரோ ஒருவனுக்குக் கட்டாயம் பைத்தியம் பிடித்திருக்கிறது. அவன் யார் என்பதைத்தான் ஜனங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. புராதனமான பழையனூர்ப் பித்தனின் பெருமைக்கு எந்நாளும் பங்கம் ஏற்பட முடியாது; ஏற்படக் கூடாது. ஏற்பட

விடவும் கூடாது!" என்று அவன் அழுத்தந் திருத்தமாக அடித்துச் சொல்லி வந்தான்.

தீக்குண்டத்தைப் போலத் தகிக்கும் பயங்கரமான வெய்யில். நட்ட நடுப்பகல். அதுவும் வைகாசி மாதத்து மத்தியான வேளை. அனலைக் கக்கிக் கொண்டு ஆதவன் பவனி வந்து கொண்டிருந்தான். வீட்டுக் கதவுகளும் ஜன்னல்களும் அடைத்து சாத்தப்பட்டிருந்தன. நீலமணி ஆச்சாரி மட்டும் படைபதைக்கும் அந்த வெய்யிலில், தெருத் தெருவாக, சந்து சந்தாக, பொந்து பொந்தாகச் சுற்றிக் கொண்டிருந்தான், வைத்தியத்தைத் தேடிக் கண்டு பிடித்து விட்டே மறு காரியம் பார்ப்பது என்ற முனைப்பில்.

அவன் மூக்கு ரத்தமாகச் சிவந்திருந்தது. கண்கள் செந்தணலைக் கக்கிக் கொண்டிருந்தன. ஆயினும் வீடு வீடாக ஏறி அவன் 'வைத்தியக்காரன் எங்கே போனான்?' என்று தேடிக் கொண்டேயிருந்தான். "வைத்தியத்தைத் தேடிக் கண்டு பிடிப்பேன். பித்தன், பிறைசூடி, எம்பெருமான் பரமசிவன், அவன் பெருமைக்குப் பங்கம் நேர ஒரு நாளும் விடமாட்டேன்!" என்று அவன் வாய் ஓயாமல் கூறிக் கொண்டிருந்தான்.

இப்படியாகப் பழையனூர் வாசிகள் நிம்மதியாக நீண்ட மூச்சு விட்டார்கள்; வரவிருந்த பேராபத்து நீங்கியதாகப் பெருமூச்சு விட்டார்கள். நீலமணி ஆச்சாரியைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் மனத்துள் மகாதேவனின் மகிமையைப் பாராட்டிப் போற்றினார்கள். 'ஆண்டவனே! உன் பெருமையே பெருமை! உன் மகிமையே மகிமை!' என்று சொல்லாத வாய்கள் இடையாது. நீலமணி ஆச்சாரி பித்தனின் பெருங் குழாத்தில் ஒருவனாகச் சேர்ந்து ஊரின் பெருமையைக் காப்பாற்றினான்; பழையனூர்ப் பித்தனின் பேரருளுக்குப் பாத்திரமானான்.

[ஆதாரம்: 'பனபுலி'ன் வங்காளிக் கதை]

எங்கும் இந்தி

சவிதா

" பையப் புகுத்துவோம் இந்தி—நீவிர்
பயப்பட வேண்டாம் இத்தன்மை வீணில்
ஐயப் படாம லிருங்கள்—நாட்டில்
அத்துமீறி யிந்தி வந்திடா " தென்றார்.

" சொன்னசொல் இப்போ மறந்தார்—மிகத்
துரிதமா யிந்தியைத் திணிக்க முனைந்தார்
" என்னதான் வேலையென் றாலும்—அஃது
இந்தி படித்தார்க்கே கிடைத்திடு " மென்றார்.

அரசாங்க அலுவல் நிலைக்க—நாமே
அறிசிக்கிர மிந்தி கற்றிடல் வேண்டும்
பிரசாரம் செய்திடல் வேண்டும்—இன்றேல்
பிழைப்பிலே மண்விழும் என்ப தறிவீர்.

நாணயம் தன்னிலே இந்தி!—நம்
நாட்டு நடப்புக்கள் பலவுமே இந்தி!
மாணவர் ஓங்கிட இந்தி—தமிழ்
வானொலிச் செய்தி யதனிலும் இந்தி!

தந்திக்கும் வந்தது இந்தி!—தபால்
தலைகளிலு மன்றிக் கார்டிலும் இந்தி!
எந்தெந்த வகையிலும் இந்தி!—இதனை
எடுத்துச்சொன் னால்ஆபத் தென்பதோர் வதந்தி.

உலகியல் தன்னை யறிய—இந்தி
உதவுமோ? தென்னிதின் யோசித் துணர்வீர்
இலகிடும் விஞ்ஞான முதலாம்—கலைகள்
இந்தியில் கற்பதும் எளிதாமோ! அறைவீர்.

ஆங்கில மொழியை விடுத்து—அதன்
அந்தஸ்தை யிந்திக் களித்திட லழகோ?
பாங்கின் உயர்ந்தநம் நாட்டை—பொல்லாப்
படுகுழி தன்னிலே வீழ்த்திட லாமோ?



அவன் வயிறு நிறைய சாப்பிடுகிறான், ஆனாலும்...

குடும்பத்தினருக்கு வயிறு நிரம்ப சாப்பாடு போடுவதால் மட்டும் பயனில்லை. நீங்கள் அவர்களுக்குப் போடுவது சரிவிகிதத்தில் போஷாக்குள்ள உணவாயும் இருக்கவேண்டும்.

ஆரோக்கியமும், சக்தியுமுள்ளவர்களாயிருப்பதற்கு நமது உணவில், விடமின்கள், மினரல்கள், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்புச்சத்து முதலிய பலவித போஷாக்குகள் அடங்கியிருக்கவேண்டும். இவைகளில் கொழுப்புச் சத்துகூட மிகவும் முக்கியமானது.

வனஸ்பதி—தூய்மையான கொழுப்புச்சத்து


நமது தினசரி உணவில் குறைந்தது 3 அவுன்ஸ் கொழுப்புச் சத்து சேர்ந்திருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள். இந்த அளவு கொழுப்புச்சத்து சுலபமாகவும் குறைந்த செலவிலும் கிடைக்க நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உணவுப் பொருள்களை வனஸ்பதியில் சமையல் செய்வதே. பரிசுத்தமான தாவர எண்ணெயை விஞ்ஞான முறையில் பக்குவப்படுத்தப்பட்டதே வனஸ்பதி. அதனுள் அது அதிக ருசியும், போஷாக்கும் அளிப்பதாக இருக்கிறது. மேலும், வனஸ்பதி சாதாரண எண்ணெய்களைவிட சிறந்தது. ஒவ்வொரு அவுன்ஸ் வனஸ்பதியிலும் 700 இன்டர்நேஷனல் யூனிட் விடமின் 'ஏ' சேர்க்கப்பட்டுள்ளது. விடமின் 'ஏ', கண்களும் சருமமும் ஆரோக்கியமாக இருக்கவும், தேகம் வளர்ச்சியடையவும் மிகவும் அத்யாவசியமானது.

வனஸ்பதி நவீனமானதும், சுத்தமானதுமான பாக்டரிகளில், விஞ்ஞான முறைப்படி சிறந்த நிலையில் தயாரிக்கப்படுகிறது. ஆகவே அதை வாங்கும்போது, அது மிகவும் போஷாக்கு வாய்ந்ததென்றும் சுத்தமானதென்றும் நீங்கள் பூரணமாக நம்பலாம்.

வனஸ்பதி

இல்லாளுக்கு வரப்பிரசாதம்!

தி வனஸ்பதி மானுபாக்சரேர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா



74. நேயர்கள் கடிதம்

நேயர்கள் எழுதும் கடிதங்களைக் குவியல் என்றும் குன்று என்றும் இது காறும் சொல்லி வந்தேன். குவியலும் குன்றும் நகருமா? நேயர்களின் கடிதங்களோ வந்த வண்ணமிருக்கின்றனவே! புதிய தொடர் எண்கள் கொடுக்கத் தொடங்கிய பிறகு இன்றோடு (6-9-58) 21 வாரங்களாகின்றன. 700-க்கும் அதிகமான கடிதங்கள் இது வரையில் வந்துள்ளன. பதில்களை எழுதுவதில் தாமதமாவது தவிர்க்க முடியாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நோயின் நிலைமை குறித்து உடனே பதில் எழுத வேண்டிய சில கடிதங்களுக்குச் சலுகை காட்டிப் பதில் எழுதியுள்ளேன். இவற்றுக்கு "ஸ்பெஷல்" என்ற குறிப்பின் கீழ் நெம்பரிட்டுப் பதில்களை எழுதிவருகிறேன். இந்த நெம்பரும் 106 ஆகிவிட்டது. மொத்தக் கடிதங்கள் எத்தனை......கல்கியின் நேயர் என்று மாத்திரமின்றி-வேறு வகையிலும் அன்பைப் பொழியும் நேயர்களின் கடிதங்கள் எத்தனை......கட்டுரைகளாக விஷயதானங்கள் எழுதியாக வேண்டியவை எத்தனை...அப்பப்பா...! வீட்டிலுள்ள ஔபாஸனத்துக்குச் சிறிது சுகவீனம் என்றாலுங்கூடக் கவனிக்க ஒழிவில்லை. ஆகவே கிருஹத்திலும் அதிருப்தி. என்ன செய்வது? ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு ஓடிவிடலாமென்றால்...கொடுப்பவர் யார்? ஏன் நாமே எடுத்துக் கொள்ளலாமென்றால்? தடுப்பார் இல்லை. ஆனால் இந்தச் செல்லப் பெட்டியை எடுத்துக் கொண்டுவர ஒரு சிஷ்யன் வேணுமே! அதற்கு யாராவது ஒருவன் குதிரும் வரையில்...? தற்போதைய ஆசிரமத்தில் இருந்துதானாக வேணும். ஆகவே நேயர்களின் கடிதங்களில் சிலவற்றின் ஸாராம்சங்களை மற்றுமுள்ள நேயர்களுக்குத் தெரிவித்து விடுகிறேன்.

முதலாவதாக இலங்கை அன்பர்களைப் பற்றி எழுதவேணும். இன்டர் நாஷனல் போஸ்டல் கூப்பன் என்பதை 20 செண்டு கொடுத்து, தபாலாபீஸிலேயே வாங்கித் தங்கள் கடிதங்களுடன் உள்ளடக்கம் செய்து அனுப்பியவருக்கெல்லாம் பதில் எழுதியுள்ளேன். ஏன்? மலேயா — சிங்கப்பூர் — பிஜி என்னும் இடங்களிலிருந்தெல்லாம் எழுதிய நண்பர்களுக்கும் இவ்விதம் பதில் அனுப்பப்பட்டது. அப்படி இருக்க இலங்கை நேயர்களில் பலர், 'அது என்ன கூப்பன்? எனக்குக் கிடைக்கவில்லை' என்று எழுதுகின்றனர். இதற்கென்ன செய்வது? சிங்கப்பூர் மலேயா-முதலான இடங்களிலுள்ளவருக்கெல்லாம் தெரிவிக்கும் மருந்துகளைத் தயாரித்து உபயோகித்துச் சுகம்பெறச் சாத்தியமாகிறது. ஆயினும் இலங்கை நேயர்கள் மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்பவர் மூலம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யும்படி பணிக்கின்றனர். அவ்விதம் அனுப்புவதில் என்னென்னமோ சிரமங்கள் இருப்பதாகச் சொல்லி அனுப்பக் கூடியவர் அனுப்ப மறுக்கின்றனர். இதனால் இலங்கை நேயர்களுக்கு முழு அளவில் உதவிபுரிய முடியாத நிலையில் இருக்கிறேன். இதற்காக என் மன வருத்தத்தை எழுதி முடியாது.

பதில் எழுதத் தாமதமாகிவிட்டதென்றாலும், திரும்புகால் கடிதத்துக்குக் கூலியனுப்பியவருக்கெல்லாம் பதில் எழுதியிருக்கிறேன். ஏறத்தாழ ஆகஸ்டு 10-ந் தேதியன்று கிடைத்த கடிதங்கள் வரையில் [இன்றையதினமான 6-9-58] பதில் எழுதியாயிற்று. மற்றையவைகளோ...? கூடுமான வரையில் துரிதப்படுத்தி எழுதியனுப்புவதற்கு முயற்சி செய்கிறேன்.

கடிதம் 326-ல் பெங்களூர் சகோதரி எழுதுகிறார். விஷயம் ரொம்பவும் முக்கியம். சகோதரிகள் யாவரும் கவனிக்கவும்......

"......என் மகளுக்குப் பிரஸவமாகி நாற்பது நாளாகின்றன. இரண்டாவது குழந்தை. முதல் குழந்தைக்கு ஏழு வயது. தலைச்சன் பிரஸவத்தில் குழந்தைக்குத் தாய்ப் பாலே இருக்கவில்லை. இந்த இரண்டாவது பிரஸவமான பின் தாங்கள்......எழுதியிருந்த பிரகாரம் முருங்கைக் கீரை, சுரைக்காய், உள்ளிப் பூண்டு இவைகளை ஆகாரத்தில் சேர்த்து வருவதில் குழந்தைக்குத் தாய்ப்பால் குறிப்பிடத்தக்க அளவில் விருத்தியாயிருப்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க ஆவலுள்ளவளாய் இருக்கிறேன். இனி வேகவைத்த பச்சைப்பயறும் சேர்க்கலாமென்றிருக்கிறேன்."

இது நல்ல சமயத்தில் நமக்குக் கிடைத்துள்ள ஒரு மிக மிக நற்செய்தி அல்லவா?

வீராசிகளான குழந்தைகளின் சார்பாகவும் கைக்குழந்தைக்காரிகளான சகோதரிகளின் சார்பாகவும்—எனது நன்றியினை இச் சகோதரிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளின் பால் டப்பிகளைப் பதுக்கி வைத்துக் கறுப்பு மார்க்கட்டில் கொள்ளை விலைக்கு விற்கும் வியாபார நேயர்களே, எச்சரிக்கை! உங்கள் சரக்குகள் கேட்பாரற்றுக் கிடக்க வேண்டிய நாள் விரைவில் வரும்.

கடிதம் 351-ல் மதுரைச் சகோதரி எழுதுவதைப் பாருங்கள்.

"ஸ்ரீஹரி அண்ணு அவர்களுக்கு..." என்று ஆரம்பிக்கிருள் அன்புச் சகோதரி. இந்த அண்ணு என்ன அங்க மணி எடுக்கப்போகிருன்? வெறுஞ்சுக்கு.

"இச் சகோதரியின் கணவருக்கு 45 வயது. பத்து வருஷங்களாக இவருக்கு ஆஸ்துமா. இதற்காக டான்ஸில் ஆபரேஷன் செய்தனர். மூக்கில் இரண்டு தரம் பங்சர் பண்ணியிருக்கிருர்கள்."

"அடிக்கடி ஊசிகள்......கடைசியாக அமிலெக் என்னும் மாத்திரைகளைச் சாப்பிட்டுச் சிறிது சமனம் பெறுவார். "அந்த மாத்திரையைத்தினம் ஒன்று சாப்பிட்டால்தான் ஆஸ்த்மா இல்லாமல் இருந்தது. மீறிஞல் ஊசி போடும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் வேலைக்கும் போய் வந்தார்......உடம்பு எடை குறைய ஆரம்பித்தது.........டாக்டர்களெல்லாம் எங்களால் முடிந்ததைச் செய்து விட்டோம். ஆனல் நீங்கள் அடிக்கடி அமிலெக் மாத்திரை சாப்பிடுவது நல்லது அல்ல என்ருர்கள்."

"மற்றச் சகோதரிகள் எழுதுகிருற் போல்தான், மாத்திரையும் சாப்பிடக் கூடாது—ஊசி போட்டுக் கொள்ளவும் முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபின் என் கணவரே நாட்டு மருந்து சாப்பிட்டுப் பார்ப்போம் என்று என்னைத் தயார் செய்யச் சொல்லிச் சாப்பிட்டு வருகிருர்......தாங்கள் கல்கியில்......வறட்டு இருமலுக்குச் சொல்லி இருந்த சூர்ணம் அதிமதுரம் கடுக்காய், மிளகு இவைகளைத் தேனுடன் சேர்த்து ஒருநாளைக்கு மூன்று நான்கு வேளை சாப்பிட்டு வருகிருர். இருமல் வரும் போது ஓமத்தை, ஆடாதோடை இலை, புதினு, இஞ்சி, எலுமிச்சை, இந்துப்பு, இந்தச் சாறுகளில் ஊற வைத்துக் காய வைத்த ஓமத்தை ஆஸ்த்மா வரும்போல் இருந்தால் சாப்பிட்டு வருகிருர்...... சென்ற இருபது நாட்களாக அமிலெக் என்னும் மாத்திரை சாப்பிடுவதில்லை.

இப்போது......உடம்பு தெம்பாய் இருக்கிறது. நாட்டு வைத்தியக் கட்டுரைக்கு அநேக நமஸ்காரம்..." என்று இப்படி எழுதுகிருர். அதுமட்டுமா? "எங்கள் உறவினர்களுக்கும் இந்த மருந்துகளைப் பற்றிச் சொல்லி வருகிறேன்...." என்றும் எழுதுகிருர். இவ்வித சகோதரிகளுக்கு ஓரிருவர் இருந்தால் போதுமே!

வைத்திய வசதி போதவில்லை, எட்டவில்லை என்றெல்லாம் அலுத்துச் சலிப்புறும் பெரியோர்கள் இவ்விதம் ஊருக்கொரு சகோதரியைப் பெற ஏன் முயற்சி செய்யக் கூடாது?

கடிதம் 411ல் கோவைச் சகோதரி எழுதுவதையும் கேளுங்கள். தமது சகோதரனுடைய கடுமையான காமாலைக்கு என்ன செய்யலாமென்று இவர் கேட்டிருந்தார். கோவை இலையைக் கொடுக்கும்படி தெரிவித்திருந்தேன். இவ் விஷயத்தைக் கட்டுரை 66ல் "ஸ்ரீரங்கம் சகோதரி..." என்று எழுதியுள்ளேன். தமது சகோதரனின் சிகிச்சைக்காகக் கோவைக்குச் சென்று—முன் தெரிவித்த மருந்தைச் செய்து கொடுத்துக் குணத்தை எழுதுகிருர்.

"ஸ்ரீமான் ஸ்ரீஹரி அண்ணு அவர்களுக்கு, தங்கை பத்மாஸினி நன்றி தெரிவித்து எழுதும் கடிதம்.


"அண்ணு! தங்கள் சொற்படியே எனது தம்பிக்கு மஞ்சள் காமாலைக்கு மருந்து செய்து கொடுத்தேன். என்ன விந்தை! டாக்டர்கள் தற்போதைக்குக் குணமாகாது, நீண்ட நாட்கள் மருந்து சாப்பிட்டு வரவேண்டும் என்று கூறி விட்டனர். ஆனல் தங்கள் கடிதம் கண்டதும் அதில் கண்டிருந்த மருந்தை (அதாவது, கோவை இலையை அரைத்து ஒரு அவுன்ஸ் தயிரில் தினம் காலை ஒரு வேளையாக மூன்று தினங்கள் மட்டும்) தயார் செய்து கொடுக்க ஆரம்பித்தேன். நாலு வேளை மருந்துதான். மிகவும் அற்புதமாக வேலை செய்து விட்டது. இப்போது என் தம்பி பரிபூரண சுகமாய் இருக்கிருன். அரிய மருந்தை அருளிச் செய்த அண்ணுவுக்கு என் அன்புகலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்......"

இதற்குப் பிறகு உள்ளூரில் மூவருக்கு இதே வியாதியில் இதே மருந்தை உபயோகித்துப் பலன் கண்டுள்ளதையும் தெரிவிக்க விரும்புகிறேன். வைத்திய வசதிகளைப் பெருக்க முயலும் திட்டங்களை தீட்டும் பெரியோர்கள் கவனத்துக்கு இவ் விவரம் எட்டுமாஞல், அதுவே போதும். (தொடரும்)





Brown & Polson
CUSTARD
FAMILY SIZE





வெளி வேஷம்

ஜ. சாமிநாதன்

அது கல்யாண வீடு. அதுவும் பெரிய வீட்டுக் கல்யாணம். வீட்டின் முன்னே கவியுகத் தேர்களான கார்கள் வரிசையாக நின்றிருந்தன. பளபளக்கும் காரின் மேலே தங்கள் உருவம் பெரிதும்சின்னதுமாய்,நீளமும் குட்டையுமாய்த் தோன்றி ஜாலம் செய்வதை ரசித்துக் கொண்டிருந்தனர் சிறுவர்கள். பெண்மணிகள் பட்டுப் புடவை சரசரக்கக் கல்யாண மண்டபத்தில் நுழைந்து கொண்டிருந்தார்கள். நாகசுரக்காரனும் பாண்டுக்காரனும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவர் சங்கீதத்தை மற்றவர் சங்கீதம் விழுங்க முயன்று ஒரு சங்கீத மொத்தையை உருவாக்கிக் கொண்டிருந்தனர். மணப் பெண்ணின் தம்பி தானும் போட்டோவில் விழ வேண்டுமென்பதற்காக அவளுக்கும் மாப்பிள்ளைக்கும் நடுவே அடிக்கடி தலையை நீட்டி மூசுமூசென்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். தோமுன் பிலிம் இல்லாத காமிராவை வைத்துக் கொண்டு எல்லோரையும் படம் எடுத்துத் தீர்த்துக் கொண்டிருந்தான்.

ருக்மிணி எல்லாவற்றையும் பெருமையுடன் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அக்கா பெண்ணுக்குத்தான் அன்றைக்குக் கல்யாணம். எத்தனை பேர் என்று சிரித்துச் சிரித்து வரவேற்றுக்கொண்டிருப்பது? வாயும் வயிறும் அவளுக்கு வற்றி விட்டன. அதனால் ஓரிடத்தில் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள்.

"அம்மா! நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று கூவிக் கொண்டே ஓடி வந்தாள் நீலா.

"ஆமாமடி கண்ணு! சாப்பிட்டாயோ?"

நீலா உதட்டைப் பிதுக்கினாள்.

உம்மென்று தனியே தொங்கி வழிந்த சதைகளைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு எழுந்தாள் ருக்மிணி. குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றாள். அவளைக் கண்டவுடன் பரபரவென்று பயபக்தியுடன் தலைவாழை இலையைப் போட்டனர் வேலைக்காரர்கள்.

"எனக்கு இப்போது சாப்பாடு வேண்டாம். குழந்தை நீலாவுக்குப் பசிக்கிறதாம்..." என்று கூறி நீலாவை உட்கார வைத்து அவள் அருகே உட்கார்ந்து கொண்டாள் ருக்மிணி. நீலாவுக்கு மூன்று வயது. ருக்மிணியினுடைய கடைசிப் பெண். அவ்வளவு பெரிய இலையில் போட்டதைக் கூட எட்டி எடுக்கத் தெரியாத இளங் கரங்கள் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டன. ருக்மிணி நீலாவுக்கு எடுத்து ஊட்டினாள். அவள் மனம் துன்பம் சூழாத உறவினர்களைக் கண்டு நிரம்பிக் கிடந்தது.

"அம்மா! அதோ பார்!" என்று கையைக் காண்பித்தாள் நீலா. அந்தப் பெண்ணுக்கு இரண்டு மூன்று வயதிருக்கும். நீலாவைப் போலவே ஒரு பெண் குழந்தை மிரண்ட விழிகளும் தயங்கிய நடையுமாய் அங்கே வந்து கொண்டிருந்தாள்.

"அம்மா! அவள் என் மாதிரியே இல்லே?"

"ஆமாம்..." என்றாள் ருக்மிணி.

"ஏ பொண்ணு. இங்கே வா!"

அள்ளிப் பிடித்த சோற்றுடனே அவளை அழைத்தது நீலாவின் பிஞ்சுக் கரம். அந்தப் பெண் மெல்ல அங்கே வந்தாள். அதே மருட்சி, தயக்கம்.

"நீ சாப்பிட்டாயோ?" என்று ஆவலுடன் அவளைக் கேட்டாள் நீலா. அவள் இல்லையென்று தலையாட்டினாள். பட்டுப் புடவையும், வைரக் கம்மலும் இருந்த அந்த இடத்திலே அவ்வளவு சீக்கிரமாகப் பேசிவிடும் அளவுக்கு அந்தப் பெண் குழந்தைக்குப் பயம் தெளிந்து விடவில்லை.

"என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள். நீயும் சாப்பிடு!"

உணவு பரிமாறுபவரின் கண்கள் உமிழ்ந்த பயங்கரம் அந்தக் குழந்தையின் கண்களில் நீரை வரவழைத்து விட்டது.

"என்ன? ஏன் அவளை அப்படிப் பார்க்கிறாய்? அவளுக்கும் இலை போடு.." என்று நீலா கூறியவுடன் அலறிப் புடைத்துக் கொண்டு அவர் நீலாவின் அருகே ஒரு இலையைப் போட்டார்.

"உம்...நீ உட்கார், பயப்படாதே!"

இதையெல்லாம் கவனித்த ருக்மிணிக்குக் கோபம் கோபமாக வந்தது. தங்கள் அந்தஸ்து என்ன, கௌரவம் என்ன? இப்படியா கிழிசல் பூப்போட்ட பாவாடையை அணிந்திருக்கும் அந்தக் குழந்தையைத் தன்னுடைய அருமை மகளுடன் உட்கார வைப்பது?

அம்மா என்ன சொல்லப் போகிறாள் என்பதைப் புரிந்துகொண்ட மகள், "அம்மா! அவள் என்கூடவே சாப்பிடட்டும், அம்மா!" என்று கெஞ்சினாள். அவள் கண்கள் கெஞ்சியதைப் பார்த்துச் சரியென்று தலை ஆட்டிவிட்டாள் ருக்மிணி. அந்தக் குழந்தைக் கண்களுக்குத்தான் எவ்வளவு சக்தி!

"அவளுக்குப் பிசைந்து கொள்ளவே தெரியவில்லையே!" என்று கூறி நீலா அந்த இலைப் பக்கமாக நகர்ந்து, தானே பிசைந்து

விட ஆரம்பித்தாள். அவளும் குழந்தை தானே, அவளால் மட்டும் முடியுமா?

வேண்டாவெறுப்பாக அந்தக் குழந்தைக்கும் பிசைந்து விட்டாள் ருக்மிணி. பிசைந்து விட்ட கை, பழக்கதோஷம் காரணமாகச் சின்னஞ்சிறு பவள வாயிலே ஊட்டியும் விட்டது. ஊட்டிவிட்ட பின்னர்தான் அவள் நீலா இல்லை என்ற நினைவு வந்தது. அந்தக் குழந்தை சிரித்தது. ருக்மிணியும் இலேசாகச் சிரித்தாள். என்ன இருந்தாலும் அவளும் ஒரு தாய் அல்லவா?

"குழந்தை! உன் பேரென்ன?"

"காமாட்சி!"

நீலாவுக்கு ஒரே ஆச்சரியம்! ஏதடா நம்முடைய அம்மா கூட அவளுடன் பேசி விட்டாளே என்று!

"என்னுடைய பேர் நீலா!" என்று தன்னைக் காமாட்சிக்கு அறிமுகம் செய்து கொண்டாள் நீலா. "நீ ஏன் கிழிசல் பாவாடை கட்டிக் கொண்டிருக்கே?" என்று கேட்டாள் நீலா.

குழந்தை கேள்வியைக் கேட்டு விட்டது. உலகம்தான் பதில் சொல்ல வேண்டும்!



"எனக்குத் தெரியாது!"

"நான் மாத்திரம் பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டிருக்கிறேனே, ஏன்?"

காமாட்சி கையிரண்டையும் விரித்து அதுவும் தனக்குத் தெரியாது என்று உதட்டைப் பிதுக்கினாள். தன் அன்னை மீது கையைப் போட்டு 'ஏனம்மா?' என்று கேட்டாள் நீலா. ருக்மிணியால் என்ன சொல்ல முடியும்? அந்தஸ்து வித்தியாசம் நினைப்பூட்டப் பட்டவுடனே நீலாவை அழைத்துக் கொண்டு கைகழுவிவிடப் புறப்பட்டாள் ருக்மிணி. அவளுடைய மனமாறுதலின் மாயஜாலத்தை உணராத குழந்தை காமாட்சி நீலாவைப் பின்தொடர்ந்தாள். நீலாவின் கையை ருக்மிணி கழுவி விட்டவுடன் இன்னொரு கரமும் நீண்டது.

"மாமி! எனக்கும் கழுவி விடுங்கள்!"

இயந்திரம் போலக் காமாட்சிக்கும் கழுவி விட்டாள் ருக்மிணி. இரண்டு குழந்தைகளும் ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டு கல்யாண மண்டபத்துக்குள் சென்றனர். இருவர் முகத்திலும்தான் எத்தனை மலர்ச்சி!

'ஏ குழந்தை, இங்கே வா!' என்று காமாட்சியை அழைத்து மடியின் மீது உட்கார வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது ருக்மிணிக்கு. அப்பொழுது இருவரும் அவள் அருகில் வந்து நின்றனர்.

"நீலா! இவளுக்குப் பாவாடை கொடுக்கலாமா?" என்று கேட்டாள் ருக்மிணி. நீலா மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள். "இந்த மாமி நல்ல மாமி!" என்று ருக்மிணியுடன் இழைந்தது அந்தக் குழந்தை.

அதற்குள் அங்கே வந்தார் ராமமூர்த்தி—ருக்மிணியின் கணவர்.

"என்ன இது? கல்யாணம் நடக்கும் இடத்தில் பெரிய மனிதர்களெல்லாம் வந்திருக்கிறார்கள். நீ என்னடாவென்றால் இந்தக் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருக்கிறாயே! யாராவது பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள்" என்று இரைந்தார்.

இதைக் கேட்க, காமாட்சி கூம்பிப்போனாள். ருக்மிணிக்கும் பழைய சொரூபம் வந்துவிட்டது. 'சீ, வெட்கக் கேடு! நம் நிலைமை என்ன, இந்த ஏழைக் குழந்தையின் நிலை என்ன! இதை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கிறோமே!' என்ற 'சுயநினைவு' உள்ளத்தில் பாய்ந்து விட்டது. விடுவிடென்று நீலாவைப் பிடித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் ருக்மிணி. போகும்போது அந்தச் சின்னஞ்சிறு குழந்தையைத் திரும்பிப் பார்க்காமல் அவளால் செல்ல முடியவில்லை. அப்போது காமாட்சியின் கண்கள் நீரில் அமிழ்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். பிஞ்சு நெஞ்சத்து உணர்ச்சிகள் கண்களில் நீரைப் பிழிந்து கொட்டி விருந்தன. ஏன் இப்படி? யார் குழந்தையோ, இதைப் பார்த்து ஏன் மனம் இப்படிச் சங்கடப்படுகிறது? ருக்மிணி இளகிய தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு கல்யாண மண்டபத்துக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள். நிகழ்ச்சி மாற்றங்களில் தொடர்பே இல்லாததைக் கண்டு விக்கித்துப் போய் ஒன்றும் விளங்காமல் அவளிடம் உட்கார்ந்தாள் நீலா.

"ருக்மிணி அத்தை! 'குரூப் போட்டோ'வில் நீ இல்லாவிட்டால் நன்றாக இருக்காது!" என்று கையில் 'காமிரா'வை வைத்துக் கொண்டு அவளை இழுக்காத குறையாய் அழைத்துக்கொண்டு போனான் சங்கர். அவன் ருக்மிணியின் அண்ணா பிள்ளை. மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் அவர், அளவுக்கு மீறிச் சேர்த்து வைத்துவிடக் கூடாதே என்ற கவலை அவனுக்கு. அதனால் ஊதாரி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தான் அவன். நீலாவுக்கு, தான் புகைப்படத்தில் நன்றாக விழ வேண்டுமே என்று கொள்ளை ஆசை. அடிக்கடி தலையை நிமிர்த்திக் கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு ஞாபகம். 'இதோ இருங்கள் வந்து விட்டேன்!' என்று கூவிக் கொண்டு ஓடினாள். ஓடிப் போய்த் தூணைக் கட்டிக் கொண்டு நின்றிருந்த காமாட்சியை அழைத்து வந்து தன்னருகே நிறுத்திக் கொண்டாள்.

'என்னடி காரியம் இது' என்று ருக்மிணி கிசுகிசுக்கும் குரலில் எவ்வளவு அதிகமாய் ஆத்திரத்தைக் குழைக்க முடியுமோ, அவ்


தந்தை செப்பனிடுவார்


குழந்தைக்கு தகப்பனார் ஒரு தச்சர், சரித்திர ஆசிரியர், கணித சாஸ்திரி — உண்மையிலேயே தகப்பனாருக்குச் சமமாக யாருமே கிடையாது. உங்கள் குழந்தைகள் உங்களிடமும், அவர்களை நன்கு கவனிப்பதற்கு வேண்டிய உங்கள் சாமர்த்தியத்திலும், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கை நியாயமானதா? அவர்களது எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டம் வகுத்து விட்டீர்களா? ஒழுங்காக லைப் இன்ஷ்யூரன்ஸ் மூலம் சிறு தொகைகளைச் சேமித்து நீங்கள் நிச்சயப் படுத்திக் கொள்ளலாம். அவை பெரும் பலன்களைத் தருகின்றன.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா


தாங்க முடியாத வலியா?
ஸாரிடான்
சாப்பிட்டால் போதும்
Saridon
குழந்தைகளுக்கு


நரஸூ
காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
சேலம் & சென்னை

வளவு ஆத்திரத்துடன் முணுமுணுத்தாள். அங்கிருந்த எல்லாரும் முகத்தைச் சுளுக்கிக் கொண்டார்கள்.

போட்டோ எடுத்து முடிந்தது.

"என்னடி உனக்கு அதிகப்பிரசங்கித் தனம்?" என்று இரைந்தாள் ருக்மிணி.

அதற்குப் பிறகு காமாட்சியை அங்கு காணவே காணோம்.

★

இரவு வந்தது.

மறுபடியும் நீலாவுக்குச் சாதம் ஊட்ட அழைத்துக் கொண்டு போனாள் ருக்மிணி. பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே 'மாமி' என்ற குரல் கேட்டது. காமாட்சி கையில் வெண்கலக் கிண்ணம் ஒன்றை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

"மாமி! எனக்கும் சாதம் பிசைந்து தாருங்கள்."

கையில் கிண்ணத்தை வைத்துக் கொண்டு சூதும் வாதும் அற்ற துல்லிய தெய்வமாய் அங்கே நின்று கொண்டிருந்தாள் காமாட்சி. "மாமி! நீங்களே இப்போதும் எனக்குச் சாதம் ஊட்டுங்கள்."

ருக்மிணியின் அடிவயிற்றைப் பிசைந் தெடுத்தது இந்தக் குரல்.

"என்ன பெண்ணே, உனக்கு அம்மா இல்லையா?" என்று கேட்டாள் ருக்மிணி.

"இல்லே. ரெண்டு மாசம் முன்னாடி செத்துப் போயிட்டா!"

ருக்மிணிக்கு இதைக் கேட்டவுடன் 'சொரேர்' என்றுவிட்டது.

"மாமி! இந்தாருங்கள், கிண்ணம்!"

"உனக்கு அப்பா?"

"ஓ. இருக்காரே! கார்த்தாலே இங்கே வந்தா. யாரோ எங்க அப்பாவை நீ இங்கே வரக் கூடாது என்று திட்டினா. அதனாலே பக்கத்துச் சத்திரத்திலே இருக்கார். நான் நாளைக் கார்த்தாலே ஊருக்குப் போயிடுவேன். —அப்பா சொன்னார். இன்னிக்கு மாத்திரம் சாதம் போடுங்கள்."

தாயை இழந்து தவிக்கும் அந்தக் குழந்தை தான் காலையில் பிசைந்து போட்டதை மறவாமல் மறுபடியும் அண்டி வருகிறதே என்று உள்ளம் உருகி அவளை அழைத்துத் தன் அருகில் அமர்த்திக் கொண்டாள் ருக்மிணி.


அப்போது 'காமாட்சி, காமாட்சி' என்று அழைத்துக் கொண்டே ஒருவர் வந்தார்.

அவரைக் கண்டவுடன் ருக்மிணியின் முகம் வெறுப்புக் குளமாகியது. வெம்மையை வாரி வீசின கண்கள்.

"இவர்தான் என் அப்பா, மாமி! அப்பா, இந்த மாமிதான் கார்த்தாலே...."

பாதி பேசிக் கொண்டிருந்த காமாட்சி ருக்மிணியின் முகத்தைக் கண்டு பயந்து விட்டாள். மெல்லத் தயங்கித் தயங்கி எழுந்து நடந்து தந்தையுடன் ஒட்டிக் கொண்டாள். இருவரும் சென்று விட்டார்கள்.

அவர்தான் ருக்மிணியின் இளைய தம்பி வேணு. தன் தம்பியின் மகள்தான் காமாட்சி



திரு கிருஷ்ணமூர்த்தி, திருமதி பூமா ஆகியோரின் புதல்வியான குமாரி ராதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்ற மாதம் 20ந் தேதி வாணி கலா மண்டபத்தில் நடைபெற்றது. சென்னை நகர மேயர் திருமதி தாரா செரியன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். திருவாளப்புத்தூர் திரு டி. கே. சுவாமிநாத பிள்ளையின் சிஷ்யையான குமாரி ராதாவின் நடனத்தைப் புரொபஸர் சாம்ப மூர்த்தி பாராட்டித் தமது ஆசிகளைக் கூறி வாழ்த்தினார்.

என்று அவனுக்கு முன்னமேயே தெரிந்திருந் தால் அவளைத் தன்னிடம் நெருங்கக்கூட விட்டிருக்க மாட்டாள் ருக்மிணி.

வேணு அப்படியொன்றும் தவறு செய்து நீண்டா தவனாகப் போய்விடவில்லை. ருக்மிணி யின் கணவர் செய்து வைத்த வேலையில், மேலிடத்தார் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளவே அதை ராஜிநாமாச் செய்து விட்டான். அதற்குப் பிறகு அவனுக்கு வேறு வேலை கிடைக்கவில்லை. அவனைத் தன் தம்பி என்று சொல்லிக் கொள்ளவே ருக் மிணிக்கு வெட்கமாக இருந்தது. வாழ்க்கை யில் பெருமையுடன் உயர்நிலையில் அமர்ந் திருக்கும் தன் வீட்டில் அவன் சாதாரண மனிதனாகச் சுற்றிச் சுற்றி வருவது தன் அந் தஸ்தைப் பாதிக்கும் என்பது அவள் நினைப்பு. அதனால் ருக்மிணிக்கும் வேணுவுக்கும் கடும் சண்டை ஏற்பட்டு ஒரு வருஷத்துக்கு முன் னால் பரம விரோதிகளாகி விட்டார்கள். வேணுவைத் தரத்தாத தோஷமாய்ச் சொல் லால் அடித்து அவன் மனத்தை ஒடித்து விட் டாள் ருக்மிணி. அவன் குடும்பத்துடன் கிராமத்துக்குச் சென்று விட்டான்.

அந்த வேணு இப்போது கல்யாணத்துக்கு வந்திருக்கிறான்.

'வேணுவின் மனைவி பங்கஜம் இறந்து போய் விட்டாளாமே!'

தான் ஆடாவிட்டாலும் சதை ஆடியது. மனசு சங்கடப்படத்தான் செய்தது.

பாவம், அந்தக்குழந்தை காமாட்சி! அவளை நினைத்துப் பார்க்க ருக்மிணிக்கு வருத்த

மாகத்தான் இருந்தது. வேணுவின் நினைவில் மூழ்கிக் கிடந்தவள் உடலைச் சிலுப்பி அந்த எண்ணத்தை உதறினாள். 'நாலு பேர்கள் வருகிற நேரம். இப்படி உட்கார்ந்திருக்கலாமா?' என்று முகத்தில் சிரிப்புடன் வந்திருந்தவர்களோடு பேசத் தொடங்கினாள். ஆனால் மனம் என்னவோ காமாட்சியிடமே இருந்தது. அவள் கண்கள் கூறும் ஏக்கம் நெஞ்சில் உறைத்தது. ஆயிரம் பேர்கள் கூடிக் குழுமியுள்ள அந்தப் பெரிய கட்டடத்திலே ஒரு தாயைத் தேடி வந்த அந்தக் குழந்தையின் மனநிலை மனத்தில் பதிய ஆரம்பித்தது. உயர்ந்த மலையில் பனி படருவது போல் சிறிது உயர்ந்த மனத்தில் பரிவு படர்ந்தது.

அந்தக் குழந்தை மறுபடியும் அங்கே வந்தது. உறவுமுறை தெரிந்து கொண்டு விட்டதால் 'அத்தே!' என்று அழைத்தது. உலகமெல்லாம் துறந்துவிட்ட அநாதை துக்கத்தால் நெஞ்சடைத்து அவளிடம் தஞ்சமடைய வந்தது. ருக்மிணி தன்னை மறந்தாள். வெறும் மனுஷியானாள்.

சிறிது தூரத்தில் கிழிசல் துண்டும் அழுக்கு வேஷ்டியும் கட்டிக்கொண்டு தூணில் சாய்ந்து உட்கார்ந்திருக்கும் தன் தம்பியைப் பார்த்தாள். உடனே 'என் கண்ணே' என்று காமாட்சியைத் தூக்கிக் கொண்டாள். கொல்லைப்புறமாக ஓடிச் சென்று அவளைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். மனத்தில் இன்னும் அந்தஸ்துப் பாசம் ஒட்டிக் கொண்டிருந்ததால் எல்லோர் எதிரிலும் வெறும் மனுஷியாக அவளுக்கு விருப்பமில்லை.

தாயைக் கட்டியணைத்தது போல நிறைவடைந்தது குழந்தை. "என் கண்ணல்ல, அப்பாவிடம் போய்ச் சாதம் போடச் சொல்லிச் சாப்பிடு" என்று ருக்மிணி சொன்னவுடன் கையில் கிண்ணத்துடன் உள்ளே ஓடினாள் காமாட்சி.

அடுத்தகணம் 'ஐயோ, அத்தே!' என்று கூக்குரல் கேட்டது. வழிநடையில் ஈரமாக இருந்ததால் காமாட்சி வழுக்கி விழுந்து நெற்றியில் ரத்தம் கொப்புளித்துக் கொண்டிருந்தது. 'கண்ணே, காமாட்சி' என்று ஓடி அவளை வாரி எடுத்தாள் ருக்மிணி. பட்டுப் புடவையைத் தலையில் அழுக்கினாள். எல்லாரும் 'என்ன என்ன?' என்று ஓடி வந்தார்கள். குழந்தை காமாட்சியைத் தன் மடியில் கிடத்திக் கொண்டாள் ருக்மிணி. வேணுவும் அப்போது அலறிப் போய் ஓடி வந்தான். தன் மகள் தலையில் அடியுடன் ருக்மிணியின் மடியில் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அலறி விட்டான் வேணு.

காமாட்சி கையில் இருந்த கிண்ணம் உருண்டு ஓடித் தூரப் போய் விழுந்திருந்தது. காமாட்சி மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தாள். ருக்மிணி கண்ணீர் வழியத் தன்னை மடியில் போட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

"அத்தை! பசிக்கிறதே!"

இதைக் கேட்டவுடன் ருக்மிணி குலுங்கிக் குலுங்கி அழுதாள். திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சி மாறுதலினால் அவள் மனம் குழம்பிப் போய்விட்டது அவள் நினைவுக்கு வந்தது. குழந்தை அப்பொழுதே பசி என்று சொல்லியதே என்று நினைத்துப் பதறினாள். தூரக் கிடந்த கிண்ணத்தை எடுத்து வரச் சொன்னாள். பிறகு கவளம் கவளமாகக் காமாட்சிக்கு ஊட்டினாள்.

"அத்தே! இனிமேல் நீயே எனக்குச் சாதம்...ஊட்டு...அப்பா ஊட்டினால் எனக்குப் பிடிக்கவில்லை."

குழந்தை அழுதது.

ருக்மிணி உள்ளே பொங்கி வந்த துக்கத்துடன் எதிரே நின்றிருந்த தன் தம்பியைப் பார்த்தாள். அவன் ஏழை என்ற உணர்வு மாய்ந்து போய் விட்டது.

"என்னடா நிற்கிறாய்? நான் உனக்கு ஆகாதவளாகப் போய் விட்டேனா? குழந்தையைச் சாகடித்து விடுவாய் போல் இருக்கிறதே. நாளைக்கே என்னோடு வந்துவிடுங்கள்" என்று கூவினாள் ருக்மிணி.

உடலில் பெருகிய வியர்வையில் அவள் வெளி வேஷம் கலைந்து விட்டது. அவள் வெறும் மனுஷியாகி விட்டாள்.

மனிதன் அந்தஸ்து வேஷமும், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாச வேஷமும் போட்டுக் கொண்டிருக்கும் போது அவனிடம் உள்ள அன்பு அந்த வெளி வேஷத்தால் மறைக்கப் பட்டு விடுகிறது. அந்த வேஷம் கலைந்து விடுகிற போது, மனிதனாக அவன் மாறும்போது, வேஷத்தால் மறைத்து வைக்கப்பட்ட அன்பு ஒளி பிரகாசமாய் வீசுகிறது. ருக்மிணியின் வெளி வேஷம் கலைந்தபின் ஒளிர்வதும் அந்த அன்புதானே!


வாழ்க




திரு எ. எம் ஜகதீஷ் சந்திரன் பி. ஏ. பி. டி.க்கும் செள. சுப்புலக்ஷ்மிக்கும் கணபதிபாளையத்தில் திருமணம் நடந்தது.




ஸ்ரீ டி. விஜயராகவனின் சகோதரர் திரு பத்மநாபனுக்கும் திரு வி. எஸ். ராகவனின் புதல்வி சாந்தகல்யாணிக்கும் சென்னையில் விவாகம் நடந்தேறியது.



திரு வி எஸ். ராகவனின் புதல்வி செள பத்மாவதிக்கும் திரு ஆர். சாரங்கபாணிக்கும் சென்னையில் திருமணம் நடந்தது.



பெங்களூர் யோகாச்சார்யா ஸ்ரீ சுந்தரம் அவர்களின் புதல்வர் திரு சுந்தரராமனுக்கும் செள. மாலதிக்கும் கும்பகோணத்தில் கல்யாணம் நடந்தேறியது.




நாக்பூர் திரு கே. வைத்தியநாதஸ்வாமி அய்யரின் புதல்வி செள. ஜோதிக்கும் திரு கோபாலனுக்கும் விவாகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.



பைக்காரா பவர் ஹவுஸைச் சேர்ந்த திரு என். எஸ் வைத்தியநாதய்யரின் புதல்வி செள லலிதாவுக்கும் திரு ஏ. வி. கிருஷ்ணனுக்கும் திருமணம் நடந்தது.

மணமக்கள்




மன்னார்குடி எஸ். ராமஸ்வாமி அய்யர் குமாரர் புதல்வன் திரு ராகவனுக்கும் திருச்சானூர் செள. பங்கஜத்துக்கும் திருமணம் நடந்தேறியது.



பம்பாய் வால்டாஸ் லிமிடெட் கம்பெனியைச் சேர்ந்த திரு வெங்கடராமனுக்கும் செள. சாருமதிக்கும் பம்பாயில் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.



பம்பாய் அணுசக்தி காரியாலயத்தைச் சேர்ந்த திரு எஸ். சந்தான கோபாலனுக்கும் செள நாகலக்ஷ்மிக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.




திரு வி. தியாகராஜனின் புதல்வி செள. கமலாவுக்கும் திரு ராமநாதனுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது



கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த திரு எம். வி. அப்பாண்டைக்கும் செள. சரோஜாவுக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.




தினமணி காரியாலயத்தைச் சேர்ந்த திரு சுப்பிரமணியத்தின் சகோதரி செள காமாக்ஷிக்கும் திரு தியாகராஜனுக்கும் சென்னையில் திருமணம் நடந்தது.



நீதியும் கடமையும்

ஸ்ரீவத்ஸன்



"பாஸ்கர்! இன்றுடன் உனக்கு இருபது வயது பூர்த்தியாகிறது. சென்னை ராஜ்யத்திலேயே பி. ஏ. பரீட்சையில் முதலாவதாகத் தேறி விட்டாய். மத்திய சர்க்காரின் உபகாரச் சம்பளம் பெற்று இப்போது மூன்று வருட காலம் அமெரிக்காவில் மேல் படிப்புக்காக நாளைய தினம் விமானம் மூலம் புறப்படப் போகிறாய். நீ அடைந்து வரும் உன்னத ஸ்திதியைக் கண்டு என் மனம் பூரிப்படைகிறது. நீ அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் அரசாங்கம் உனக்குப் பெரிய பெரிய பதவிகளை அளிக்கும். நாட்டுக்கொரு புதல்வனாக நீ சீரும் சிறப்புடனும் வாழ்வாய். ஆனால் இந்தப் படுபாவி அவைகளையெல்லாம் பார்த்துக் கண்டு களிப்பதற்கு உயிருடன் இருக்க மாட்டேன்."

பெரியவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது.

அவர் குரலில் நடுக்கம் இருந்தது.

"அப்பா! ஏன் அழுகிறீர்கள்? என்னை வளர்த்து ஆளாக்கிய தங்களது சுகம்தான் எனக்கு முக்கியம். என்னைப் பிரிய உங்களுக்கு வருத்தமாக இருந்தால் நான் அமெரிக்கா போகவில்லை. உங்கள் அருகிலிருந்து பணிவிடை செய்கிறேன். அது போதும். என் சுகம் எனக்கு முக்கியமில்லை. நீங்கள் தான் அப்பா எனக்கு எல்லாம்."—பாஸ்கரன் அவர் முன் மண்டியிட்டுச் சொன்னான்.

"இல்லை, பாஸ்கர்! நீ அமெரிக்கா செல்லத்தான் வேண்டும். உன் வளர்ச்சியில் என் சுயநலம் முட்டுக்கட்டை போட முடியாது. நீ வரும் வரையில் நான் உயிருடன் இருப்பது சந்தேகம். ஆதலால்..."

"அப்பா, என்றும் இல்லாமல் இன்று உங்கள் குரலில் ஏன் இவ்வளவு நடுக்கம், படபடப்பு? உடல் கூடத் தடுமாறுகிறதே!"

"கேள், பாஸ்கர், கேள்! கேட்டுவிட்டு நீ நடுங்காதே. அதிர்ச்சியடையாதே. நான் உன்னிடம் சொல்லாவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து தவறிய கயவன் ஆவேன். ஆதலால் இப்போது ஒன்றுவிடாமல் உன்னிடம் சொல்கிறேன்."

பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்களில் ஆத்மநாதனும் ஒருவர். மனத்தாலும் பிறருக்குத் தீங்கு நினையாத உத்தமர் அவர். சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர். பிரபல கிரிமினல் வக்கீல். பீஸ் பணம் என்று யாரையும் கேட்டதில்லை. அவர்களாகக் கொடுத்தால் உண்டு. ஏழைகள் வக்காலத்து அவருக்கு அதிகம்.

அவர்கள் வீட்டுச் சமையல்காரர்தான் வேம்பு. வக்கீல் குடும்பத்திலேயே இரண்டு தலைமுறையாக, அவர்கள் குடும்பம்தான் சமையல் செய்து வந்தார்கள். ஆத்மநாதனுக்கும் வேம்புவுக்கும் சம வயது. ஆத்மநாதன் குடும்பத்தை நன்கு அறிந்தவர்களுக்குத்தான் வேம்பு ஆத்மநாதன் வீட்டுச் சமையல்காரர் என்று தெரியுமே ஒழிய மற்றவர்கள் வேம்புவை வக்கீலின் தம்பி என்றே நினைப்பார்கள்.

இருவருக்கும் மணமாகி விட்டது. வேம்பு வக்கீல் வீட்டிலேயே இரண்டாம் கட்டில் குடியிருந்தார்.

இருவருக்கும் குழந்தை பிறந்தது.

வேம்புவின் பிள்ளைக்கு ஐந்து வயதான போது வேம்புவின் மனைவி இறந்துவிட்டாள். அது முதல் அவன் வக்கீலின் பிள்ளையுடனே வளர்த்து வரப்பட்டான். இருவரும் இண்டர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் அவர்கள் குடும்பத்தில் விதி சிரித்து விளையாட ஆரம்பித்தது.

ஆத்மநாதன் ஒரு முக்கிய காரியமாகத் தில்லி வரை சென்றிருந்தார்.

அவர் ஊருக்குப் போன மூன்றாவது தினம். மத்தியானம் மணி இரண்டு.

வேம்பு அயர்ந்து சமையல் அறையில் தூங்கிக் கொண்டிருந்தார். வக்கீலின் இரண்டாவது பிள்ளை மிக்க ஒரு குறும்புக்காரன். வேம்புவிடம் சதா விஷமம் செய்தபடியே இருப்பான். வயது ஐந்துதான் இருக்கும்.

அன்று அவன் சமையல் உள்ளே வந்த போது வேம்பு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். உடனே வந்த சிறுவன் வெளியே போய் ஒரு கட்டெறும்பைப் பிடித்துக் கொண்டு உள்ளே வந்தான். அதை மெதுவாக வேம்புவின் காதிலும் விட்டுவிட்டான். வேம்பு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தார். அவனை மிரட்டி வைப்பதற்காக அடிப்பதுபோல் கையை ஓங்கினார்.

"அடிப்பியோ? உன்னைக் கொன்று விடுவேன்" என்றான் சிறுவன். வேம்புவுக்குப் போதாத காலம்.

"அடிச்சால் என்னவாம்?" என்று ஓங்கி அடித்து விட்டார். அவன் விலகிக் கொண்டான். அவ்வளவுதான். அடி அவன் மேபாட்டில் விழுந்து அவன் சுருண்டு விழுந்தான். அதே சமயம் "அட பாவி! குழந்தையைக் கொன்று விட்டாயே?" என்று அலறியபடி வந்தாள் வக்கீலின் மனைவி.

வேம்பு திகைத்து விட்டார்.

வக்கீலின் மனைவியும் அவரும் அழுதார்கள்.

தில்லிக்குத் தந்தி பறந்தது. வக்கீல் வர இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

மூன்றே நாட்களில் போலீஸ் புலன் விசாரணை முடிவடைந்து ஸப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குற்றப் பத்திரிகை தாக்கலாகி விட்டது. வேம்பு போலீஸ் லாக்கப்பில் தள்ளப்பட்டார்.

வக்கீல் திரும்பி வந்தார். விஷயங்களைக் கேள்விப்பட்டார். ஆனால் சுகத்தையும் துக்கத்தையும் ஒன்றாகக் கருதக்கூடிய மனப் பக்குவம் அடைந்து விட்டவர் அவர். வேம்புவைக் குற்றம் சொல்லி என்ன பயன்? விதியின் விளையாட்டு! என்று தமது மனைவிக்கு அவர் எவ்வளவோ ஆறுதல் சொன்னார்.

வழக்கு செஷன்ஸ் விசாரணைக்கு வந்தது. வேம்பு ஏழையானதால் சர்க்காரே, அதாவது கோர்ட்டாரே அவருக்காக ஆஜராகி வாதாட ஒரு வக்கீலை நியமித்தார்கள். அவர் ஆஜராகச் சௌகரியப் படவில்லை என்று சொல்லி விட்டார். இப்படி இரண்டு மூன்று பேர்கள் மறுத்து விட்டதால் யாருமே ஆஜராகவில்லை. ஆத்மநாதனின் மனம் புண்படுமே என்று ஒருவரும் ஆஜராகவில்லை.



வேம்புவைக் கொண்டு வந்து கூட்டில் நிறுத்தினார்கள். குற்றப் பத்திரிகை படிக்கப் பட்டது. வேம்புவுக்காகத் தாம் ஆஜராகி வழக்காடப் போவதாக வக்கீல் ஆத்மநாதன் கோர்ட்டாரிடம் தெரிவித்தார்.

நீதிபதி திகைத்தார்.

வேம்பு பிரமித்தார்.

வழக்கு நடந்து முடிவடைந்து விட்டது. வேம்புவுக்கு விடுதலை கிடைத்து விட்டது. ஓடி வந்தார் வேம்பு வீட்டுக்கு.

"அண்ணா! உங்கள் மனம் எவ்வளவு விசாலமானது!" என்று கூறி அவர் காலில் விழுந்து விழுந்து எழுந்தார் வேம்பு.

மறு நாள் பொழுது விடிந்தது. ஆனால் வேம்புவும் அவர் மகனும் வீட்டில் இல்லை. வேம்பு இருந்த இடத்தில் ஒரு கடிதம் மட்டும் இருந்தது.

"அண்ணா! இனி உங்கள் முகத்தில் என்றென்றும் விழிக்க மாட்டேன். எனக்காக வாதாடி விடுதலை வாங்கிக் கொடுத்ததை விட என்னை நீங்கள் அணு அணுவாகச் சித்திரவதை செய்திருந்தால் எவ்வளவோ சந்தோஷமாக நான் ஏற்றுக் கொண்டிருப்பேன். உங்களை மறப்பது என்பது எனக்குச் சிறிது கவனம் இல்லாமல் போனால்தான். என்னை மறக்காதீர்கள் என்று உங்களிடம் நான் வேண்டிக் கொள்ளத் தேவையில்லை. என்னை மறக்க மாட்டீர்கள். ஏன், தெரியுமா? உங்கள் குழந்தையைக் கொன்றவன் என்ற காரணத்தால் இல்லை. சிறு வயது முதல் என்னிடம் தாங்கள் காட்டி வந்த சகோதர பாசம் என்னதான் முயன்றாலும் எப்படி அண்ணா என்னை மறக்கச் செய்யும்?"

பல வருடங்கள் கடந்தன. வக்கீல் ஆத்மநாதனும் அவர் மனைவியும் இறந்து விட்டார்கள். கைகையாகச் சம்பாதித்த அவர், குடும்பத்துக்கென்று எதையுமே சேர்த்து வைக்கவில்லை. தான தருமங்கள் அதிகம் செய்தார் அவர் பிள்ளை சந்திரசேகரன் ஒரு ஆபீசில் மானேஜராக இருந்தான். கலியாணமாகி அவனுக்கு மூன்று வயதில் அப்போது ஒரு பிள்ளையும் இருந்தது. சந்திரசேகரன் எப்போதுமே கொஞ்சம் முன் கோபக்காரன். ஆனால் தங்கமான மனம். முன் கோபம் வந்தால் அவனுக்கு என்ன செய்கிறோம் என்றே தெரியாது.

சந்திரசேகரனின் குழந்தை மூன்றும் பிராயத்தை அடைந்தபோது தான் விதி இரண்டாவது தடவையாகச் சிரித்தது.

அவனது அந்தக் குடும்பத்தைப் பார்த்து.

சந்திரசேகரனின் ஆபீசில் முருகையன் என்று ஒருவேலைக்காரன். அவன் சரிவர வேலை செய்வதும் இல்லை. ஒழுப்பபடுவதும் இல்லை. மேல் ஆபீசுக்கு எழுதி அவனை வேறு ஊருக்கு மாற்றி விட்டான் சந்திரசேகரன். அதனால் கோபம் கொண்ட முருகையன் ஆபீசிலேயே அவனை வாயில் வந்தபடி திட்டினான். நடு ஆபீசில் பலர் முன்னிலையில் அவனால் தன் கௌரவமே பாழாகி விடுவதை உணர்ந்த சந்திரசேகரனுக்கு முன் கோபம் வந்து விட்டது. அவ்வளவுதான்; மேஜை மேல் பென்சில் சீவ வைத்திருந்த பேனாக் கத்தியைக் கோபத்தில் அவன் மீது வீசி எறிந்து விட்டான். முருகையன் இறந்து விட்டான்.

சந்திரசேகரன் பேரில் கொலை வழக்கு பதிவாகி, அவன் பேரில் வழக்கு நடந்தது. அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

அவன் சிறை சென்ற மூன்றாவது நாள் அவன் மனைவியும் குழந்தையும் உள்ள கிராமத்துக்கு ஒருவர் வந்தார். அவன் வீட்டை விசாரித்துக் கொண்டு வந்தார்.

"நீங்கள் யார்?" என்று கேட்டாள் சந்திரசேகரனின் மனைவி.

"அம்மா! என்னை உங்களுக்குத் தெரியாது. உங்கள் கணவரும் நானும் ஒன்றாய்ப் படித்து வளர்ந்தவர்கள். என் தகப்பனார்

உங்கள் கணவர் வீட்டில் சமையல் செய்து வந்தார். ஒரு தடவை சந்திரசேகரனின் தம்பி ஒருவனை என் அப்பா அடித்து விட்டதால் அது பொட்டில் பட்டு அவன் இறந்து விட்டான். என் தகப்பனார் பேரில் ஏற்பட்ட கொலை வழக்கில் அவன் தகப்பனாரே ஆஜராகி விடுதலை வாங்கித் தந்தார். காலப் போக்கில் எங்கெங்கேயோ போய் விட்டோம். நேற்று பத்திரிகையில் சந்திரசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதைப் பார்த்து ஓடோடியும் வந்தேன். எவ்வளவு உன்னதமாக இருந்த குடும்பம், தெரியுமா? அது இப்படி நொடித்துப் போவதில் என் மனம் அடையும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. நீங்கள் மட்டும் தைரியமாக இருந்து குழந்தைக்கு ஒன்றுமே கவலை தெரியாதபடி வளர்த்து வரவேண்டும். மாதாமாதம் ஒரு லீவு நாளில் வந்து உங்களைப் பார்த்து விட்டுச் செலவுக்குப் பணம் கொடுத்து விட்டுப் போகிறேன். என் வீட்டில் தற்சமயம் சில அசௌகரியங்கள் இருப்பதால் நான் தங்களையும் குழந்தையையும் என் வீட்டுக்கே அழைத்துப் போக முடியவில்லை. விரைவில் உங்களை என் வீட்டுக்கு அழைத்துப் போய் விடுவேன். தைரியமாக இருங்கள்'' என்றார்.

''என் கணவர் உங்களைப் பற்றி வீட்டில் அடிக்கடி சொல்லுவார். உங்கள் கட்டளைப்படி நடக்கிறேன். ஆதரவான குடும்பத்துக்குத் தீனபந்துவாக வந்திருக்கிறீர்கள்!''

அதன் பின் மூன்று மாதங்கள் சென்றன. அவர் மாதாமாதம் வருவதும் பணம் கொடுப்பதுமாக இருந்தார்.



நான்காவது மாதம் அவர் பணத்துடன் வந்தார். அன்றிரவு அவர் ஊருக்குப் புறப்பட வேண்டும், திடீரென்று மாரடைப்பு உண்டாகிச் சந்திரசேகரனின் மனைவி இறந்து விட்டாள். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. குழந்தையுடன் ஊர் திரும்பினார். அவர் மனைவி மிகவும் நல்லவள். நீண்ட நாட்கள் அவருக்குக் குழந்தைகள் இல்லை. அந்தக் குழந்தையை அவர்கள் தங்கள் குழந்தையாகவே பாவித்து வந்தார்கள்.

ஓராண்டு சென்றது. அவர் மனைவி கர்ப்பமானாள். எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தார்கள். ஆனால் ஆண்டவன் வேறு விதமாக நினைத்தார். பிரசவத்தில் அவள் இறந்து விட்டாள். மகிழ்ச்சிக் கடல் துயரக் கடலாகியது.

அவ்வளவுதான்; அதன் பிறகு அவர் அந்தக் குழந்தையை வளர்க்கும் பணியில் மறுமணம் செய்து கொள்ளவில்லை. அவனுக்குத் தன் பெற்றோர் யார் என்ற விஷயமே தெரியாதபடி அவர் நடந்து வந்தார்.

அவனை வளர்த்து ஆளாக்கி விட்டார். அவன் சென்னை ராஜ்யத்திலேயே பி. ஏ. யில் முதலாவதாகத் தேறி விட்டான். நாளைய தினமே அவன் மேல்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் செல்கிறான்.''

அவர் கதையை நிறுத்தினர்.

'' அப்படியானால், அப்பா!......'' பாஸ்கர் ஆரம்பித்தான்.


'' ஆமாம், பாஸ்கர்! நீதான் அந்தப் பிள்ளை. நான்தான் அந்த மனிதன். பாஸ்கர்! முக்கியமான விஷயத்தை இது வரையில் மறைத்து விட்டேன். இப்போது அதையும் சொல்லி விடப் போகிறேன்.

''என் தகப்பனார் செய்த கொலையில் உன் தாத்தா வாதாடி அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். ஆனால் உன் அப்பா பேரில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டபோது அவரை விடுதலை செய்ய என்னால் முடியவில்லை. கைதிக் கூண்டில் உன் தகப்பனார். நீதிபதி பீடத்தில் நான். என்ன விசித்திரமான சந்திப்பு, பார்த்தாயா! என்னை அவர் அடையாளம் கண்டு கொண்டிருக்கமுடியாது. கோர்ட்டில் அவர் தலையை நிமிர்ந்து பார்த்தால்தானே? தவிரவும் அநேக வருடங்கள் ஆகிவிட்டதால் அவர் அடையாளம் கண்டு கொண்டிருக்க முடியாது. ஆனால் நானே அவர் வாக்குமூலத்திலிருந்தும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜிகளிலிருந்தும் உன் தகப்பனார்தான் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர் என்னைத் தெரிந்து கொள்ளாதது மிகவும் நல்லது. தெரிந்து கொண்டிருந்தால் ஆயுள் தண்டனை என்று எழுதிய பேனாவால் ஏன் விடுதலை என்று எழுதியிருக்கக் கூடாது என்று வருத்தப்பட்டிருப்பார். நான் செய் நன்றி மறந்த பாவி என்று திட்டியிருப்பார்.

'' ஆனால், அதெல்லாம் எப்படி முடியும், பாஸ்கர்! கன்றுக்காகத் தன் அருமை மகனையே தேர்க் காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழன், தான் செய்த தீர்ப்பு அநியாயமாகக் கோவலனுடைய உயிரையே பறித்து விட்டதை அறிந்த மறுநிமிடமே தன் உயிரைப் போக்கிக் கொண்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் இவர்கள் பரம்பரையின் வழிவந்தவர்கள் நீதிபதிகள்.

'' உன் தகப்பனாருக்குத் தண்டனை விதிக்காமல் நான் விடுதலைத் தீர்ப்பு வழங்கியிருந்தால் அருமையாக, பல நூற்றாண்டு காலமாக வெகு ஜாக்கிரதையாக, பாதுகாக்கப்பட்ட நீதியைக் குழி தோண்டிப் புதைத்த பாதகச் செயலைச் செய்தவன் ஆகியிருப்பேன். தீர்ப்பு கூறிய மூன்றாவது நாள் விடுமுறையானதால் உன் தாயாரைத் தேடி வந்தேன்.

''தீர்ப்பு கூறிய நீதிபதி நான்தான் என்று அவள் தெரிந்து கொண்டிருந்தால் என்னை அவள் வீட்டுப் படியேறவே விட்டிருக்க மாட்டாள். உங்கள் குடும்பத்துக்கு நான் உதவி அளிக்கவும் அவள் இடம் கொடுத்திருக்க மாட்டாள். அதனால்தான் நான் யார் என்று சொல்லாமல் மறைத்தேன். அதற்காகவே உன்னையும் அவளையும் என் வீட்டுக்கே கொண்டு போய் வைத்துக் கொள்ளத் தயங்கினேன். ஆனால் உன் தாயார் இறந்ததில் எனக்கு வருத்தம்தான் என்றாலும் ஒரு விதத்தில் நல்லதாயிற்று. இல்லாவிட்



ரூர்க்கி தென்னிந்தியர் கலைக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு துவக்க விழா ஆகஸ்டு மாதம் 17ந் தேதி மத்திய கட்டட ஆராய்ச்சி நிலையக் கலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வைபவத்தின்போது தில்லியைச் சேர்ந்த குமாரி திரிபுரசுந்தரி கோஷ்டியாரின் இன்னிசைக் கச்சேரி வெகு விமரிசையாக நடந்தது.

உடையுடனும் தாடி மீசையுடனும் ஒரு கிழவர் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தபடியே நின்றுகொண்டு பாஸ்கரனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் யார்? அவர் கண்களில் நீர் வழிவானேன்?

ஆயுட்காலத் தண்டனையை அனுபவித்து முடித்த சந்திரசேகரன் ஒரு மாதத்துக்கு முன்புதான் விடுதலை அடைந்தான்.

கிராமத்துக்குப் போய்ப் பார்த்தபோது அவன் மனைவி இறந்து விட்டதையும் அவன் பிள்ளையை யாரோ எடுத்துப் போனதையும் எவரோ சொல்லக் கேட்டு அவன் அப்படியே இடிந்து விட்டான். அவன் பைத்தியம் பிடித்தாற் போல் ஊர் ஊராகச் சுற்றினான். கடைசியில் சென்னைக்கு வந்தான். அன்று எதேச்சையாக அவன் மாம்பலத்தில் ஒரு பெரிய வீட்டின் திண்ணையில் வந்து படுத்தபோது இரவு மணி ஒன்பது ஆகியிருந்தது.

அப்போது உள்ளே கேட்ட பேச்சுக் குரலில் அவன் கவனம் சென்றது. கூர்ந்து கேட்டான். அது முழுக்க முழுக்க அவன் குடும்ப விஷயம். எட்டிப் பார்த்தான். தன் நண்பனும் அவன் எதிரில் ஒரு இளைஞனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தன் மகனைப் பார்த்துப் பெருமிதம் அடைந்தான். தன் மகனை ஆளாக்கி விட்ட தன் நண்பன் பட்ட பாட்டையும் அவனுடைய பெருந்தன்மையையும் தியாக மனப்பான்மையையும் கேட்டபோது அவனால் விம்மி விம்மி அழாமல் இருக்க முடியவில்லை. ஆனால் விம்மல் சத்தத்தைக் கேட்டு அவர்கள் வந்து விட்டால் என்ன செய்வது என்று விம்மலை அடக்கிப் பார்த்தும் அது பீறிட்டுக் கொண்டு கிளம்பியது. அதனால் வாயில் துணியை அடைத்துக் கொண்டபடியே அந்த நள்ளிரவில் எங்கேயோ கிளம்பி விட்டான்.

டால் அவன் கொஞ்ச காலத்தில் தான் யார் என்று தெரிந்து கொண்டிருப்பான். உன்னை வளர்த்திருக்கவும் முடியாது.

ஆரம்பத்திலேயே நான்தான் உன் தகப்பனுக்கு ஆயுள் தண்டனை அளித்த நீதிபதி என்று தெரிந்து விட்டால் நீ என்னைப் பற்றிக் கேவலமான அவசர முடிவுக்கு வந்துவிடப் போகிறாயோ என்றுதான் சொல்லவில்லை. அதனால்தான் என் தகப்பனார் என்றுகூடச் சொல்லாமல் கதை பூராவும் வேம்பு என்றே சொன்னேன்.

"பாஸ்கர், ஒரு விஷயம் பாக்கி விடாமல் கேட்டு விட்டாய். நாளையதினம் நீ புறப்பட வேண்டும். இப்போதே நள்ளிரவு ஆகிவிட்டது. தூங்கலாம் வா" என்றார் அவர்.

"அப்பா! நீங்கள் தெய்வப் பிறவி. இனியும் நான் உங்களை அப்பா என்று அழைக்க அனுமதிப்பீர்களா?"

"பாஸ்கர், நீ என் அருமை மகன். நான் உன் அன்புள்ள தந்தை. மரண தேவனைத் தவிர வேறு யாருமே நம்மைப் பிரிக்க முடியாது" என்று அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

அதேசமயம் யாரோ விம்மி விம்மி அழுவது தெரிந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார்கள். யாரும் இல்லை. வரவர விம்மல் தேய்ந்து கொண்டே வந்தது. அவசர அவசரமாக ஓடி வந்து வாசல் கதவைத் திறந்து விளக்குப் போட்டுப் பார்த்தார்கள். தொலை தூரத்தில் யாரோ வேகமாக ஓடிப் போவது மங்கலாக அந்த நிலவொளியில் தெரிந்தது.

மறுநாள் காலை. மணி சுமார் ஒன்பது இருக்கும். பாஸ்கரனும் பெரியவரும் விமான நிலையத்துக்கு வந்து விட்டார்கள். பாஸ்கரனை வழியனுப்ப நண்பர்கள் வந்திருந்தார்கள். விமானம் புறப்பட ஒரு நிமிடமே இருந்தது. அந்தக் கூட்டத்தில் ஒரு மூலையில் கந்தல்

கடைசித் தடவையாகத் தன் அருமை மகனை ஒரு தடவை பார்த்து விடத் துடித்து விடியற் காலையிலேயே விமானத் தளத்துக்கு வந்து ஒருவர் கண்ணிலும் படாமல் விமானம் புறப்படும் வரை இருந்தான். ஆனால் அவனால் வந்த கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

'என் தந்தை செய்த நல்லுபகாரமே என் பிள்ளைக்கு நல்வாழ்வை அளித்திருக்கிறது. இல்லாவிட்டால் இந்தக் குற்றவாளியின் பிள்ளையை யார் சீண்டுவார்கள்? இனி அவன் அருகில் போனால் எனது கொடுமை அவனுக்குத் திரும்பி விடும். வேண்டாம்! என் தந்தையின் குணமே அவனுக்கு நல்ல வழி காட்டட்டும்' என்று எண்ணிக் கொண்டே அந்த விடுதலை பெற்ற கைதி சந்திரசேகரன் நடந்தான்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

உங்கள் கேசத்திற்கு உரிய பராமரிப்பை அளிக்கிறீர்களா ?

இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றாடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

இராஸ்மிக்

பர்ப்யூம்ட்

கோகனட் ஹேர் ஆயில்



ECH. 3·50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

உத்தமமானவள் பெண்!
உதாசீனம் செய்யப்பட்டாலோ — கண்ணகி!



ஒரு குடும்பப் பெண்மணிதான் . . . எனினும் அவள் விருப்பத்திற்கு நாங்கள் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறோம். அவளுடைய சொன்னைகள், மனோபாவம், யோசனைகள் முதலியவற்றை நாங்கள் ஒருக்காலும் புறக்கணிப்பதில்லை — வீட்டின் தேவைகளை நன்கு உணர்ந்தவள் அவளன்றி வேறு யார்? அவளுக்குத் தேவைப்படுவது என்ன என்பதை உள்ளபடி உணரும் பொருட்டு நாடெங்கும் விற்பனைத் துறை ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வருகிறோம். பார்க்கப்போனால், பெரும்பாலான ஹிந்துஸ்தான் லீவர் சரக்குகளின் தரம் எவ்வளவு உயர்வாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பவள் குடும்பப் பெண்மணிதான்.

சரக்குகளின் மேன்மை மாறாமலிருக்கும் பொருட்டு, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றின் தராதரத்தைப் பரிசோதித்து சீர்திருத்துகிறோம். ஆகவே உங்கள் தேவைக்கேற்ப, தரத்திலுயர்ந்த சரக்குகளை உங்கள் வீட்டிற்குக் கிடைக்கும்படி செய்து வருகிறோம்.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 16-50 TM